
Registered as a Newspaper

தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன் வாட்டர் பம்புகளை வாங்குங்கள்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

PUMP with Standard Accessories Select



NEWTONE Water Pumps

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ தை மீ 22 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ. ஆகிர் பிறை 26 (04-02-1989) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 42

# வறுமை ஒழிப்புத் திட்டம்: நிதி உதவ பின்னடிப்பு!

## உலக வங்கியும் நாணய சபையும் அரசுடன் முட்டி மோதுகின்றன!!

கொழும்பு, பெப்ரவரி. 4

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் உத்தேச வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்க உலக வங்கியும், சர்வதேச நாணய சபையும் பின்னடிப்பதாகச் சொல்லப்படுகிறது

இந்த இரண்டு சாவதேச நிதி உதவு நிறுவனங்களும், இவ்விடயத்தில் அரசாங்கத்துடன் முட்டி மோதுவதாக பொருளியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரஸ்தாப நிறுவனங்கள் இரண்டின் பிரதிநிதிகள் இருவர், இப்போது கொழும்பில் உள்ளனர் அவர்கள் வறுமை ஒழிப்புத் திட்டம் குறித்து அதிருப்தி தெரிவித்தார்கள் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

சர்வதேச நாணய நிதி கொழும்பில் ஜனாதிபதி பிரேமதாஸவுடன் சபையின் சிறப்புப் பிரதி பேச்சுக்கள் நடத்தினர்.

உலக வங்கியின் பிரதிநிதி திரு அசர்வாலும் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு இரண்டு

[4-ஆம் பக்கம் பார்க்க]

## ரங்கூனில் விமான விபத்து; 26 பயணிகள் உயிரிழப்பு!

ரங்கூன், பெப் 4

ரங்கூனுக்கு அருகே இடம்பெற்ற விமான விபத்து ஒன்றில் 26 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

ரங்கூன் விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய இந்த விமானம், மேலே எழும்பிய சிறிது நேரத்தில் மரம் ஒன்றில் மோதி விழுந்தது.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. (உ-எ)

## மாகாண அரச சேவையில் சேர விரும்புவோர்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம் பெப் 4

மாகாண அரசசேவையில் சேர விரும்பும் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களின் பெயர் விவரங்களை எதிர்வரும் இரண்டாம் திகதிக்குமுன் சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமான விவரமான சுற்று நிருபம் [இல. 1607] ஒன்றை சுகாதார அமைச்சு சுகாதாரதுறையைச் சேர்ந்த சகல மாகாண செயலாளர்களுக்கும், மாநில இயக்குநர்களுக்கும், பிராந்திய இயக்குநர்களுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது.

அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

மாகாண அரச சேவையில் சேவைபுரிய விருப்பமுள்ள சகல ஊழியர்களிடமிருந்தும் எழுத்து மூலம் விருப்பம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மாகாண அரச சேவையில் சேர்ந்து கொள்வதற்கு விருப்பமில்லாதவர்கள் குறுகிய கால அறிவித்தலின் கீழ் சுகாதார அமைச்சின் கீழ் நாடு முழுவதும் உள்ள நிலையங்களுக்கு இடமாற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன ஜவான் அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

வல்வெட்டித்துறை, பெப். 4

இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த ஜவான் ஒருவர் கடந்த வியாழக்கிழமை மாலை அமைதிப் படையின் உயர் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் பருத்தித்துறையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை டிப்போ முன்பாக பொது மக்கள் மத்தியில் வைத்து அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

உத்தரப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட விஜேத்சிங் என்ற இவர் கடந்த மாதம் 29 ஆம் திகதி காணமற்போயிருந்தார். அவர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் பிடிக்கப்பட்டார் எனக் கூறப்பட்டது.

வல்வைப் பிரமுகர்கள் சார்பில் திரு எஸ் செல்வேந்திரா, என் ஆனந்தராஜா, எஸ் தில்லையம்பலம், பி யோகேந்திரா ஆகியோரும், பருத்தித்துறை பிரமுகர்கள் குழு சார்பில் எஸ் காந்திதாசன் ஆகியோரும் முன்னின்று விஜேத்சிங்கை மக்கள் மத்தியில் வைத்து இந்திய இராணுவ உயர் அதிகாரிகளான கேர்ணல் சர்மா (உடுப்பிட்டி கொமாண்டர்) மேஜர் பத்மநாதன். (பொலிகண்டி கொமாண்டர்) ஆகியோரிடம் பாதுகாப்பாக ஒப்படைத்தனர்.

(அ-160)

## கொழும்பு நகரில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு பெப் 4

கொழும்பு மாநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்தைக் குழப்பும் சக்திகள் செயல்படலாம் என்ற அச்சத்தினால் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ரூபவாஹினி, வானொலி நிலையம் மற்றும் முக்கிய அரச நிலையங்களைப் பாதுகாக்க விசேட அதிரடிப் பொலீஸ் படையினரை ஈடுபடுத்தவும் அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது

[ஓ-எ]

## மிருசுவில் பகுதியில் சூட்டுச் சம்பவம்

### இளைஞர் பலி; இருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப் 4

மிருசுவில் வடக்குப் பகுதியில் கூட்டுறவுச் சங்கக் கடைக்கு முன்னால் நேற்றுக்காலை 10 45 மணியளவில் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் ஓர் இளைஞர் உயிரிழந்தார். மற்றும் இருவர் காயமடைந்தனர்.

சிவஞானம் சிவரஞ்சன் (வயது 18) என்பவரே உயிரிழந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்க முகாமையாளர் சின்னையா

(4-ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலுக்குத் திரும்புவது என்ற பேச்சுக்கே இடமில்லை

### ஜானகி அம்மாள் அறிவிப்பு

சென்னை பெப் 4

மீண்டும் அரசியலுக்குத் திரும்புவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திருமதி ஜானகி அம்மாள் இராமச்சந்திரன் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

இதனிடையில் புதிய அணி ஒன்றைத் தான் ஆரம்பிக்கப்போவதில்லை என்றும்—

ஜானகி அணிக்கே தாம் தலைமை வகிக்கப் போவதாகவும் முன்னாள் சபாநாயகர் பி. எச் பாண்டியன் தெரிவித்தார்.

ஜானகி அணியின் சார்பில் சட்ட சபைக்குத் தெரிவான ஒரே ஒரு உறுப்பினர் திரு. பாண்டியன் ஆவார்.

### சுபநேரம்

04-02-1989
தை 22
சனிக்கிழமை

சுபநேரம்:
3 35 முதல் 5 05 வரை

ராகுகாலம்:
09 35முதல் 11 05 வரை

இவை பலருக்கும் இரவுக்கும் பொருந்தும்.
சனிப் பிரதோஷ விரதம்

## மகாஓயாவில் 11 சிங்களவர் கொலை

கொழும்பு, பெப் 4

அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயாவில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

அப்போது 11 சிங்களவர் கொல்லப்பட்டனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது.

இச்சம்பவத்தில் 11 பேர் கொல்லப்பட்டனர் என்று பி. பி. சியும் நேற்று இரவு அறிவித்தது.

20 பேர் ஆயுதங்களுடன் மகா ஓயாக் கிராமத்துக்குள் புகுந்து சுட்டும் வெட்டியும் தாக்குதலை நடத்தினர் என்றும்—

அதில் 4 பெண்களும் 5 ஆண்களும் மூன்றுநாள் வயதான குழந்தை ஒன்றும், மூன்று வயதான சிறுவன் ஒருவனும் கொல்லப்பட்டனர் என்றும் பி பி சி. மேலும் தெரிவித்தது. (ஓ-எ)

## மாணவர் பூதவுடல்களுக்கு பல்கலைக்கழகத்தில் அஞ்சலி

### வாய் கட்டியபடி ஊர்வலமும் நடந்தது

யாழ்ப்பாணம் பெப் 4

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போது உயிரிழந்த இரு மாணவர்களினதும் பூதவுடல்கள் மாணவர்களதும் ஏனையோரதும் அஞ்சலிக்காக நேற்று யாழ் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த அசம்பாவிதத்தின் போது யாழ் மருத்துவபீடத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் சத்தியேந்திரா [வயது 23— அரசடி வீதி, யாழ்ப்பாணம்], விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த சதாசிவம் ஜெகநாதன் [வயது 24 — புதுக்குடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹமீதுக்கு துணைவேந்தர் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப் 4

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில்கடந்த புதன், வியாழக்கிழமைகளில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஏ சி. எஸ். ஹமீத், பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் டாக்டர் கலப்பதே ஆகியோருக்கு அறிக்கை மூலம் விரிவாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராஜா இந்த அறிக்கையை அனுப்பி உள்ளார்.

கடந்த 1ஆம், 2ஆம் திகதிகளில்பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமையும், இரண்டு மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமையும் தெரிந்கதே.

அச்சம்பவங்கள் எவ்வாறு நடந்தன என்பது குறித்து அந்த அறிக்கையில் துணைவேந்தர் விவரமாக எடுத்துரைத்துள்ளார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற், பல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞரின் ஆலோசகராக நிபுணர் குகன் நியமனம்

### ஈழத்தமிழர் விவகாரத்தையும் கையாளுவார்

சென்னை. பெப் 4

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் விசேட ஆலோசகராக திரு எஸ். குகன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஈழத் தமிழர் விவகாரம் உட்பட பல முக்கிய அரசியல் விடயங்களை இவர் கையாளுவார் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழகத்தில் முதலமைச்சர் ஒருவருக்கு விசேட ஆலோசகர் ஒருவர் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

திரு. எஸ். குகன் அ-

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரகுவே நாட்டில் இராணுவப் புரட்சி!

அஸன்சியோன், பெப் 4

பரகுவே நாட்டில் இராணுவ சதிப்புரட்சி ஒன்று நேற்று இடம் பெற்றது.

இந்தப் புரட்சியினால் ஜனாதிபதி அல்பர்டோ கோய்னரின் அரசு கவிழ்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

லத்தின் அமெரிக்காவில் பிரேஸிலின் எல்லைப் புறத்தில் பரகுவே நாடு அமைந்திருக்கிறது. இது லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றாகும்.

கிளர்ச்சியை நடத்திய இராணுவத் தளபதி பட்ரிஸ் ரோட்ரிகஸிடம் ஜனாதிபதி கோய்னர் சரணடைந்தார்.

இருவரும் இராணுவ புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்தவர்.

கடந்த 35 வருடங்களாக இவர் ஆட்சியில் இருந்தார்.

அதற்கு முன்னர் ஜனாதிபதியின் விசுவாசப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிர்வாண எம். பி. ஏற்படுத்திய பரபரப்பு

இத்தாலி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நிர்வாண எம் பி என்று பெயர் பெற்ற செல்வி இலோனா ஸ்டோலர் மீண்டும் பரபரப்பு ஒன்றை ஏற்படுத்தினர்.

அமெரிக்காவிலுள்ளசான் பிரான்ஸிஸ்கோவுக்கு விஜயம்செய்யவிஸா கோரிஇவர்ரோமில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு விண்ணப்பித்திருந்தார்.

தூதரகம் அவரின் விண்ணப்பத்தை நிராகரித்து விட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக செல்வி ஸ்டோலர் அமெரிக்க தூதரகத்துக்கு முன்னால் நின்று தனது மார்புச் சட்டையை அகற்றினர்.

இத்தாலி மொழியில் எழுதப்பட்ட அட்டை ஒன்றையும் அவர் கையில் வைத்திருந்தார்.

சிசியோலினாவின் மார்பகங்களைப் பார்த்து அமெரிக்கா ஏன் பயப்படவேண்டும்?'' இப்படி அந்த அட்டையில் எழுதப்பட்டிருந்தது.

37 வயதான பெண் எம். பி. யின் திரைப் படப் பெயர் சிசியோலினா என்பதாகும்.

## சூடும் பதற்றமும்

கோப்பாய், பெப் 4

நேற்று அதிகாலை 3 45 மணியளவில் கோப்பாய்ச் சந்தியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தால் இப்பகுதியில் பதற்றம் நிலவியது. அருகாமையிலுள்ள வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன.

(க-72)

## குருநாகலில் தாக்குதல்

கொழும்பு, பெப் 4

குருநாகல் மாவட்டத்தில் நாரம்பல என்னும் இடத்தில் ஜே வி. பி. தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் நடத்திய தாக்குதலில் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இரண்டு பொலீஸார் காயமடைந்தனர்.

தீவிரவாதிகள் முகாம் ஒன்றை முற்றுகையிடச் சென்ற பொலீஸார் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-எ)

## ரூ. 20 கோடி ஹரோயின் மீட்பு!

சென்னை. பெப் 4

சென்னை நகரில் வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து இந்தியப் பணத்தில் 20 கோடி ரூபா பெறுமதியான ஹரோயின் போதைவஸ்தை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

(உ-எ)

## ஈழவர் முன்னணி கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 4

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற யாழ் பல்கலைக்கழக சம்பவத்தையும், அதற்கு முன்னர் யாழ் இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற சூட்டுச்சம்பவத்தையும் ஈழவர் ஜனநா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைஸ்

யாழ்ப்பாணம்,பெப் 4

யாழ். பல்கலைக்கழகச் சம்பவத்திற்கு மாணவர் இளைஞர் பொதுமன்றம் (கைஸ்) கண்டனம் தெரிவித்திருக்கிறது

வரலாற்றில் கறைபடிந்த இச்சம்பவம் நிகழக் காரணமாயிருந்த அனைவரையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும்—

தொடரும் காலகட்டம் இம்மாணவ உரிமைப் போராட்டத்துக்கு தீர்க்கமான பதில் ஒன்றைத் தரும் என்பதில் ஐயமில்லை என்றும்—

இந்தச் சம்பவம் தொடர்பாக கைஸ் விடுத்ததுண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சமுண்டலை ப்பைகள், பலகைகள், நீளமான பாலத் திராந்திகள், உழவு இயந்திரத்திற்குரிய ரயர்கள் சேறடிக்கும் இரும்பு வீல் இரண்டு (Gauge Wheel), பேர்குசன் உழவு இயந்திரத்திற்குரிய உதிரிப் பாகங்கள், மருந்து தெளிக்கும் கருவி முதலியன விற்பனைக்குண்டு க. பொன்னம்பலம் 'கற்பகதரு' கொல்லன் கலட்டி, தெல்லிப்பழை. (9237)

Honda Reconditioned புதிய Model C D 50 C 50, C 70 Chaly M D 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No 390, மெயின் வீதி, பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (9445)

நல்ல பாவிப்பிலுள்ள English ஒற்றைக் கதவு பெரிய இரும்புப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு யாவும் எலெக்ரோ பிளேற்றேர்ஸ், No 7 கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். [9327]

பாவித்த தளபாடங்கள், கம்பளம், நிலவிரிப்புகள், Type writer, கட்டில், மெத்தை, Hall-set, அலுமாரி, Cutlery set, T. V. Stand, Show-case, Piano மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. 126/1. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, நல்லூர். (நீர்வள சபை அருகில்) (9443)

பாவித்த தளபாடங்கள், அலுமாரி, கட்டில், கண்ணாடி மேசை, Pram, மேசை, Oven, Boiler, Pyrexware, Book Rack, Hall - Set, செற்றி, குளிர்சாதனப் பெட்டி, Wheel-Chair, T. V Stand மற்றும் பல மலிவு விலையில உடன் விற்பனைக்கு உண்டு 790, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர். (9444)

Frigen Gas மேற்கு ஜேர்மனியில் இருந்து தருவிக்கப்பட்ட குளிர்சாதனப்பெட்டிகளுக்கும் [Refrigerator] குளிரூட்டிகளுக்கும், Air Condition machines), நிரப்பு வாயு (Gas) எம்மிடம் விற்பனைக்குண்டு. வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள் சாமுவேல் சன்ஸ் அன்கோ லிமிட், யாழ்ப்பாணம் [C/1413]

### சமூகக்கல்வி

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது! சமூகக்கல்வி ஆண்டு 11, ஆண்டு 10, (புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன் ந. தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (9306)

### கோழித்தீன்

"பல்டி றேட்ஸ்" இல. 234/C, பிரான்ஸி வீதி, (ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக) உங்களுக்குத் தேவையான பிறிமா அத்துடன் கோப்பறேஷன் கோழித்தீன் வகைகள் சகலவற்றுடன் தேங்காய்ப் பிண்ணாக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (9104)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுன் சேவற்குஞ்சு (8-2-89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூ 4/50 முன்கூட்டியே பதிவுசெய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) [9449]

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமாயில ஒருநாள் புறொயிலர்க் குஞ்சுகள் சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் சனிக்கிழமைகள் தோறும் வழங்கப்படும். குஞ்சுகளுக்கு 7 நாட்கள் உத்தரவாதம். தொடர்பு:- கிருஷ்ணா பாம் சென்ரர், திருநெல்வேலி. இருமகள் ஸ்ரோர்ஸ், K. K. S Road, Jaffna. பவலூரம், அரியாலை. (9325)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

கறுப்பு (புள்ளி) சேவல் குஞ்சு ஒவ்வொரு வாரமும் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) 9450)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள். Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [C/1175]

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். (C-1176)

## தேவை

Photostat மெஷின் ஒப்பரேட்டர். Sales Girl. Accounts Clerk வேலைக்கு ஆள்தேவை உடன்விண்ணப்பிக்கவும் 438. C/o உதயன் (9326)

### பேக்கறி வேலை

பேக்கறி வேலை தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் சம்பளம் நேரில் பேசப்படும் 10 02 89 ற்குள் தொடர்பு கொள்ளவும். K. T. R. பேக்கறி, குளத்தடி தையிட்டி, காங்கேசன்துறை. (9322)

### திருமண சேவை

புதிய மாங்கல்ய மல்ரிசேவிஸ் நிலையம் சமீப காலத்தில் 14 விதானையார் ஒழுங்கை கொழும்புத்துறை மேற்கில் ஸ்தாபிக்கப்பட்டு பல இந்து கிறிஸ்தவ விவாகங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. நீங்களும் உங்கள் பிள்ளைகளின் திருமண வைபவத்தை விரைவில் நடத்தி மகிழ என்னுடன் தொடர்பு கொள்க; விவாகப்பொருத்துனர், கு. திருவிளங்கம். (9320)

### சேவை

Type writers- தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17. மின்சாரநிலைய வீதி. 3ஆம் ஒழுங்கை. யாழ்ப்பாணம். [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1368]

கேக் சாமான்களும் கேக் வகைகளும் ஆடருக்குப் பெற்று கொள்ளலாம். ஏ. சி. என் தொகுதி ஸ்தாபனங்கள் பொலீஸ் முன்பாக கே. கே. எஸ் வீதி, சுன்னாகம். (C/1416)

### தவறிவிட்டது

சோதிநாதன் இரங்கநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 681690093V பேர்ஸுடன் 27-1-89இல் கச்சேரி றோட்டில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவுசெய்து கண்டி வீதியிலுள்ள சோதி ஸ்ரோர்ஸில அல்லது உதயன் காரியாலயத் ஒப்படைக்கவும (9448)

தெய்வநாயகம் ஸ்ரீ மனோகரன் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 712561068 தாவடிப் பகுதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (9324)

### ஜோதிடம்

புத்தாண்டுப் பலன்கள் ரூ 3/75, பிரேமதாசாவின் வெள்ளி திசையால் U. N. P. பெருவெற்றியும், கருணாநிதியின் வெள்ளி புத்தியால் மத்திரசு 7 கட்சிக் கூட்டணி ஆட்சியும் இந்திரா காங்கிரஸ் தோல்வியும், ஸ்ரீமாவோ ராஜீவ் எதிர்க்கட்சித் தலைவர்கள். நூலாசிரியர்; (ஆத்மஜோதி) சத்தியதாஸன்; விநியோகஸ்தர்கள்; பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம் (9439

### NEW CITY TRADERS

சகலவிதமான T V டெக், ரேடியோ, அன்ரனா பூஸ்ரர். வயர் லைட் செற் T D K. Maxell Audio Video கசற் வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு, சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders. 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/1522)

### வகுப்புக்கள்

சேக் ஜசிங் ஜென்றல் குக்கரி பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும் வெளிநாடு செல்வோர்க்கும் இல்லத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம். சனி, ஞாயிறு மட்டும். ஆரம்பம் 11-02-89 தொடர்பு: N Arullananda 11/2, Wyman Road, Nallur. (C/1156)

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

9-1-89 இலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட சகல வகுப்புகளும் 6-2-89 இல் மீண்டும் பழைய நேரசூசிப்படி ஆரம்பமாகிறது. S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9143)

புதிய பிரிவு காலை 6 — 7 30 மணி வரை திங்கள், புதன் நாட்களில் மட்டும். ஆரம்பம் 6-2-89 S B Iyar 12, வைமன் வீதி, நல்லூர் (9144)

### O/L ENGLISH

பழைய பாடத்திட்ட மீட்டல் வகுப்புகள் ஆரம்பம் 6-2-89 மாலை 5 மணி — 6 மணிவரை கிழமை நாட்களில் 15 வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெறும். S. B Iyar 12 வைமன் வீதி, நல்லூர் (9431)

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு விஜயம

யாழ். மாவட்டத்தின் புதிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செ இ நித்தியராஜ் தமது அதிகாரப் பரப்பினுள் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விஜயம் செய்து வருகிறார்.

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பனவற்றை கடந்த செவ்வாய்க்கிழமை அவர் சென்று பார்வையிட்டார்.

யாழ் மவட்ட கூட்டுறவு அலுவலக சிரேஷ்ட தலைமைக் காரியாலய பரிசோதகர் திரு. கே. சிவநாதனும் அவருடன் சென்றார். [இ-120]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சந்திரசேகரம் டலஸ் [டக்ளஸ்]**

மலர்வு: 27 - 2 - 1971 உதிர்வு: 4 2 - 1988

இறைவா! எங்கள் அன்புச் செல்வமே நீர் எம்மை விட்டு பிரிந்தநாளில் இருந்து உம்மை மறக்க முடியாமல் உம்மைப்பார்த்து பார்த்து வந்த முகம் பாதியிலே போய்விட்டது எங்கள் குடும்பத்தின் பாச தெய்வமே! இந்த தெய்வத்தை இழந்து எங்கள் இதயம் துடிக்கின்றதே.

உமது பிரிவால் வாடும்:
தாய், தந்தை, சகோதரர்கள், நண்பர்கள்.

S. சந்திரசேகரம்,
மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி. (8939)

தனபாலசிங்கம் சத்தியேந்திரா
(மருத்துவ பீடம் 1 ஆம் வருடம்)

சதாசிவம் ஜெகநாதன்
(விஞ்ஞானபீடம் 1 ஆம் வருடம்)

உயிர்த்தியாகம் செய்த எம் சக மாணவர்களுக்கு

எமது

## இதய பூர்வமான அஞ்சலிகள்

— 4 ஆம் வருட மாணவர்கள்.
(சிரேஷ்ட பிரிவு)
மருத்துவபீடம்,
யாழ் பல்கலைக்கழகம். (9452)

# NEW SCIENCE ACADEMY

B. M. C. முன்பாக JAFFNA.

**90 A/L புதிய பிரிவு**

சனி, ஞாயிறு வகுப்புக்கள்.

| | |
|---|---|
| PHY - மணியம் (Light) | — 7. 30 a. m |
| ZOO - பரம் (அலகு 4) | — 8. 30 a. m |
| BOT - ஜங்கரநேசன் (அலகு 4) | — 10 00 a. m |
| CHE - சத்தீஸ் (General) | — 11. 00 a. m. |
| PURE / APP } MATHS வெக்டர் வேலாயுதம் | 10 - 30 — 12 - 30 |

(C/1432)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் ந. சேகரானந்தம்
(வண்ணம்)

மலர்வு: 06 - 01 - 1952 உதிர்வு: 04 - 02 - 1988

அழியாத நினைவை அழித்து விட்டுச் சென்ற உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி
இராசரெத்தினம் குடும்பத்தினர்.

கொம்மந்தறை (8941)

மாணவ நண்பர்களுக்கு
## எமது இதய அஞ்சலி!

மாணவர் சமுதாயத்திற்காக தங்கள் இன்னுயிர் ஈந்த இலட்சிய தீபங்கள்

**சதாசிவம் ஜெகநாதன்**
(முதலாம் வருட பௌதிக விஞ்ஞான பீட மாணவன்)

**தனபாலசிங்கம் சத்தியேந்திரா**
(முதலாம் வருட மருத்துவ பீட மாணவன்)

ஆகிய இருவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த

## கண்ணீர் அஞ்சலி!

முதலாம் வருடம்
பௌதிக விஞ்ஞான பீட மாணவர்கள்,
யாழ் பல்கலைக்கழகம். (9451)

## பதவி வெற்றிடம்

(1) விற்பனை உதவியாளர்

(பயிற்சி) (இருபாலரும்)
வயது:- 18 — 35 வருடங்கள்.
கல்வித்தகைமை: க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தி (கணிதம், தமிழ் பாடங்களில் திறமைச்சித்தியுடன்)
பயிற்சிக் காலத்தில் நாளொன்றிற்கு ரூபா 20/- செலவினப்பணம் கொடுக்கப்படும்.

(2) பால் விநியோகஸ்தர் தேவை

எமது பால் சேகரிப்பு நிலையத்திலிருந்து நாளாந்தம் காலை 5-00 மணி தொடக்கம் காலை 8-30 மணிவரையும், மாலை 4-00மணி தொடக்கம் மாலை 6 30 மணிவரையும் யாழ் மாநகரசபை எல்லைக்குள் வீடுகளுக்கும் எமது விற்பனை நிலையங்களுக்கும் பால் விநியோகம் செய்வதற்கு தரகு அடிப்படையில் விநியோகஸ்தர் தேவை. சொந்த சைக்கிள் வைத்திருப்போருக்கும் மாநகர சபை எல்லைக்குள் வசிப்போருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இரு விண்ணப்பங்களையும் 15 02 89 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன் அனுப்பிவைக்கவும்.

(கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.)

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்
(C/1171)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. சின்னவன் தம்பிமுத்து**

தோற்றம்: 1937 - 2 - 12 மறைவு: 1989 - 1 - 04

திகதி: 1989 02 03
(வெள்ளிக்கிழமை)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
அன்பான ஜோதியே! எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
அணைந்து விட்ட
எம் அன்புத் தெய்வமே உங்கள்
நினைவுகள் எம்மை விட்டகலாது.
தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை
வெள்ளிக்கிழமை 3 2 89 நேற்று நடைபெற்றது

மனைவி: பூமணி
பிள்ளைகள்; சத்தியானந்தன்
சத்தியவதனு
உறவினர்கள்
நண்பர்கள்.

அளவெட்டி,
வடக்கு,
பொன்னிப்புலம்
C/1173

## கண்ணீர் அஞ்சலி

**தனபாலசிங்கம் சத்தியேந்திரா**
(1 ஆம் வருடம் - மருத்துவபீடம்)

பிறப்பு: 1965 - 11 - 07 இறப்பு: 1989 02 - 02

மறுப்புகளால் கூட
அனுமதிக்கப்படாத உந்தன்
மறைவு இந்த உச்சி வெய்யிலில்
வரும் புளுக்கத்தை
நீக்க ஒரு காற்று புக
முடியாமல் இருக்கையிலே,
அசையாது விறைத்து போன
மரங்களின் கிளை
ஒன்று மெல்லென அசைவது போல்
நிகழ்ந்துவிட்டதே!
நிச்சயமான ஒரு காலத்தில் உன்னை நினைந்து
வருந்தும் வரை நின்றுவிடு எம்மோடு,
பிரபஞ்சத்தில் எங்கேயோ ஒரு மூலையில்
முளைத்த விதை போல் எழும்பிய உன்னை
எடுத்து இந்த இறப்புக்குள்
மறைசது வைத்ததை
என்னவென்று அனுமதிப்பது
......... எங்கள் கைகளை இறுகப் பொத்தி
கண்களை கசக்கிப் பின் எழும் விம்மலையும்
மறைக்கத்தான் ............

— மருத்துவபீட மாணவர்கள்
(நான்காம் வருடம்)
(9455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. P. ANTON
வழங்கும்
குவைத் நாட்டுக்கு
கிளினேஸ் ஆட்கள் தேவை
சம்பளம் 35 டினுர்
உணவு, இருப்பிடம் இலவசம்
ஆஸ்பத்திரி, விமான நிலையம்
போன்ற இடங்களுக்கு
வேலைவாய்ப்பு
உடன் செய்து கொடுக்கப்படும்.
ஜேர்மனிக்கு
16 வயதுக்குட்பட்டவர்களுக்கு
உடன் செய்து தரப்படும்.
S. P. ANTON
648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/1166)



சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)

## அறிவித்தல்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல்கள் 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ளது. இதற்காக 31 03 89 முடியவுள்ள வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளது. இதுவரை அங்கத்தவர்களாகச் சேராதவர்கள் முழுப் பங்கு பணமாக ரூபா 10/- செலுத்தி 31-03 89 ற்கு முன் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளவும். தற்போது அங்கத்தவராக உள்ளவர்கள் முழுப் பங்குப்பணமாக ரூபா 10/- இன் மிகுதியைச் செலுத்திப் பூரணப்படுத்திக் கொள்ளவும். ரூபா 10/- செலுத்திய அங்கத்தவர்களே கிளைக்குழுத் தேர்தலில் பங்கு பற்றவும் வாக்களிக்கவும் தகுதியுடையவர்கள்.

செயலாளர்.
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

சங்கானை,
2. 2 89.
(C/1169)



## அறிவித்தல்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிருவகிக்கப்பட்டுவரும் பேக்கரியில் தரமான தவிட்டுப் பாண் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது. தவிட்டுப் பாண் தேவையானோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

பொது முகாமையாளர்,
(C1165) புலோலி பல நோ. கூ, சங்கம்.



வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

✶ Computer Programming in d Base III +

பயிற்சிக்காலம்: 2 மாதம்
ஆரம்பம்: 07 - 02 - 89
(செவ்வாய், வியாழன் வகுப்புகள்)
கட்டணம்: 125/-
(பகுதி பகுதியாக செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில கூடிய நேர செய்முறைப்பயிற்சி IBM [Compatible] கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிக்கப்பட்டதொகை மாணவமாணவிகளே சேர்க்கப்படுவர். ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 06 - 02 - 89

UNIKCO
COMPUTER CENTRE
No. 5, POWER HOUSE ROAD
2nd Lane, JAFFNA.
(Near Sub - Post Office)
(C-1389)


## அரசு இப்படிக் கூறுகிறது

கொழும்பு, பெப் 4

பேராதனை பல்கலைக் கழகத்திலும் பொறியியல் மாணவர்கள் வகுப்புக்களை விட்டு வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அதன் காரணமாக அவர்கள் வகுப்புக்களை விட்டு வெளியேறினர் என்று அரசு அறிவித்தது.

நிர்ப்பந்தம் கொடுத்தவர்கள் யார் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்தது.

(ஒ-எ)

## நெல்லியடி வங்கியில் நாளை நிவாரணம்

கரவெட்டி, பெப் 4

நெல்லியடி இலங்கை வங்கிக்கிளையில் ஆயிரத்து 27 குடும்பங்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

★ துன்னாலை 33
★ துன்னாலை கிழக்கு — 275
★ துன்னாலை தெற்கு — 56
★ துன்னாலை மேற்கு — 155
★ கரவெட்டி மத்தி (3-ம் பகுதி) — 252
★ கரவெட்டி மத்தி (4-ம் பகுதி) — 60
★ கரவெட்டி வடக்கு — 196

(ஒ-70)

## தமிழ் 'கோலை'

முல்லைத்தீவு, பெப். 4

முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கடிதத் தலைப்பில் தமிழ் ''கொலை'' செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு என்பதற்குப் பதிலாக ''முல்லீத்திவு'' என அச்சிடப்பட்டுள்ளது. (இ-92)

## ரூ. 1,000 நிவாரணம் ஒதுக்கீடு விவரம்

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ். மாவட்டத்தில் முதற்கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணமான ஆயிரம் ரூபா உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவும், கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகவும் ஒதுக்கப்பட்டது பற்றிய அட்டவணை ஒன்று யாழ் செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுரீதியாக நிவாரணப் பணம் ஒதுக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

வேலணை - 985; ஊர்காவற்றுறை - 2,730; யாழ்ப்பாணம் - 16,330; நல்லூர் - 19,049; சண்டிலிப்பாய் - 9,500; சங்கானை - 6,000; உடுவில் - 14,189; தெல்லிப்பழை - 18,200; கோப்பாய் - 17,000; சாவகச்சேரி - 10,981; கரவெட்டி - 16,000; பருத்தித்துறை - 19,000; ஏனையவை - 36.

(ஒ- 5)

## தேர்தல் கடமை கொடுப்பனவுகளை இன்று பெறலாம்

பலாலி, பெப் 4

கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தலில் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்களுக்கான கொடுப்பனவுக்கான உறுதிச் சீட்டுக்களை கடந்த 15 ஆம் திகதிக்கு முன்பு கல்வித் திணைக்களத்தில் சமர்ப்பித்தவர்களுக்கான கொடுப்பனவுகள் இன்றும் நாளையும் கல்வித் திணைக்களத்தில் காசாளையாக வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக வந்து இக் காசோலைகளைப் பெற்றுச் செல்லுமாறு கல்வித் திணைக்களக் கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன் தெரிவித்தார்.

(ஒ-119)

## மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, பெப் 4

மேல்நாட்டு மருந்துகளின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒரு ரூபா மருந்துக்கு 76சதத்திற்கு மேல்லாபம் வைக்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இப்படி சுகாதார அமைச்சு தனியார் மருந்தக உரிமையாளர்களைக் கேட்டுள்ளது. (ஒ-எ)

## தொழில்முயற்சிகளுக்கு உதவித்தொகை வழங்க ரூ.6கோடி நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப் 4

உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான உதவித்தொகை வழங்குவதற்கு - இரண்டாம் கட்டமாக யாழ். மாவட்டத்திற்கு சுமார் 6 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.

யாழ். செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு தலா நாலாயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு லட்சம் பேர இத்தகைய உதவித் தொகையை பெறுவதற்கு தகுதி உடையவர்கள் என்று யாழ். செயலகம் தீர்மானித்துள்ளது.

இந்த உதவித்தொகை கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது.

முதல் கட்டக் கொடுப்பனவாக 4 ஆயிரத்து 800 பேருக்கு ஒரு கோடியே 92 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக சுமார் 15 ஆயிரம் பேருக்கு மேற்படி நிதியை வழங்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (ஒ-5)

## மல்லாகத்தில் மலகூடங்கள்

யாழ்ப்பாணம் பெப். 4

மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் 173 நிலமட்டத்திலான மலகூடங்களை மல்லாகப் பகுதியில் அமைக்க முன் வந்துள்ளது.

முதல் கட்டமாக நூறு மலகூடங்கள் அமைப்பதற்கு 1 லட்சத்து 50 ஆயிரத்தை மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கம் மலகூடங்கள் இல்லாதவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

மல்லாகக் கிராமத்தில் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் படி 250 வீடுகளில் மலகூடங்கள் இன்னும் கட்டப்படவில்லை எனத் தெரியவருகிறது.

(ச


# அண்ணலின் பாதையில் எமது அருமை நண்பர்கள்!



த. சத்தியேந்திரா
(முதலாம் வருட மருத்துவபீட மாணவன்)



ச. ஜெகநாதன்
(முதலாம் வருட விஞ்ஞானபீட மாணவன்)

இரு விழிகள் இழந்ததுபோல்
இருளிலே தேடுகின்றோம்
அகிம்சையை!
அகிம்சையின் அண்ணலே!!

உன்னிடம் வருகின்றார்
எம் நண்பர்!!
சுதந்திரத்தை நீ கண்டதென்ன
சுடுகாட்டிலா?

04-02-1989

முதலாம் வருட மாணவர்கள்
மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.



## பகிரங்க அறிவித்தல்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை
(சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி ஆகிய உப அலுவலங்கள் உள்ளடங்கியது)

### வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம்

மேற்படி கட்டளைச் சட்டம், அது தொடர்பான உப - விதிகள், சுற்று நிருபங்கள் ஆகியவை வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல பகுதிகளிலும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இப் பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் சங்கானை, வட்டுக்கோட்டை சுழிபுரம், அராலி ஆகிய உப அலுவலகப் பகுதிகளில் சபையின் அங்கீகாரமின்றி எதுவித கட்டடங்கள், திருத்தங்கள் (வீடுகள், மதில்கள், கிணறுகள், மலசலகூடங்கள்) அமைக்கக் கூடாது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

து. வைத்திலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,
அலுவலகம்,
சுழிபுரம்.
24. 01. 1989. (C/1170)



## வர்த்தக ஊழியர் சங்கம் யாழ்ப்பாணம்

எமது சங்க உறுப்பினர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு எமது சங்கத்தால் உறுப்பினர்களின் பாதிப்பு சம்பந்தமான விபரங்கள் திரட்டப்படுகின்றன. ஆகவே பாதிப்புற்ற எமது சங்க உறுப்பினர்கள் சங்க காரியாலயத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து காலதாமதமின்றி காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

முகவரி: செயலர்:

வர்த்தக ஊழியர் சங்கம் யாழ்ப்பாணம்.
166, ஆஸ்பத்திரி வீதி,
சங்கரப்பிள்ளை கட்டடம்.
யாழ்ப்பாணம் (9484)



## அக்குபங்சர் டிப்ளோமா

வைத்தியர்களுக்கும், வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்குமான அக்குபங்சர் கலைப் போதனையும் வைத்தியசாலையில் செயல் முறைப் பயிற்சியும். பரீட்சையும் தராதரப் பத்திரமும் வழங்கப்படும்

விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறை அனுப்ப வேண்டிய முகவரி;

அமைப்பாளர்,
ஸ்ரீ லங்கா அக்குபங்சர் சங்கம்
வயாவிளான்.
(8903)



# UNITED ENGINEERS

## VACANCY

For Immediate Engagement Mechanical Engineer with Proven Experience in Design & Production of Machinery.
Salary. Negotiable.
Call over on 06-02-89 - 10 00 hrs.

## தேவை

இரும்பு, லேத், வெல்டிங் வேலைகளில் அனுபவம் உள்ள ஆட்கள் தேவை.
மாதச் சம்பளம் ரூபா 2000/- — 3000/-
நேரில் வரவும்.
மேசை, கதிரை தயாரிப்பதில் அனுபவம் உள்ள தச்ச வேலை உதவியாட்கள் தேவை.
மாதச் சம்பளம் ரூபா 1250/- — 1750/-
நேரில் வரவும்.

UNITED ENGINEERS
Central Workshop.
271, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(8940)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"உலகில் சாகாவரம் பெற்றவை என்று ஒன்றைத்தான் கூற முடியும். அவை புத்தகங்களே"

— கதே.

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி தமிழ் / ஆங்கில உரையுடன்கூடிய ஒளவையாரின் "ஆத்திசூடி" என்ற நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

"மில்க்வைற்"

யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

04 - 02 - 1989 சனிக்கிழமை

"ஆரோக்கியமே சிறந்த செல்வம்"

ஆரோக்கியமான வாழ்வுக்கு யோகாசனம் செய்யுங்கள். மில்க்வைற் பார்சோப் மேலுறைகள் 5 அனுப்பி விளக்கப் படங்களுடன் கூடிய யோகாசனப் படங்களையும், புத்தகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

"மில்க்வைற்"

யாழ்ப்பாணம்.

## அண்ணா நினைவு தினம்

சென்னை, பெப் 4

பேரறிஞர் அண்ணாவின் 20 ஆவது நினைவு தினம் நேற்றுச் சென்னை நகரில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜெயலலிதா தலைமையில் ஓர் அணி, திரு. ராகவானந்தம் தலைமையில் ... ஆகியன ... சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தின.

... முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் தி.மு.க. ... பேரி யார் சிலையில் இருந்து அண்ணா சமாதிக்குச் சென்று மலரஞ்சலி செலுத்தியது.

பண்ருட்டி இராமச்சந்திரன், நாவலர் நெடுஞ்செழியன், காளிமுத்து ஆகியோர் தனித்தனியாகவும் —

வீரப்பன், பாண்டியனுடனும் அண்ணா சமாதிக்குச் சென்றனர்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்4

யாழ் — பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறவிருந்த 'முடிவல்ல ஆரம்பம்' நாவலின் அறிமுகம் மற்றும் விமர்சன அரங்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்மன்றமும் இணுவில் கலை இலக்கிய வட்டமும் ஏற்பாடு செய்திருந்தன.

(ஒ-10)

## ... யூவாகளுக்கு விடுதலை

கொழும்பு, பெப் 4

இலங்கையின் 41 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டுப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான கைதிகளை விடுதலை செய்யும்படி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச உத்தரவிட்டிருக்கிறார்.

இச் சட்டத்தின் கீழ் கைதான ஈ பி ஆர் எல் எவ், ரெலோ, ஈரோஸ், ஈ என் டி எல் எவ் ஆகிய இயக்கங்களைச் சேர்ந்தவர்களையும் விடுதலைசெய்யும்படி ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்திருக்கிறார்.

சிறுசிறு குற்றங்களுக்காகக் கைதானவர்கள் பலரும் விடுதலைசெய்யப் படுவர் என்றும்தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## மிருசுவில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குமாரசாமி (வயது 29) பொன்னையா வரதராஜா (வயது 29) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

சின்னையா குமாரசாமி யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஒ-எ-10)

# 5 இலங்கை வங்கிக்கிளைகளில்

# நாளை நிவாரணம்வழங்கப்படும்

யாழ்ப்பாணம் பெப் 4

மீளக்குடியமர்தல் நிவாரணம் பெறவிருக்கும் 5 ஆயிரத்து ஏழு குடும்பங்களின் பட்டியல் நேற்று இலங்கை வங்கியினால் வெளியிடப்பட்டது.

இக் கொடுப்பனவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறை, பருத்தித்துறை நெல்லியடி, மானிப்பாய் ஆகிய வங்கிக் கிளைகளில் வழங்கப்படவுள்ளன.

நாளை நிவாரணம் பெறவிருக்கும் பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும், வங்கிகளின் விவரங்களும் வருமாறு:

மானிப்பாய் இலங்கை வங்கி

★ நவாலி — 750

காங்கேசன் இலங்கை வங்கி

★ கொல்லங்கலட்டி — 281

★ மாவிட்டபுரம் — 326

★ வீமன்காமம் — 197

பருத்தித்துறை இலங்கை வங்கி

★ வல்வெட்டித்துறை வடக்கு — 242

★ வல்வெட்டித்துறை தெற்கு — 184

★ தும்பளை — 452

★ புலோலி கிழக்கு — 374

யாழ் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளை

★ அரியாலை மத்தி — 499

★ கொக்குவில் கிழக்கு — 213

★ கொக்குவில் மேற்கு — 67

★ அத்தியடி — 480

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் நிவாரணம் பெறவிருப்போரின் விவரம் 3 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. (ஒ-10)

## கிராம சேவை அலுவலர்கள் தாக்கப்பட்டதாகப் புகார்

கரவெட்டி, பெப் 4·

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குக் கடமை நிமித்தம் சென்றிருந்த கிராம சேவை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தாக்கப்பட்டதாகப் புகார் கூறப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை வதிரியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்தே இவர்கள் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இது குறித்து உதவி அரசாங்க அதிபர் ஊடாக யாழ் அரசாங்க அதிபருக்கு முறையிடப் பட்டுள்ளது

(ஒ - 70)

## 200 பேர் கொலை!

சண்டிகார், பெப். 4

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் இருநூறுக்கும் அதிகமானோர் தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## புளொட் மறுப்பு

கொழும்பு, பெப் 4

கடந்த வருடம் இடம்பெற்ற மாலைதீவு சதி முயற்சியில் தமது இயக்கம் சம்பந்தப்படவில்லை என்று புளொட் இயக்கம் அறிவித்துள்ளது.

'இச் சதி முயற்சியில் உமா மகேஸ்வரனும், புளொட் இயக்கத்தினரும் சம்பந்தப்பட்டனர் என்பதை நாம் மறுக்கிறோம்' -இப்படி புளொட் இயக்கப் பேச்சாளர் மாறன் சொன்னார்,

மாறன் மேலும் சொன்னதாவது;

புளொட் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் சிலரும், இயக்கத்தில் அங்கம் வகிக்கும் சிலரும் அங்கீகாரமின்றித் தாமாகவே இதில் பங்குபற்றியுள்ளனர்.

மாலைதீவு சதி முயற்சியை மேற்கொண்ட இக்கூலிப் படையின் தலைவர் என வர்ணிக்கப்படும் வசந்தி புளொட்டின் மன்னார்ப் பகுதித் தலைவர் ஆவார்.

அவர் தன் விருப்பப்படியே செயற்பட்டார். -இப்படி மாறன் சொன்னார். (ஒ-எ)

## வல்வை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோர்

வடமராட்சி, பெப் 4

கடந்த புதன்கிழமை வல்வெட்டி, உடுப்பிட்டி போன்ற இடங்களில் தாக்குதலுக்குள்ளாகி வல்வெட்டித்துறை, இந்திராணி அரசினர் வைத்தியசாலையில் சிலர் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

என். குணசேகரம் (வயது 32-வல்வெட்டித்துறை), கே. யோகானந்தசாமி (வயது 47-வல்வெட்டித்துறை), எஸ் தர்மகுலசிங்கம் (வயது 45-வல்வெட்டி), என். பொன்னம்பலம் (வயது 51- வல்வெட்டி)

கே. வசந்தகுமார் (வயது 17- ஊறணி, வல்வை), ஏ. புண்ணியமூர்த்தி (வயது 41 வல்வெட்டி), இ. அருள்கணேஸ் (வயது 20-வல்வெட்டி), ரி. ரமேஸ் (வயது 14-வல்வெட்டி),

இ. தயாகணேஸ் (வயது 17-வல்வெட்டி), எஸ். இராஜேந்திரம் (வயது 60-இடல், வல்வெட்டி), கே. சின்னத்தம்பி (வயது 52 - வல்வெட்டி), வி. சுந்தரம் (வயது 50 உடுப்பிட்டி), என் இராமச்சந்திரன் (வயது 53-வல்வெட்டி).

(ஒ-160)

## கலைப்பீட பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் பெப் 4

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் பின்போடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது

கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னரே இந்தப் பரீட்சையை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் திட்டவட்டமான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5)

## மாகாண...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நம் பெறுவதற்கு தகுதி பெற்றிருப்பார்கள் என்பதை சகல உத்தியோகஸ்தர்களுக்கும் அறிவிக்கப்படவேண்டும்

மாகாண அரச சேவையில் சேர்த்துக்கொண்ட பிறகு சம்பந்தப்பட்ட ஊழியர்களின் தராதிலுள்ள பதவி உயர்வுகள் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்படும்.

இவ்வாறு அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

[ஒ-ஐ-10]

## பரகுவே....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படைகளுக்கும்கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்ததாக தலைநகர் அஸன்கொய்னில்இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சரணடைந்த ஜனாதிபதி இராணுவத் தலைமையகத்தில் காவலில் வைக்கப்பட்டார்.

[உ-எ]

## நூல் நிலையம்

சுருவில் இளைஞர் சனசமூக நிலைய நூல் நிலையம் ... அமைத்து ... முன் வந்துள்ளனர்.

## வறுமை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும்இலங்கை அரசு உதவி கோரியுள்ளது தெரிந்ததே. அது தொடர்பாகவே இப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன என்று தெரிகிறது.

இரண்டு நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவியைப் பெறுவதற்கு அரசு அவற்றுடன் முட்டி மோதிக் கொள்ளும் நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஏராளமான பணம் வேண்டியிருந்தும் வறுமை ஒழிப்புத் திட்டத்தைகொண்டுநடத்த வேண்டும் என்று இலங்கை அரசு பிடிவாதமாக இருப்பது கவலை தருவதாக உள்ளதாக இரண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு இலங்கையின் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 20 சதவீத நிதி தேவைப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## கலைஞரின்..:.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தி. மு. க. அரசின் கீழ் நிதிச்செயலாளராகப் பணிபுரிந்தவர்.

சிரேஷ்ட ஐ. எ.எஸ். அதிகாரியான இவர் சிறந்த பொருளாதார நிபுணருமாவார். தமிழக பொருளாதார வளர்ச்சி குறித்து பல புத்தகங்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

அபிவிருத்திக் கல்வி—தொடர்பான சென்னை நிறுவனத்தின் (Madras Ingittute of Devlop ment Studies) இயக்குநராகவும் திரு. குகன் பணிபுரிந்து வந்தார்.

இந்த அமைப்பு தனிப்பட்ட ஒரு நிறுவனமாக இருந்தபோதிலும் கடந்த காலங்களில தமிழக அரசின் வரவு செலவுத் திட்ட தயாரிப்பு நடவடிக்கைகளில் பெரும் பங்காற்றி வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-எ)

## மாணவர் பூதவுடல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பு] ஆகிய இரு மாணவர்களும் உயிரிழந்தது தெரிந்ததே.

இவர்கள் இருவரினதும் பூதவுடல்கள்நேற்று நண்பகல் இரண்டு மணியளவில் யாழ் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

நண்பகல் 2.30 மணியளவில் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திலிருந்து பூதவுடல்கள் மருத்துவ பீடத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட சுமார் இரண்டாயிரம் பல்கலைக் கழக மாணவர்களும் தமது வாய்களை கறுப்புப்பட்டியினால் கட்டியபடி அணிவகுத்துச் சென்றார்கள்.

ஊர்வலத்தின் முன் வரிசையில் பல விரிவுரையாளர்களும் கறுப்புப்பட்டிகளினால் வாய்களை கட்டியபடி சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

சத்தியேந்திராவின் பூதவுடல் மருத்துவ பீடத்திலிருந்து பிற்பகல் 3 30 மணியளவில் ஊர்வலமாக அவரது வீட்டிற்கு எடுத்துச்செல்லப் பட்டது.

ஜெகநாதனின் பூதவுடல் உறவினர்களின் வருகைக்காக யாழ் மருத்துவ பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ-5-10)

## அமைச்சர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக் கழகங்களின் ஆசிரியர் சம்மேளனத் தலைவர் ... இந்த அறிக்கையின் பிரதிகள் ... அனுப்பி வைக்கப் பட்டன. (அ-5)

## ஈழவர்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யக முன்னணி கண்டித்திருக்கிறது

இத்தகைய சம்பவங்கள் புதிய வடிவில் மக்களை மீண்டும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன என்றும் -

இத்தகைய மரணங்கள் படுகொலைகளே! இவற்றை நியாயப்படுத்த காரணங்கள் கண்டுபிடிப்பதை விடுத்து இனியும் தொடராமல் இருக்க வகை செய்வதே பொருத்தமானது என்றும் -

இவ்வமைப்பு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ)

## உதிரும் மலர் ஒன்று...



செல்வன்

**தனபாலசிங்கம் சத்தியேந்திரா**

மருத்துவ பீடத்தின் — இளமலர்களில் மேலும் ஒன்று தன்
மணத்தை மட்டும்
பரப்பி விட்டு
மறைந்து போனது!

தென்றலதால்
தாலாட்டப்பட்ட
பூவின் இதழ்கள்
துப்பாக்கிக் குண்டினைத்
தாங்குதல் இயலுமா?

மணம் வீசும் மலரிலிருந்து
மாசில்லாத் தேன் பிலிற்றும்
ஆனால்
சத்தியேந்திரா!— நீ ஏன்
எங்களுக்கு
கண்ணீரைக் காட்டிச் சென்றாய்?

இழப்புக்கள் மலிந்த
இவ் வேளையிலே—
உனது இழப்பு
எம்மிதயத்தை
மேலும் பளுவாக்க
எம் இதய அஞ்சலிகளை
உனக்காய்
அனுப்புகிறோம்.

—மருத்துவபீட மாணவர் ஒன்றியம்—

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் தனபாலசிங்கம் சத்தியேந்திரா

(1 ஆம் வருட மருத்துவ பீட மாணவன் யாழ் பல்கலைக்கழகம்)

செல்வன் தனபாலசிங்கம் சத்தியேந்திரா 02 02 89 இல் அகாலமரணமானார். இவர் புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. கா தனபாலசிங்கம் (ஆசிரியர், யாழ் முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), திருமதி தனலட்சுமி தனபாலசிங்கம் (ஆசிரியை, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், பாலேந்திரா (சுவிற்சலாந்து), தனஜா (யாழ் ஆங்கில திருக்குடும்ப கன்னியர்மடம்) தனேந்திரா (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு திருமதி கார்த்திகேசு, திரு. திருமதி இலகுப்பிள்ளை ஆகியோரின் பேரனும், திரு கா, கனகசபை (அதிபர் இறப்பிட்டி, அ. மெ. த. க. பா), திரு. கா. குகபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை,) திரு. கா. லோகநாதன் (ஜேர்மனி), திரு. கா. திருநாவுக்கரசு (ஆசிரியர் புங்குடுதீவு, ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாசாலை) ஆகியோரின் பெறாமகனும், திருமதி கனகசுந்தரம் கமலாம்பிகை, திருமதி சண்முகநாதன் இந்திராணி (ஆசிரியை காசிப்பிள்ளை வித்தியாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகனும் திருமதிகள் கமலா பாலசிங்கம், யோகேஸ்வரி ரங்கநாதன், செல்வி யோகலட்சுமி செல்வி திலகவதி, திருமதி சுலோசனா குணரத்தினம், காலம் சென்ற திருமதி சண்முகபூபதி சற்குணம் ஆகியோரின் பெருமகனும், திருலோகநாதன் (லண்டன்) செல்வநாதன் (வட்டக்கச்சி), ஜெகநாதன் (டிக்கோயா) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 64, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் இன்று 04-02-89 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(9442) தகவல்: பெற்றோர்.

### திரு. க. ஆசைப்பிள்ளை

(பிரபல வர்த்தகர், A D நல்லூர்)

பிரபல வர்த்தகர் திரு கணபதிப்பிள்ளை ஆசைப்பிள்ளை காலமாகிவிட்டார் இவர் இராசமணியின் அன்புக் கணவரும், சிவகுமார் (பிரான்ஸ்), தயாநிதி (பிரான்ஸ்), கலாநிதி (இந்து மகளிர் கல்லூரி), பவாநிதி (இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரனின் (பிரான்ஸ்) மாமனாரும், பொன்னுத்துரை, சரஸ்வதி, முத்தம்மா, காலஞ்சென்ற பூரணம், கிச்சி, செங்கை ஆகியோரின் அன்புச் சகோதரரும் வர்த்தகர் துரைராசா, பொன்னையா, முத்துத்தம்பி, பேரம்பலம், கர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காண்டீபன் (பிரான்ஸ்), பிரதீபன் பிரான்ஸ்), கஸ்தூரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார் அன்னாரின் பூதவுடல் 4-2-1989 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கச்சேரி நல்லூர் ரோட் இல- 24, மூத்த விநாயகர் வீதியில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் இருந்து ஈமக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(9446) தகவல்: மனைவி

### திரு. இராமுப்பிள்ளை செல்லமுத்து

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், தாண்டிக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு இராமுப்பிள்ளை செல்லமுத்து அவர்கள் 2- 2- 89 இல் காலமானார் அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம் (மலேசியா), இராசசுப்பிரமணியம் (அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ஜெயரட்ணராணி சுப்பிரமணியம் (தவம்) திருமதி விவிமலர் இராசசுப்பிரமணியம் ஆகியோரின் மாமனும், திரு. மாணிக்கம், காலஞ்சென்ற சிற்றம்பலம், முருகேசு, சின்னத்துரை ஆகியோரின் சகோதரரும், திருமதி நாகரத்தினம், இராசதுரை ஆகியோரின் மைத்துனரும், மகேந்திரன், திருமதி இந்திராணி தர்மசுந்தரராசா, விஜேந்திரன், செல்வேந்திரன், விஜயராணி, பகீரதன், றவீந்திரன், தருமசுந்தரராசா, இராஜேஸ்வரி, பாலசோதி சாந்தி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்கு 05. 02 89 ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு அவரது இல்லத்தில் தாண்டிக்குளத்தில் நடைபெற்று பூதவுடல் பத்தினியார் மகிழங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:

திரு. ம. இராசசுப்பிரமணியம்,
தாண்டிக்குளம், வவுனியா. (9454)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 04 - 02 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd 292/2 Navalar Road, Jaffna Saturday 04th February 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரடெனியா
இன்ஸ்ரிரியூட் - கொக்குவில்
O/L 89
கணிதம்
திரு. இரா. அருட்செல்வம்
விஞ்ஞானம்
திரு. முருகதாஸ்
தமிழ்
திரு. பொன்னுச்சாமி
ஆண்டு 6; 7, 8, 9, 10 வகுப்புகளும்
நடைபெறுகின்றன.

சஞ்சீவி சஞ்சிகை

04 - 02 - 1989 சனிக்கிழமை

பெரடெனியா
இன்ஸ்ரிரியூட் - கொக்குவில்
O/L 89
ஆங்கிலம்
திரு. தேவராஜா
சமூகக்கல்வி
திரு. வேலாயுதபிள்ளை
வர்த்தகமும் கணக்கியலும்
திரு. டகேஸ்
புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.

## சுதந்திரம்

மனிதன் பிறக்கும் போது சுதந்திரமாகவே பிறக்கின்றான். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சுதந்திரங்களை அனுபவிக்கும் உரிமையுடனேயே பிறக்கின்றான்.

ஆண்டவன் சிருஷ்டியில் எந்த ஜீவராசியும் உரிமைகள் இன்றி, எவருக்கும் எவரும் அடிமை என்ற நிலையில் படைக்கப்படுவது இல்லை.

ஆனால் அந்த இயற்கைச் சிருஷ்டியை மீறி படைப்பு இலக்கணத்தை மீறி, மனிதரில் ஒரு சாராரே, ஏனைய சாரார் மீது அடிமைத்தனத்தைத் திணித்து, அவர்களின் சுதந்திர உரிமைகளைப் பறித்து விடுகிறார்கள்.

வானத்தில் பறந்து திரியும் வண்ணக் கிளியைப் பிடித்து தனது விருப்பப்படி, தனது தேவைக்காகக் கூண்டில் அடைத்து அதில் இன்பம் காண்கிறான். இயற்கையின் இலக்கண நெறியை மீறி அதனை அடைத்து வைத்து இன்பம் அனுபவிக்கிறான். அந்தக் கூண்டுக்கிளியின் துன்பத்தில் இவன் இன்பம் காண்கிறான்.

இந்தக் கொடிய வியாதியே; மனிதன் மனிதனை அடிமைப்படுத்தும் அநியாயத்துக்கு அத்திவாரமும் ஆகிறது. ஒருவன் அடுத்தவனின் சுதந்திரத்தைப் பறித்து தான் நன்மை அடையவும், லாபம் ஈட்டவும், அதில் ஒருவித இன்பம் காணவும் முனைகிறான்.

சுதந்திரத்தை மறுப்பது அல்லது உரிமைகளை மறுப்பது வீடுகளிலேயே ஆரம்பமாகிறது; கணவன் மனைவியை அடக்கி ஆள விரும்புகிறான். மனைவி மருமகளை அடக்கி வைத்துத் தனது விருப்பப்படியே மகனின் குடும்பம் நடக்க வேண்டும் என்று விரும்புகிறாள். அண்ணனே தம்பி தனக்கு அடங்கி நடக்க வேண்டும் என நினைக்கிறான்.

இந்த இயல்பு வீட்டிலிருந்து சமுதாயத்திற்குப் பரவுகிறது. சமூகத்திலிருந்து நாடளாவப் படர்கிறது. அது நாட்டுக்கு நாடு வளர்ந்து சர்வதேச மட்டத்துக்கு வியாபிக்கிறது.

சாதி, சமய, சமூக, இன, தேசிய, சர்வதேசிய ரீதியான அடிமைப்படுத்தல், அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புகள் உலகின் பெரும் பகுதி மக்களின் பல வகையான சுதந்திரங்களையும் பறித்துள்ளதைக் காண்கிறோம். அதனால் அவர்கள் அரசியல், பொருளியல், சமூகவியல் உட்பட பல துறைகளில் உரிமை இழந்தவர்களாக ஒடுக்கப்படுகிறார்கள்.

ஒடுக்கப்படுபவர்கள் தங்கள் சுதந்திரத்துக்கும், உரிமைகளுக்கும் போராட முனைவது இயல்பு. அதனால் தான் உலகின், நாடுகளின், பிரதேசங்களின் மூலை முடுக்கெல்லாம் குழப்பமும் அமைதியின்மையும் தலைவிரித்தாடுகின்றன.

தனக்குள்ள சுதந்திரமும் உரிமைகளும் மற்றவனுக்கும் உண்டு; அவனும் அவற்றை அனுபவிக்க உரித்துடையவன் என்ற சிந்தனை, உணர்வு தனிமனிதன் ஒவ்வொருவனிடமும் உண்டாகும் வரை. உலகம்- உலக மக்கள் - அமைதியில்லாமல் சஞ்சலத்திலேயே கிடந்து உழல்வர் என்பது திண்ணம். ★

# ஸ்ரீராமபிரானுக்கு மட்டுமே தெரிந்த அன்னை கைகேயின் தியாக வரலாறு!

இராமாயணம் நம் எல்லோருக்கும் தெரிந்த கதை. அதில் வரும் கதாபாத்திரங்கள் நமக்குப் பரிச்சயமானவர்கள்தான்.

ஆனால் அந்தக் கதையில் பொதிந்து கிடக்கும் சம்பவங்கள் — கதாபாத்திரங்களின் உண்மைப் பரிமாணம் ஆகியவை. பல்வேறு காலத்தில், பல்வேறு வியாக்கியான கர்த்தாக்களாலும், உபந்நியாசகர்களாலும் நமக்கு பல விதமாகச் சொல்லப்பட்டு வருகிறது

அப்படிச் சொல்லப்பட்ட விதங்களில் இருந்து ஒரு புதிய கோணத்தில் கைகேயியின் கதையைப் பார்ப்போம்.

### புதிய கோணம்

தசரதனின் மூன்று மனைவிமார்களில இளையவள் கைகேயி. அழகே உருவானவள். அறிவாற்றலில் சிறந்தவள். வீரமும் விவேகமும் கொண்டவள். தன் அன்பாலும்; பாசத்தாலும், நேசத்தாலும் தசரதன் உள்ளத்தில் மட்டுமல்லாமல் அனைவர் உள்ளத்திலும் இடம்பெற்றவள் எல்லாவற்றிற்கும் மேலாக கோசலையின் புதல்வன் இராமனிடத்தில் அதிகமான பற்றும் பாசமும் கொண்டவள்.

இராமனைப் பெற்ற தாய் கோசலை. ஆனால் வளர்த்த தாய் கைகேயிதான்.

பெற்றதாய் பரதனிடம் காட்டும் அன்பையும் பரிவையும்விட, இராமனிடத்தில் அவள் அதிக அளவு ஈடுபாடு கொண்டிருப்பதை எண்ணி தசரதன் பெரிதும் மகிழ்ந்தான். அதன் பொருட்டு அவன் கைகேயியிடத்தில் அதிக மதிப்பும் நேசமும் காட்டினான்.

இத்தனையும் உண்மையாய் இருக்க ஒரே இரவில் 'இராமனுக்குப் பதிலாக தன் மகன் பரதனுக்குப் பட்டம் சூட்ட வேண்டும் என்றும், பதினான்கு வருடங்கள் இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்றும் தசரதனிடம் இரண்டு வரங்கள் கேட்டு இராமனுக்கு மட்டுமல்லாமல் தன் மகன் பரதனுக்கும் தீங்கிழைக்கும் கொடிய செயலை கைகேயி புரிந்திருக்கிறாள் என்றால் எப்படி நம்பமுடியும்?

### விவேகமிக்க கைகேயி

மந்தரை என்றொரு கூனி, கைகேயின் தாதியாக இருந்தவள். அவளிடம் அரைமணி நேரம் பேசியதன் விளைவாகவே விவேகமிக்க கைகேயி மனம்மாறி, அருமை மகன் இராமனைக் காட்டிற்கு அனுப்ப விரும்பினாள் என்பதில் அக் கதாபாத்திரத்தின் உயர்வே அழிந்துவிடுகிறது.

ஏதோ பேராசை காரணமாகத் தன் மகனுக்கு அரச பதவி தேடித் தர வேண்டும் என்று விரும்பி அதன் பொருட்டு கைகேயி தசரதனிடம் வரம் கேட்டிருக்கலாம். அல்லது வாதாடி பரதனுக்கு முடிசூட்ட வைத்திருக்கலாம். ஆனால் இராமனைக் காட்டுக்கு அனுப்பும்படி சொல்ல அந்தத் தாய்க்கு மனம் எப்படி வந்திருக்கும்? சற்றுச் சிந்தித்துப்பார்க்கவேண்டும்

### பின்னணி

கைகேயி எத்தகையவள் என்பதை விளக்க அருமையான ஒரு சம்பவம்.

சம்பர சுரன் என்ற அசுரனுடன் ஒரு சமயம் தசரதன் போர் புரிந்தபோது வீராங்கனை கைகேயி அவனது தேரைச் செலுத்தும் சாரதியாகப் பணிபுரிந்தாள்.

அப்போது தன் உயிரைப் பணயம் வைத்து தசரதன் உயிரைக் காத்தாள்.

கணவன் மீது அவள் கொண்டிருந்த பக்திக்கும் பாசத்துக்கும் இதைவிட வேறு எடுத்துக்காட்டு வேண்டுமா?

அவளுடைய பதிபக்தியையும் தியாகத்தையும் மெச்சியே தசரதன் அவளுக்கு இரு வரங்கள் அளித்தான்.

அவள் பேராசைக்காரியாக இருந்திருந்தால், உடனே அந்த வரங்களைக் கேட்டுப் பெற்றிருக்கலாம்.

'நானே பட்டமகிஷியாக வேண்டும்; எனக்குப் பிறக்கும் குழந்தைக்கே முடிசூட்ட வேண்டும்'— இப்படி அவள் அப்போதே கேட்டிருக்கலாம். ஆனால் கைகேயி அப்படிச் செய்யவில்லை.

கணவனுக்குச் செய்த சேவை தன் கடமை என்று உணர்ந்து 'வரங்கள் இப்போது வேண்டாம். தேவைப் பட்டால் பின்னால் கேட்டுப் பெற்றுக்கொள்கிறேன்'— என்று பெருந்தன்மையாகக் கூறிவிட்டாள்.

### தியாக உருவம்

அத்தகையவளா இத்தகைய கொடிய வரங்களைப் பெற்று இருப்பாள்?

தியாகமே உருவான கைகேயி ஒரு நாள் இரவில் சுயநலப் பேயாக ஏன் மாறினாள்?

பாசமே உருவானவள் ஆசைக்கு அடிமையாகி, ஏன் பாதகச் செயல் புரிந்தாள்?

அதற்கு ஒரு காரணம் இருந்தது. அதன் பின்னே யாரும் அறியாத சம்பவங்கள் புதைந்துகிடந்தன.

ஒருமுறை வேட்டையாடச் சென்றிருந்த தசரதன் தவறுதலாக சரவணகுமாரன் என்ற சிறுவனை அம்பு எய்து கொன்றுவிட்டார். கமண்டலத்தில் தண்ணீர் முகந்த சத்தம் யானை தண்ணீர் குடிப்பது போலக் கேட்டதால் தூரத்தில் இருந்து தசரதன் எய்த 'சப்தவேதி' என்ற பாணம் சிறுவன் உயிரைப் போக்கிவிட்டது. மகனை இழந்த துயரத்தில் சிறுவனின் பெற்றோர் எம்மைப்போலவே புத்திரனைப்பிரிந்து அந்தச் சோகத்தில் உயிர்துறப்பாய்'- என்று தசரதனுக்குச் சாபமிட்டுவிட்டு உயிர்துறந்து விட்டனர்.

தசரதன் உள்ளத்தைக் கறையான்போல் அரித்துக் கொண்டிருந்த சம்பவம் அது. வேட்டையில் இருந்து திரும்பிய தசரதன், சொல்லமுடியாமல் கலங்கிக்கொண்டிருந்த காரணத்தை தன் விவேகத்தால் கைகேயி ஊகித்துக் கொண்டாள்.

சாபம் பற்றிய உண்மை தெரிந்து கைகேயி பதறினாள். துடித்தாள்.

புத்திரன் என்று பொதுப்படையாகவே குறிப்பிடப்பட்டதால், அது தசரதன் பெற்ற புதல்வர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம் அல்லவா?

### சோதிடர் ஆலோசனை

இதன் உண்மைகளை அறிய கைகேயி விரும்பினாள். அந்தரங்கமாக ஜோதிட விற்பன்னர்களை அழைத்தாள். தசரதன் ஜாதகத்தையும் குழந்தைகள் ஜாதகங்களையும் கொடுத்து ஆராயச் சொன்னாள். அப்போது சில உண்மைகளைத் தெரிந்துகொண்டாள்.

தசரதன் உயிரினும் மேலாக நேசித்துவரும் இராமனுக்கு மரணம் நேர்ந்து, அதனால் தசரதன் உயிர்நீத்துவிடலாம் என்பதே அந்த ஊகம்.

'புத்திரனைப் பிரிந்து' என்றிருந்தால், சாஸ்திர விற்பன்னர்கள் அதற்கு மற்றொரு பரிகாரமும் கூறினார்கள்.

ஒருகால் புத்திரன் தந்தையைவிட்டு வெகுதூரம் பிரிந்துசென்றுவிட்டால், அதனால்புத்திரன் உயிர் பிழைக்கவும் தந்தைஅப்பிரிவால் உயிர் துறக்கவும் நேரலாம் என்று வியாக்கியானம் தரப்பட்டது.

தசரதன் உயிர் துறப்பது சாபத்தால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத நியதி என்பதைக் கைகேயி தெரிந்துகொண்டாள்.

### தாய்மை தலைதூக்கல்

மனைவியின் கடமையைவிட தாய்மையின் அன்பு அங்கே தலைதூக்கிநின்றது.

இராமனை மட்டும் தசரதனிடமிருந்து பிரிக்க நினைத்தால், அதற்குச்சரியான காரணம் காட்டவேண்டுமே?

அதற்காகத் தியாகமும் அன்பும் உருவான அந்தத் தாய், தன்னையே உலகோர் 'பேராசைப்பேய்' என்று நிந்தித்தாலும் பரவாயில்லை என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு. பரதனுக்கு முடிசூட்டக்கோரி, அதற்குத் தடையில்லாதபடி இராமனைக் காட்டுக்கு அனுப்பச்சொல்வதுபோல் இருக்கட்டும் என்று முடிவுசெய்து; வரம் கேட்டாள்.

ஒருவேளை அவள் கூனியுடன் கலந்தாலோசித்தது, இதன் விளைவுகள் பற்றித்தான் என்னவோ!

கைகேயி வரங்களைக் கேட்டாள். தசரதன் மன்றாடினான்.

'விருப்பமில்லை என்றால் பரதனுக்கு முடிசூட்ட வேண்டாம். ஆனால் ராமன் மட்டும் காட்டிற்குப் போய்த்தான் ஆகவேண்டும்''— உறுதியாகக் கேட்டாள் கைகேயி.

### அவதாரப் பணி

மகன் ராமனைக் காப்பாற்ற மாங்கல்யத்தையே இழக்கத் துணிந்தாள் கைகேயி. இது ராமன் மீது கொண்ட பற்றினால், பாசத்தினால் மட்டுமல்ல. ராமன் அயோத்தியின் குழந்தை என்பதால், அவன் அவதாரப்பணி நிறைவேற வேண்டும் அல்லவா!

மரவுரி தரித்து சீதையும் லட்சுமணனும் பின் தொடர ராமன் கானகம் செல்கிறான். ஊரே அழுகிறது. கைகேயியின்கண்களில் இருந்து மட்டும் சிந்திய கண்ணீர் ராமனுக்காக அல்ல; தன்னை நிரந்தரமாகப் பிரியப்போகும் கணவனுக்காக.

தேவர் பூமாரி பொழிந்தனர். அவதாரப்பணி ஆரம்பித்து விட்டது என்று எண்ணி, அதற்காகக் கைகேயியை மனதார வாழ்த்தினர். ஆனால் உலகோர் கைகேயியைப் பழித்தனர்; நிந்தித்தனர். அண்ணல் ராமனுக்கு மட்டும் அவள் தியாகம் என்ன என்று தெரியும்.

### குகனுக்குத் தெரிந்த உண்மை

ஆரண்ய முனிவர்களுக்கெல்லாம் அவள் பெருமை தெரியும். ஏன், ஏழை வேடன் குகனுக்குக்கூட அவள் உயர்வு தெரியும்.

அதனால்தான் கைகேயியை முதல் முதலில் சந்திக்கும் போது, குகன் அவள் காலடிகளில் விழுந்து நமஸ்கரித்தான். எல்லோரும் அதிசயித்தனர்.

குகன் சொல்கிறான்:

என்னைப் பொறுத்த வரையில் இவர்கள்தான் என் தாய். இவர்கள் இல்லாவிடில் இந்த ஏழை வேடன் ராமபிரானைக் கண்டிருக்க முடியுமா? என்னை அவர் 'தம்பி' எனத் தழுவிக் கொண்டதற்கு இத் தாயல்லவா காரணம்?''–

இப்போது சிந்தியுங்கள். கைகேயி கொடியவளா? ★

— ரி. எஸ். என்

# செவ்வாயின் இரு 'சந்திரன்'கள்

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தின் பிரபல கதாசிரியர் ஜொனதன் ஸ்விஃப்ட் (Jonathan Swift) தொடர்ச்சியாகப் பல கதைகளை எழுதினார்.

அவரது கதையில் வருகின்ற கலிவர் என்னும் கதாநாயகன் விசித்திரமான பல உலகங்களுக்குச் செல்வதையும், அங்கு அவனுக்கு ஏற்படுகின்ற அனுபவங்களையும் அக்கதைகள் வேடிக்கையாக விவரிக்கின்றன.

அக்கதைகளுக்கு 'கலிவரின் பயணங்கள்' (Gulliver's Travels) என்பது பொதுவான தலைப்பு.

கலிவர் ஒரு சமயம் 'வானில் மிதக்கும்' ஒரு தீவுக்குச் செல்கிறான். அக்கற்பனைத்தீவின் பெயர் லாபுட்டா (Laputa). செவ்வாய்க் கிரகத்தை இரு துணைக்கோள்கள் சுற்றுவதாகவும், அதைத் தாங்களே கண்டு பிடித்துவிட்டதாகவும் அத்தீவைச்சேர்ந்த விஞ்ஞானிகள் கலிவரிடம் கூறுகின்றனர்.

'திவொயேஜ் டுலாபுட்டா' The Voyage to Laputa) என்னும் இக்கதையை ஜொனதன் ஸ்விஃப்ட் 1727 ஆம் ஆண்டில் எழுதினார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஸ்விஃப்ட் தமது கதையில் அப்படி எழுதினரே தவிர; உண்மையில் செவ்வாய்க்கிரகத்துக்கு இருதுணைக்கோள்களைக் கண்டுபிடிக்கக் கூடியஅளவுக்கு அப்போது சக்திமிக்க தொலைநோக்கிகள் உருவாக்கப்படவில்லை.

### கற்பனையில்

செவ்வாய்க் கிரகத்தின் இரு துணைக்கோள்களும் தாய்க் கிரகமான செவ்வாயிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளன; அவை தமது அச்சில் சுழல எவ்வளவு மணிநேரமாகிறது என்பதையெல்லாம் ஸ்விஃப்ட் தமது கதையில் எழுதியிருந்தார்.

ஸ்விஃப்ட் 1745 இல் காலமானதற்குப் பிறகு 5 ஆண்டுகள் கழித்து பிரபல பிரெஞ்சு நாவலாசிரியர் வால்டேர் (Voltaire) தமது ஒரு நாவலில் செவ்வாய்க் கிரகத்துக்கு இருதுணைக்கோள்கள் உள்ளதாக எழுதியிருந்தார்.

ஜொனதன் ஸ்விஃப்ட் தமது கதையைப் பிரசுரித்த 150 ஆண்டுகளுக்குப் பிறகுதான் உண்மையில் செவ்வாய்க் கிரகத்தின் இருதுணைக்கோள்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

எனவே ஸ்விஃப்டும் வால்டேரும் செவ்வாய்க்கு இரு துணைக்கோள்கள் உள்ளதாக எவ்விதம் எழுதினர் என்பது சுவையான கேள்வியாகும்.

இந்த இருவரும் வெறும் ஊகத்தின் அடிப்படையில் தான் அவ்விதம் எழுதியிருக்க வேண்டுமென்பது அறிஞர்களின் கருத்து.



போபோஸ் சந்திரனின் ஒரு தோற்றம்

செவ்வாய்க்கு இருதுணைக்கோள்கள் இருந்தாகவேண்டும் என்று பிரபல வானியல் விஞ்ஞானி கெப்லர் (Kepler) ஏற்கெனவே கூறியிருந்தார்.

ஸ்விஃப்டும் வால்டேரும் வாழ்ந்த காலத்தில் வியாழனைச் சுற்றும் துணைக்கோள்களில் நான்கும், சனியைச் சுற்றும் துணைக்கோள்களில் ஐந்தும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

பூமியை அதன் துணைக்கோளான சந்திரன் சுற்றுகிறது; வியாழனை நான்கு (அப்போதுதெரிந்தவரையில்) துணைக் கோள்கள் சுற்றுகின்றன.

எனவே பூமிக்கும் வியாழனுக்கும் நடுவே அமைந்த செவ்வாய்க்கு இருதுணைக் கோள்கள் இருந்தாகவேண்டும் என்று ஸ்விஃப்ட் குருட்டாம்போக்கில் கணக்குப் போட்டார்.

அவரது அந்த ஊகம் சரியே என்பது பின்னர் ஊர்ஜிதமாகியது.

### இரண்டு 'சந்திரர்கள்'

பூமியைச் சந்திரன் சுற்றுவதுபோல செவ்வாயை 'இரு சந்திரன்கள்' அதாவது இரு துணைக்கோள்கள் சுற்றுகின்றன என்பதை உண்மையில் கண்டுபிடித்தவர் ஆஸோப் ஹோல் (Asoph Hall) (1829-1907) என்னும் அமெரிக்க விஞ்ஞானி ஆவார். 1877ஆம் ஆண்டில் அவர் இவ்வாறு கண்டுபிடித்தார்.

அந்த ஆண்டில் செவ்வாய்க் கிரகமானது பூமிக்கு மிக அருகில் இருந்தது (1988 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி அதேபோல அருகில் இருந்தது அப்போது செவ்வாய்க்கிரகம் பூமியில் இருந்து சுமார் 5.84 கோடி கிலோமீற்றர் தொலைவில் இருந்தது.)

செவ்வாய், பூமிக்கு அருகே அமைந்திருந்த வாய்ப்பைத் பயன்படுத்தி வானியல் விஞ்ஞானிகள் பலரும் தொலைநோக்கியின்மூலம் செவ்வாயை ஆராய்ந்தனர்.

அவர்களில் ஒருவரான ஆஸோப் ஹோல், செவ்வாய்க்குத் துணைக்கிரகங்கள் உள்ளனவா என்பதை ஆராய முற்பட்டார்

சக்திமிக்க தொலைநோக்கியைப் பயன்படுத்தும் வசதி அவருக்கு இருந்தது.

1877 ஆம் ஆண்டு ஆகஸ்ட் ஆரம்பத்திலிருந்தே அவர் அக்கிரகத்தைச் சுற்றியுள்ள வான்பகுதியை உன்னிப்பாக ஆராய்ந்தார்.

தொடர்ந்து பல நாள்கள் இரவில் விடிய விடியக் கண் விழித்து ஆராய்ந்ததில் பலன் எதும் கிட்டவில்லை. அவரது தொலைநோக்கி சக்திமிக்கதாக இருந்ததால் அது செவ்வாய்க் கிரகத்தின் பிரகாசத்தைப்பல மடங்கு பெருக்கிக்காட்டியது. இதனால் செவ்வாய்க் கிரகத்துக்கு அருகில் உள்ளவற்றை ஆராய்வதில் பிரச்சினை ஏற்பட்டது. ஆகஸ்ட் 10 ஆம் திகதி அவர் கிட்டத்தட்ட தமது முயற்சியைக் கைவிட்டார்.

### மனைவி கொடுத்த ஊக்கம்

எனினும் அவரது மனைவி ஹோலுக்கு ஊக்கம் அளித்து மேலும் ஒருநாள் தேடுமாறு கூறினார்: அந்த விஷயத்தில் ஹோல், தனது மனைவியின் பேச்சைக் கேட்டது நல்லதாய்ப் போயிற்று.

மறுநாள் இரவு (1877 ஆகஸ்ட் 11 ஆம் திகதி அவரது தொலைநோக்கியில் செவ்வாய் அருகே மங்கலாக ஒரு துணைக்கோள் தென்பட்டது. எனினும், அதனை அவரால் விரிவாக ஆராயமுடியாத வகையில் மூடுபனி தடுத்தது.

(மிகுதி அடுத்த வாரம்)

— ரா. குருசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறைக்குள் தீபம் ஒன்று

சஞ்சீவி சிறுகதை

காற்றின் வேகம்,மண்ணை என் கண்கள் மேல் தூவியது. காற்றுக்கூட என் கண்ணீரைக் கலக்க முயன்றதுவோ. மீண்டும் மீண்டும் என்னைச் சுதாரித்துக்கொள்ள முயல்கிறேன். என் கண்ணைக் கண்ணீர் எனும் திரை மறைக்கின்றது. கைகளின் உதவியுடன் எனக் கருகிலுள்ள கல்லில் எழுதப்பட்ட எழுத்துக்களைப் படிக்கிறேன். அதுநிச்சயமாகச் செபஸ்ரியன் ஜான் என உறுதி செய்து கொள்கின்றேன் என் நினைவில் மீண்டும் மீண்டும் அவன் தோன்றுகின்றான்.

ஜான் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன். தந்தையார் ஒரு பட்டதாரி ஆசிரியர், ஒரே ஒரு பிள்ளை, மெலிந்த தோற்றம், அமைதியான சுபாவம், சிந்தனையுடன் இணைந்த உறுதியான அளந்த சொற்பிரயோகம். முற்போக்கில் சற்று மற்றவர்களை விட ஒரு படி உயர்ந்தவன்.

சிறுவயது முதலே இருவரும் ஒன்றாகவே படித்ததில் எம் நட்பு நன்றாக வளர்ந்திருந்தது. நான் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என் தந்தையார் ஒரு பாரிசவாத நோயாளி, அம்மா, ஒரு தங்கை, இதுதான் என் குடும்பம்.

ஜான் எல்லோருடனும் பழகமாட்டான் எனக்குத் தெரிந்த வரையில் என்னுடன் மட்டுமே அதிகம் பழகினான். ஜீ. சீ. ஈ. உயர்தரப் படிப்பு முடித்த இருவரும் தொடர்ந்து கணக்கியல் துறையில் படிக்க முடிவு செய்து ஒரு தனியார் கல்வி நிலையத்தில் படித்து வந்தோம். பகுதி I பரீட்சைக்கு நெருங்கியது. விண்ணப்பிப்பதற்கான கடைசிநாள். ஜீவா இன்று விண்ணப்பிப்போம் என்று ஜான் கூறினான்.

'இம்முறை நான் பரீட்சை எடுக்கவில்லை. அடுத்த தடவை தான் எடுக்கப்போகின்றேன்' என்றேன்.

சிந்திக்கின்ற சக்தி அதிகமான ஜான் நான் ஏன் விண்ணப்பிக்கவில்லை என்பதை அறிந்து கொண்டான். தனக்காக வைத்திருந்த பணத்தை என்னிடம் தந்தான். நான் இயன்றவரை மறுத்தேன். அவன் விடவில்லை.

'நீ இப்பணத்தைப் பெற்று விண்ணப்பிக்காவிட்டால் நான் உன்னுடன் கதைக்கப் போவதில்லை: அடுத்த முறையும் இப்பரீட்சையை எடுக்கப் போவதில்லை' என்றான். எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. முடிவில் அவன் வென்றான்.

நான் பரீட்சை எழுதினேன். அவன் எழுதவில்லை. நான் பரீட்சையில் சித்தியடைந்திருந்தேன். முடிவை அவனிடம் சென்று கூறினேன். அவன் என்னை விட அதிகம் சந்தோஷப்பட்டான். அத்துடன் எனக்கு கொழும்பில் ஒரு வேலை எடுத்துத்தருவதாகவும் நான் அங்கேயே பகுதி II கணக்கியல் பரீட்சையைப் படித்து எடுத்தால் சித்தியடைவது இலகுவாக இருக்கும் எனவும் கூறினான். அவன் கூறியபடியே சிலநாட்களில் கொழும்பில் எனக்கொரு வேலை எடுத்துத் தந்தான்.

ஜான் இம்முறை கட்டாயம் தேர்வு எழுத வேண்டும் என்ற வாக்குறுதியுடன் நான் கொழும்பு சென்றேன். கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டோம்.

அவன் பகுதி I பரீட்சை எழுத அடுத்த கிழமை வருவ



தாகக் கடிதத்தில் அறிவித்திருந்தான். அடுத்த கிழமை ஏழு தினங்களும் நான் அவனுக்காகப் புகையிரத நிலையம் சென்று வந்தேன். ஆனால் அவன் வரவில்லை. பகுதி I பரீட்சையும் முடிந்துவிட்டது நானும் பகுதி II பரீட்சையும் எடுத்து விட்டேன். சில நாட்களில் அவனின் கடிதம் கிடைத்தது.

தனக்கு உடல் நிலை சரியில்லாததால்தான் வர முடியவில்லை மன்னிக்கவும் என்று எழுதி இருந்தான்.

அடுத்த நாள் அம்மாவின் கடிதம் வந்தது. அதில் என் அப்பா இறந்துவிட்டார் என்றும், இறக்க முன்பு கடும் சுகயீனத்தால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஜான் தான் முழு உதவியும் செய்தான். என் தந்தை இறந்த பின் நான் செய்ய வேண்டிய சகல கடமையையும் ஜானே செய்தான் என்றும், எனக்குப் பரீட்சை தொடங்குவதால் அறிவிக்க வேண்டாம் என்றும் பிடிவாதமாகக் கூறிவிட்டானும் என்றும் எழுதியிருந்தது என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை.

அடுத்த தினம் யாழ் நகரை நோக்கிப் புறப்பட்டேன் ஜான் எனக்காக புகையிரத நிலையத்தில் காத்திருந்தான் என்னைக் கண்டவுடன் அழுதான். வீட்டுக்குச் சென்றோம். எல்லோரும் அழுதார்கள். ஆனால் நான் மட்டும் அழவே இல்லை ஜான் திகைத்துவிட்டான்.

'உனக்கு அழுகை வரவில்லையா? நான் இறந்தாலும் அழமாட்டாயா' என்று கேட்டான்.

நான் அழுதேவிட்டேன். ஜானும் என்னைப்பார்த்து அழுதுவிட்டான். எனது லீவும் முடிந்துவிட்டது. நான் கொழும்பு செல்ல புகையிரதத்தில்ஏறிவிட்டேன். அம்மா தங்கை ஜான் மூவரும் வந்திருந்தார்கள்.

ஜானிடம் இம்முறை நீ கட்டாயம் பரீட்சை எடுக்க வேண்டும் என்று இம்முறையும் உறுதி வாங்கிக் கொண்டேன். அவனும் உறுதி கூறினான். அம்மாவும் தங்கையும் நான் செல்வதையிட்டு அழுதார்கள். ஆனால் அவன் மட்டும் சிரித்துக்கொண்டே இருந்தான்.

'ஏன் சிரிக்கிறாய்'! என்று கேட்டேன் அடுத்த முறை உன்னை யாழ் நகரில் சந்திக்கின்றபோது நீ படிப்பு முடிந்து பெரிய பதவிக்கு வந்துவிடுவாய் என்றான். ஜானின் நினைவுடனேயே கொழும்பு வந்து சேர்ந்தேன்.

கொழும்பு நகரில் இயந்திரப் போக்கில் காலம் சென்று கொண்டிருந்தது. பகுதி I கணக்கியல் பரீட்சைக்கு முதல்கிழமை ஜானுவின் கடிதம் கிடைத்தது. அடுத்த கிழமை தான் பரீட்சை எடுக்க வருவதாகவும் எனது கடைசிப் பரீட்சைக்கான வாழ்த்துக்களுடன் எழுதி இருந்தான்.

அவனை வரவேற்பதற்காக புகையிரத நிலையம் சென்று திரும்பினேன். ஆனால் அவன் இம்முறையும் வரவில்லை அவனது பரீட்சையும் முடிந்து என்னுடைய பரீட்சையும் முடிந்தது.

வீடு செல்வதற்காக மனேஜரிடம் லீவு கேட்டேன் அவர் அதற்கு ஒரு மாதம் இங்கு அதிக வேலையிருப்பதால் இவ் வேலையை செய்யும்படியும் நான் இம்முறை பரீட்சையில் சித்தியடைந்தால் யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் கிளைக்கு மாற்றம் தந்து உயர்பதவி தருவதாகவும் கூறினார்.

இந்நேரத்தில் வீட்டுக்கும் ஜானுக்கும் பல கடிதங்கள் எழுதினேன், அனால் எப்பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை. பரீட்சையிலும் சித்தியடைந்தேன். மனேஜர் கூறியபடி யாழ்ப்பாணம் சென்றேன்.

ஜானுவுக்கு இந்தச்செய்தி அதிக சந்தோஷத்தை உருவாக்கும் என்ற நினைவுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன்!

புகையிரத நிலையத்தில் என் ஜானுவைத் தேடினேன். அவனைக் காணவில்லை. மீண்டும் மீண்டும் புகையிரத நிலையத்திலுள்ள மக்கள் நடமாட்டமுள்ள சகல பகுதிகளையும் பார்த்தேன் அவன் வரவில்லை, பஸ் ஏறி என் கிராமத்தில் வந்து இறங்கினேன்.

அக்கம் பக்கம் என் ஜானுவைத் தேடினேன். என் ஜானுவைக் கண்டுகொண்டேன் அவனிடம் ஓடினேன். சில நிமிடங்களுக்கு பின்தான் அறிந்து கொண்டேன் அது ஜான் அல்ல, ஜானின் படம் என்பதை அப்படத்திற்கு மேல் வீரவணக்கம் என்று பெரிதாக எழுதி இருந்தது.

என்னால் என்னையே நம்ப முடியவில்லை வீட்டைநோக்கி ஓடினேன். அம்மாவும் தங்கையும் என்னைப் பார்த்து அழுதார்கள். நானும் கதறுகின்றேன். மீண்டும் பாதையில் என்னையறியாமல் ஓடுகின்றேன்.

அவனின் கல்லறையை நோக்கி ஓடினேன். அவனின் கல்லறை எனக்கு இப்போது தெரிந்துவிட்டது. அதை நான் உறுதிசெய்துகொண்டேன் ★

(யாவும் கற்பனை)

- சுஜந்தன் -

# குயில்களின் குமுறல்!

காட்டில் இரு குயில்கள்
காதலித்து; எந்தவொரு
எட்டிலும் பதிவுவைத்து
இணையாமல் தங்கள்தங்கள்
பாட்டிலே மணம்புரிந்து
பலகாலம் வாழ்கையிலே
பேட்டுக் குயிலொருநாள்
பெருந்துன்பம் எய்தியது!

பார்த்திருந்த ஆண்குயிலார்
பதறித் துடித்துனக்கு
நேர்ந்தகதி என்னவென்று
நெக்குருக வேண்டியதும்
'நேசரே, கருவயிற்றில்
நிறைந்தென்னைக் கொல்கிறதே!
மோசமொன்றும் வாராமல்
முட்டை நான் இடுவதெங்கே?

காக்கைகளின் அட்டகாசம்
கண்டவள்நான்; ஆனதினல்
காக்கையதன் கூட்டிலிட்டால
கட்டாயம் நமது குஞ்சு
ஏக்கத்தில் செத்துவிடும்!
எமதினத்தின் தலைவிதியே
சாக்காடு போவதுவோ
சிந்தித்துப் பார்த்திடுவீர்!

பற்றை,புல், மண்தரையில்
பேசாமல் முட்டையிட்டால்
சற்பத்தின் தொல்லையுண்டு!
சண்டாள விலங்குகளும்
விட்டிடுமா சொல் துரையே!
வேண்டுமென்று நமையிறைவன்
விட்டுவிட்டான் சாவதற்கு
வேறுவழி ஒன்றிலேயே!

நம்முன்னோர் மூளையென்ன
நாய்மூளை தானோ!
எம் பின்னால் வருகின்ற
எமதினத்தார் சுதந்திரமாய்
இம்மண்ணில் வாழ்வதற்கும்,
இனவிருத்தி செய்வதற்கும்
சும்மாச்சும் ஓர் வழியைச்
சொல்லாமல் போனாரே!'

என்று சொல்லிப் பெண்குயிலாள்
ஏங்கித் தவிப்பதனை
கண்டு கொண்ட ஆண்குயிலார்
கண்கலங்கி, வானமதை
அண்ணாந்து பார்த்துடனே
'ஆண்டவா; எமதினத்தின்
கண்ணீரை மாற்று'' என்று
கவலையுடன் வேண்டியது!

— செ. குணரத்தினம்

# சூரிய விசையில் ஓடும் கார்!

அடுத்துவரும் இருபது முப்பது ஆண்டுகளுக்குள்ளாக அறிவியல்; வாணிபம் மற்றும் தொழில் துறைகளில் புரட்சிகர மாறுதல்கள் ஏற்படும் என்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.

நிலாவிலே மனிதனின் மேற்பார்வையின் கீழ் 'அறிவியல் தளம்' ஒன்று ஏற்பட்டுவிடும்; கம்பியூட்டர் நுட்பங்கள் பொருந்தியதும் சூரிய விசையால் இயங்கக்கூடியதுமான கார்கள் பூமியில் ஓடலாம்.

பூமியின் ஒரு முனையிலிருந்து மற்றோர் முனையை 200 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் எட்டிவிடக்கூடிய ஹைப்பர்சானிக் விமானங்கள் பறக்கத்தொடங்கிவிடும்.

மிகுமின் கடத்தல்துறையிலும் மரபியல் நுட்பத்துறையிலும் வியப்பூட்டக்கூடிய பல கண்டுபிடிப்புகள் ஏற்பட்டு மனித வாழ்விலே முன்னப் போதும் கற்பனை கூடச் செய்திராத புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்கிவிடக் கூடும்.

எடுத்துக்காட்டாகப் பிரதான சாலைகளின் அடியிலே பொருத்தப்படக்கூடிய மின் காந்த டைனமோக்கள், அந்தச் சாலைகளின் மேலே ஓடும் மின்சார பஸ்களின் பாட்டரிகளுக்கு விசையூட்டி 'சார்ஜ்' செய்யக்கூடும். 'மின்னியக்கம்' செய்யப்படாத சாலைகளிலும் இதன் மூலம் அந்தப் பஸ்கள் நன்கு ஓடமுடியும்.

சூப்பர் கம்பியூட்டர்கள் சாதாரண காப்பி டப்பா' அளவுக்கு சுருங்கி விடக்கூடும்!

மின்சார மோட்டார்கள் இப்போது உள்ளவற்றைக் காட்டிலும் 50 சதவீதம் அளவுக்கு லேசானவையாக ஆகிவிடக்கூடும்.

அணுக்கரு இணைப்பு நுட்பம், சூரிய மின்விசைபோன்ற விசை பற்றாக்குறை என்னும் பிரச்சினையே ஏற்படாது.

பாரம்பரியமான புதைபடிவ எரிபொருள்களான பெட்ரோலிய, நிலக்கரி, எரிவாயு ஆகியவை இப்போது எதிர்பார்க்கப்படுவதைக்காட்டிலும் கூடுதலாக 20 ஆண்டுகளுக்கு கிடைக்கக்கூடும் பூமியில் இவற்றின் இருப்புகள் தீர்ந்துவிடுவதற்கு முன்பாக புதிய விசை ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுவிடலாம்.

மரபியல் துறையில் ஏற்படக்கூடிய புதிய கண்டுபிடிப்புகளும் மனித வாழ்வையே மாற்றிவிடக்கூடும்.

இப்போதைக் காட்டிலும் ருசிமிக்க உணவுப்பொருள்களும் உறுதிமிக்க மரவகைகளும் உருவாக்கப்படலாம்.

கம்பியூட்டர்கள் மற்றும் இதரசாதனங்கள் கூப்பிட்ட குரலுக்கு இயங்கக்கூடும்.

1995 ம் ஆண்டுக்குள் அமெரிக்காவில் 60சதவீத வீடுகளில் கம்பியூட்டர்கள் இருக்கும் என்று வர்த்தகக் கணக்கெடுப்புக்கள் தெரிவிக்கின்றன.

தற்போது 20 சதவீத வீடுகளில்தான் கம்பியூட்டர்கள் உள்ளன. ★


# VACANCIES

## Sales Representatives

We have successfully marketed Internationally reputes products for several years. We require young, energetic men to join the team as Sales Representatives.

Applicants should not be more than 35 years, sound education, ability to speak fluently in English, Sinhala and preferably Tamil. Experience in selling is necessary for early prospects of promotion. They will be handsomely rewarded by salary and commissions.

**APPLICANTS FROM NORTHERN AND EASTERN PROVINCES TO WORK IN THESE AREAS ARE ALSO REQUIRED.**

Candidates should be able to provide cash security or bank guarantee.
Applications close on 15th February, 1989
C/o Sanjeay


# நம்பிக்கை

சூரியன் மறைந்துவிட்டானே...
எனநான் மனம் கலங்கமாட்டேன்.
அதோ...
சந்திரன் உதயமாகிவிட்டான்!
அவனும் சரிந்துவிட்டானே
எனநான் சஞ்சலப்படமாட்டேன்
அதோ...
நட்சத்திரங்கள்
கண்சிமிட்டிக் கொண்டிருக்கின்றன!
அவர்களையும் காணவில்லையே...
எனநான் கண்கலங்கமாட்டேன்
அதோ...
மின்மினிப் பூச்சிகள்
ஒளித்துமிகளை
பனிக்கிக்கொண்டிருக்கின்றன!

—குமார் தனபால்




பெறுதற்கரியதொரு பெருநிதியாகத் தமிழுக்குக் கிடைத்தது தமிழ் மறையெனப் போற்றப்படும் திருக்குறள் அதன் சிறப்பைக்கண்ட பிறநாட்டினரும் தத்தம் மொழிகளிற் பெயர்த்து படித்து இன்புறுகின்றனர். இத்தகைய நிகரற்ற நூலால் தமிழ் சிறப்புறுகின்றது.

'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்ற பாரதி 'வள்ளுவன் தன்னையுலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடினான். இந்தப் புகழ்மாலையை மேடைக்கு மேடை பொழிந்துகாட்டி இறுமாப்படைகின்றனர் நம் தமிழ் அறிஞர்கள், கேட்போரும் கைதட்டி ஆரவாரஞ்செய்து ஆமோதித்து பெருமகிழ்வெய்துகின்றனர்.

ஆனால் இதில் குறைபாடொன்று தொனிப்பதை நாம் இனிமேலும் அவதானிக்காதவர்கள்போல் பாசாங்குசெய்து கொண்டிருக்க இயலாது. உலகில் மற்றநாடுகள் எல்லாம் திருக்குறளைப் போற்றிப்பாராட்டுகின்ற அளவுக்கு, வெளிநாடுகள் திருக்குறளின் பெருமைகளைத் தெரிந்திருக்கிற அளவுக்கு, மற்ற நாட்டினர் திருக்குறளிலிருந்து நன்மைகளைப் பெறும் அளவுக்கு தமிழ்நாடும் அதில் வாழும் தமிழரும் குறளின் பெருமையைத் தெரிந்துகொள்ளவில்லை–கடைப்பிடிக்கவில்லை.

வள்ளுவன் தமிழ்மகனாய்ப் பிறந்து தமிழ்மொழியிலே திருக்குறளை எழுதியிருந்தாலும்; பிறமொழியாளர் அவன் சிறப்பை உணர்ந்திருப்பதுபோல் தமிழர் இன்னும் உணரவில்லையென்றால் அது மிகவும் வருந்தத்தக்கதேயன்றோ?

தமிழ்நாடு வள்ளுவரை ஈன்றெடுத்தும்கூட, அவரை உலகத்துப் பிறநாட்டினர் பாராட்டும்படி அளித்துவிட்டுத் தனக்கும் பயன்தரவைத்துக்கொள்ளவில்லையே என்று வருந்துவது போன்ற தொனியினை 'உலகினுக்கே தந்து' என்ற சொற்றொடரிற்காணலாம். ஏகாரம் பிரிநிலை ஏகாரமாக ஆகிவிடாதபடி காக்கவேண்டியது தமிழர் கடனாகும். உலகுக்குத் தந்ததுபோல் தனக்கும் வள்ளுவரைப் பயன்தரும் விதத்தில் உரித்தாக்கிக்கொள்ளவேண்டியது தமிழ்நாட்டின் தள்ளற்கரிய பொறுப்பாகும்.

கந்தையா நவரேந்திரன்,
நக்காலேன்.


## தெரியுமா?

உலகில் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி தென் அமெரிக்காவில் உள்ள வெனிசுலா நாட்டிலுள்ளது இது தேவதையின் நீர் வீழ்ச்சி என்று அழைக்கப்படுகிறது 3212 அடி உயரத்தில் இருந்து ஆற்றில் விழுகிறது.


உஷா தையல் மெஷின் தொடர்



ரூபா 3850/-



எக்ஸெல்லா 30



எக்ஸெல்லா 55

ரூபா 7850/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சா அமிர்தம் பலரச அமிர்தம்

## ரேபரேலியில் சோனியா காந்தி

இந்த ஆண்டு கடைசியில் நடக்கவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் உத்தரப் பிரதேச மாநிலம் ரேபரேலித் தொகுதி முக்கியமானதாக இருக்கும்.

காரணம்: அங்கு பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா போட்டியிடப் போகிறார்.

இந்தத் தொகுதி முன்பு இந்திரா காந்தி தொகுதியாக இருந்தது.



சோனியா காந்தி

இந்தத் தொகுதிக்கு சோனியா காந்தி சமீபத்தில் போய்வந்திருக்கிறார்: தொகுதிக்கு நல்வாழ்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றன.

ரேபரேலி மாவட்டத்தில் தான் ராஜீவ்காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியும் இருக்கிறது. ★

## கொலை வழக்கில் வீடியோ சாட்சியம்!

உத்திரப்பிரதேச மாநிலம் மீரட் நகரைச் சேர்ந்த பிரிஜேஷ் சர்மா தனது மனைவி, இரண்டு மகள்களைக் கொடூரமாகக் கொலை செய்தார்.

இந்த மூன்று கொலைகளையும் சங்கீதா என்ற பெண் பார்த்தார். நோயினால் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அவர், உடனே பொலிசுக்குத் தகவல் தெரிவித்தார்.

பொலீஸ் பிரிஜேஷ் சர்மாவைக் கைது செய்தது.

ஒரே சாட்சியான சங்கீதாவையும் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால் அவர் நீண்ட நாள் பிழைக்கமாட்டார் என டாக்டர்கள் கூறினர்.

எனவே சங்கீதாவின் வாக்குமூலம் கொடுக்கும் நிகழ்ச்சியை வீடியோ படம் எடுத்தனர். பின்னர் சில நாட்களில் சங்கீதா இறந்து விட்டார்.

நீதிவிசாரணையின்போது சங்கீதாவின் வீடியோ கசெட்டை சாட்சியாகப் பொலீசார் தாக்கல் செய்தனர். அதை விசாரணைக்கு நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

இந்திய நீதித்துறை வரலாற்றில், ஒரு கொலை வழக்கில் சாட்சியாக வீடியோ கசெட்டை தாக்கல் செய்யப்படுவது இதுவே முதல்முறை. ★

## ஆசை - அன்பு என்ன வேறுபாடு?

எனக்குத் தெரிந்த ஒரு சாதாரண குடும்பம். அந்தப் பெற்றோருக்கு ஒரே மகன்.

அவனைக் கஷ்டப்பட்டு வளர்த்து டாக்டருக்குப் படிக்கவைத்தார்கள். டாக்டர் பட்டமும் பெற்றுவேலையிலும் அமர்ந்தான்.

திடீரென விபத்தில் ஒரு நாள் மரணமடைந்தான்

தந்தை கதறியழுதார். தாயோ மகனே! என்று அலறியபடியே விழுந்து உயிரை விட்டாள்.

அப்படியானால் ஒரு குழந்தை மீது தாய்க்குப் பிரியம் அதிகமா? தந்தைக்குப் பிரியம் அதிகமா?

தாய்க்கு என்று சிலர் கூறலாம்.

ராமன் பதினான்கு ஆண்டு வனவாசம் போகவேண்டும் என்ற செய்திகேட்டு அன்னை கோசலை கண்ணீர் உகுத்து அழுதாள். தந்தை தசரதனோ அந்த இடத்திலேயே உயிர் விட்டார்.

அப்படியானால் ஒரு குழந்தை மீது தாய்க்கு பாசம் அதிகமா...? தந்தைக்கு அதிகமா?

ஒன்றின்மீது ஆசைவைப்பவர்கள், அதை இழக்க நேரும்போது அந்த இழப்பைத் தாங்கமுடியாமல் ஆகிவிடுவார்கள்.

அன்பை வைப்பவர்கள் அதை இழக்கும் போது, அடுத்து அதற்குப் பரிகாரம் என்ன என்று திடமாய்ச் சிந்திப்பார்கள்.

எனவே தாயோ, தந்தையோ, அவர்கள் குழந்தைமீது ஆசை வைப்பார்களா? அன்பை வைப்பார்களா? என்பதைப் பொறுத்தே அவர்கள் நிலையும் அமைகிறது. — வாரியார்

## முட்டையில் இருந்து தோன்றியவர்கள்

வங்காளம், ஒரிசாவில் சந்தால்கள் என்ற ஆதிவாசிகள் வாழ்கின்றனர். காட்டு வாத்தின் முட்டையிலிருந்து தோன்றியவர்கள் என்று கூறிக் கொள்ளும் இவர்களிடையே கோத்திரத்தை சேர்ந்த ஆணும், பெண்ணும் உறவு கொண்டு விட்டால் அதற்குப் பிராயச்சித்தமாக ஒரு கூத்து ஆடுவார்கள். மணமகன் பெண்ணுக்குப் பரிசும் தர வேண்டும். வசதி இல்லாதவர்கள் பெண்ணின் தந்தையிடம் ஐந்தாண்டுகள் வேலை செய்து அதற்கு ஊதியமாகப் பெண்ணை மணக்கலாம். மணமாகாத ஆணும், பெண்ணும் கணவன் மனைவிபோல் நடந்து கொள்ளலாம். கர்ப்பம் தரித்தால் மணந்து கொண்டுவிட வேண்டும். ★

## மழலையில் மயக்கம் ஏன்?

குழந்தைகளின் மழலையைக் கேட்பது என்றால் அனைவருக்கும் கொண்டாட்டம் தான்......

ஏன் அந்த மழலைமொழிமீது எல்லாருக்குமே மயக்கம்?

பிடில் வித்துவானுடன் சில வருடம் நெருங்கிப் பழகினால் நாம் பிடில் வாசிக்கக் கற்று விடலாம்.

மிருதங்க வித்துவானோடு சில காலம் பழகினால் நாமும் மிருதங்க வித்துவானாகி விடலாம்.

என்னோடு சில காலம் இருந்துவருவீர்களானால் நீங்களும் உபந்நியாசம் செய்து விடலாம்.

ஆனால் குழந்தைகளோடு எவ்வளவுதான் பழகினாலும் நம்மால் மழலை பேசமுடியாது.

அதனால்தான் அவர்களிடம் நமக்கு மயக்கம்.

## தேனீயின் இரத்தம் என்ன நிறம்?

தேனீக்கு இரு கூட்டுக் கண்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஆறாயிரம் அறுகோணப் பட்டைகள் கொண்டது.

இக்கண்களால் வெகுதூரத்தில் உள்ள பொருள்களை 60 மடங்கு பெரிதாக அதனால் காணமுடியும்.

அண்மையிலுள்ள பொருள்களைப் பார்க்க தலைக்கு மேல் முக்கோணமாக மூன்று கண்கள் உள்ளன. வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையே உள்ள சிறு துவாரங்கள் மூலமே சுவாசிக்கிறது.

தேனீயின் இரத்தம் நிறமற்றது. கொட்டிய தேனீ கொடுக்கை இழந்துவிடும். ★

# நேருஜியின் சூடான பதில்!

ஒரு சமயம் நேரு கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் பேராசிரியர் ஒருவர் முதலில் பேசினார்...

'அரசியல் வாதிகள் அறிவிக்கும் கொள்கைகள் திட்டங்கள் எல்லாம் செயலாற்றத் தகுதியற்றவை!

'வெறும் கற்பனையிலேயே நடமாடும் அரசியல் வாதிகளினால் இன்றைய இந்திய நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியாது!

'அதே சமயம் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ன என்பது யாருக்குமே புரியாத ஒன்றாக உள்ளது.

'என் போன்றவர்களால் தவறுகளைச் சுட்டிக் காட்ட முடியும்...

'அதற்காகப் பரிகாரத்தையும் எங்களிடமே கேட்டால் நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை!'

என்ற பொருள்பட அந்த பேராசிரியர் பேசி முடித்தார்..

அடுத்து நேரு பேசலானார்...

'பேராசிரியர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட பின் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

கிரேக்க நாட்டில் ஆசிரியர் ஒருவர் இருந்தார். அந்த ஆசிரியருக்குப் பல சீடர்கள் இருந்தனர்.

அவருடைய கொள்கை என்னவென்றால் எதைப்பற்றியும் திடமான ஒரு முடிவுக்கு வரக்கூடாது' என்பது தான்!

ஒரு நாள் அந்த ஆசிரியர் சேற்றில் மாட்டிக் கொண்டு விட்டார்.

சேற்றை விட்டு அவரால் கொஞ்சம் கூட வெளியேற முடியவில்லை. மிகவும் தவித்துப் போனார் ஆசிரியர்.

அவர் உடல் கொஞ்சம் கொஞ்சமாகச் சேற்றில் புதைந்து கொண்டே இருந்தது. உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார் அவர்.

தற்செயலாக அந்தப்பக்கம் வந்த அவரது சீடன் ஆசிரியர் படும் அவதியைக் கண்டான்.



நேருஜி

ஆசிரியர் அவனைக் கண்டதும் மகிழ்ந்து போனார். மகிழ்ச்சியோடு தனது சீடனைப்பார்த்துத் தன்னைக் காப்பாற்றும்படி கூறினார்.

வந்த சீடனுக்கு ஆசிரியன் கொள்கை தெரியுமல்லவா?

அவன் உடனே அவரை சேற்றிலிருந்து மீட்க முயற்சி செய்யாமல், அவரை மீட்கலாமா; வேண்டாமா? அப்படி மீட்டால் அல்லது மீட்காவிட்டால் அதனால், விளையும் நன்மை தீமைகளைப்பற்றிச் சிந்தனை செய்யத் தொடங்கி விட்டான்.

கடைசியில் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். அந்த முடிவு என்ன தெரியுமா?

'ஒரு முடிவுக்கும் வரக் கூடாது!' என்ற முடிவுதான் அது.

இதே போல்தான் இருக்கிறது. முன்பு பேசிய பேராசிரியரின் பேச்சும்' என்றார் நேரு.

பேராசிரியரின் முகத்தில் ஈயாடவில்லை!

கூடியிருந்த மக்களிடையே சிரிப்பொலி கிளம்பியது.

தொடர்ந்து நேரு சொன்னார் 'அரசியல் வாதிகளாகிய நாங்கள்; நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கற்பனை உலகில் நடமாடவில்லை.

'மண்ணுலகில் நடமாடி, செயலாற்றிக்கொண்டுதான் இருக்கிறோம்' ★

## அமெரிக்காவில் ஊரடங்கு!

13 வயது முதல் 19வயது வரை உள்ள இளைஞர்களின் வன்முறையையும் போதை மருந்துப் பழக்கத்தையும் கட்டுப்படுத்துவதற்காக, சில அமெரிக்க நகரங்களில் அவர்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

பிட்ஸ்பீல்ட் நகரில் இரவு 9 மணிக்கு ஒரு 'விசில்' சத்தம் கேட்கிறது; 15 நிமிடங்களுக்குள் இளம் வயதினர் தெருக்களில் நடமாடாமல் ஒதுங்கவேண்டும்; இல்லாவிட்டால் அவர்களை பொலீஸார் கைது செய்வர்.

லொஸ்என்ஜல்ஸ் நகரில், இரவு 10 மணி முதல் சூரிய உதயம் வரை, 18 வயதுக்கு உட்பட்டவர்கள், தங்கள் பெற்றோர்; அல்லது கார்டியன்களில் துணை இன்றி சாலைகளிலோ, பொது இடங்களிலோ நடமாடக்கூடாது.

டெபராயிட், பிலடெல்பியா சிக்காக்கோ நகரங்களிலும் இதுபோன்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. ★

## மிகப் பெரிய ஜனநாயகவாதி யார்?

உலகத்திலேயே பெரிய ஜனநாயகவாதி யார்?

இந்தியா சுதந்திரம் அடைந்தது முதல் மத்திய அமைச்சரவையை உருவாக்க முனைந்தபோது காந்தியடிகளும் நேரில் கலந்து தனது ஆலோசனைகளை வழங்கவேண்டும் என்று தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

காந்தியடிகள் அந்தக் கூட்டத்தில் வந்து கலந்து கொள்ள நிபந்தனை விதித்தார்

'எனக்கு நன்றி காட்டுவது என்ற பெயரில் எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களையோ என் உறவினர்களையோ மந்திரியாக்க நீங்கள் முனையக் கூடாது. அதற்குச் சம்மதமானால் வருகிறேன்'—என்று கூறிய அவர் யார் பெரிய ஜனநாயகவாதி இறைவன் என்று சொன்னார்.



காந்திஜி

நல்லதை, கெட்டதைப் புரிந்து கொள்கிற அறிவை நமக்குத் தந்து நமது மனம் போல் நாம் விரும்புவதை தேர்ந்தெடுக்க உரிமை தந்தவன் இறைவன் என்றார் காந்திஜி. ★

# ஆட்டுக்கு விழுந்த அடியைப்பார்த்து நாரதர் ஏன் சிரித்தார்?

ஓர் அழகான மாளிகை மிகவும் கம்பீரமாகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது. அந்த மாளிகையின் கீழ்ப் பகுதியில் ஒரு கடை இருந்தது. கடைக்கு எதிரே தரையில் குவியல் குவியலாகத் தானியங்கள் இருந்தன.

எங்கிருந்தோ ஒரு வெள்ளாடு ஆவலோடு அந்தக் கடைக்கு ஓடி வந்தது. அங்கிருந்த தானியங்கள் எல்லாவற்றையும் தின்னவேண்டும் என்ற பேராசையுடன் அது வாயை ஒரு குவியல் மீது வைத்ததோ இல்லையோ அதன் தலையில் மடேர் என்று ஓர் அடி விழுந்தது.

மறுவினாடியே தானியத்தில் வைத்த வாயை எடுத்து 'மே, மே' என்று கத்திக் கொண்டு ஆடு ஒரே ஓட்டம் பிடித்தது. அதன் தலையில் அடித்தவன் அந்தக் கடைக்கு முதலாளியான ஓர் இளைஞன் ஆவான். அவன் கையில் கூர்மையான தடி இருந்தது. தன்னுடைய கடையில் விற்பனைக்கு வைத்திருந்த தானியத்தை உண்ண வரும் பிராணிகளை அடித்து விரட்டுவதற்கு அவன் அதைக் கையோடு வைத்திருப்பது வழக்கம்.

அந்தத் தருணத்தில் தேவரிஷி நாரதரும், ஆங்கிரஸ முனிவரும் அந்த வழியே சென்றுகொண்டிருந்தனர். இளைஞன் ஆட்டைத்தடியால் அடித்ததைக்கண்டதும் நாரதருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. நாரதர் சிரிப்பதைக் கண்ட ஆங்கிரஸ முனிவர் அவர் சிரிப்பதற்கான காரணத்தை வினவினார்.

அதற்கு நாரத முனிவர்,

'இந்தக்கடை மிகவும் சிறிய அளவில் துவக்கப்பட்டது. இங்கே தானியங்களை விற்கத் தொடங்கிய வியாபாரி அதிஷ்டவசமாகப் படிப்படியாக முன்னேறிக் கோடீஸ்வரன் ஆகிவிட்டான். அவன் தான் இங்கு இத்தனை பெரிய மாளிகையைக் கட்டினான். தன் வியாபாரத்தையும் பல வழிகளில் பெருக்கினான்.

'இருப்பினும் ஆரம்பத்தில் தான் ஏற்படுத்திய இந்தக் கடையை மட்டும் தன் மாளிகையின் கீழ்ப்பகுதியிலேயே வைத்துக்கொண்டான். அதை மாற்ற விரும்பவில்லை. அந்தக் கடையின் மூலம்தான் இவ்வளவு பெரிய உயர்ந்த நிலைக்கு வர முடிந்தது என்ற எண்ணம் அவனுக்கு எப்போதும் இருந்தது. அது காரணமாக அவன் முதலில் துவக்கிய இடத்தை விட்டுக் கடையை மாற்றவில்லை.

'சிறிது காலம் சென்றதும் அந்த வியாபாரி இறந்துவிட்டான். அவன் இறந்தபிறகு அவனுடைய மகன் இந்தச் சொத்துக்கு வாரிசாகினான்.

'இப்போது ஆட்டைத் தடியால் அடித்தானே, அந்த இளைஞன்தான் அந்த வியாபாரியின் மகன். அவன் தினமும் இங்கே கடையில் ஒரு மணி நேரம் மட்டும் இருப்பான் கடை வேலைகளைக் கவனிக்க வேண்டிய ஆட்கள் இருக்கிறார்கள்.

'எனக்குச் சிரிப்பு வந்தது எதனால் என்றால் இந்தக் கடையை ஸ்தாபித்த அதே வியாபாரிதான் இப்போது இந்த ஆடாகப்பிறந்து வந்திருக்கிறான். இவ்வளவு சொகுசான வாழ்க்கை வாழ்வதற்காகத்தான் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டவனே இப்போது ஆடாக வந்திருக்கின்றான்.

'ஆனால் தற்சமயம் அவனுக்கு ஒருவாய்த்தானியம் கிடைக்கக்கூட இந்தக்கடையில் உரிமை இல்லை. எந்த மகனை அவன் மிக்க அருமையாக வளர்த்தானோ அவனே தன் தகப்பனை தானியத்தில் வாய் வைத்தவுடன் அடித்து விட்டான். இதுதான் இந்த உலகத்தின் வழக்கம். இதை நினைத்துத்தான் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது!

– என்று நாரதர் விளக்கிக் கூறினார்.

தொகுப்பு: க. கனகராசா





பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe

உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

S-Lon Lanka (Pvt) Ltd.
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 596206 — 93716-9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற வாரத் தொடர்ச்சி)

# 'ராமன் விளைவு' பற்றிய புதிய ஆய்வுகள்

ராமன் விளைவு கண்டு பிடிக்கப்பட்டு 12 ஆண்டுகள் நிறைவடைவதற்குள் மூலக்கூறு கட்டமைப்புக்களைக் கண்டு பிடிக்க ராமன் விளைவைப் பயன்படுத்துகிற முறைகளைப் பற்றிக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

வேறு எந்த முறையினாலும் ஆராயப்பட முடியாத மூலக்கூறு இடைவினைகள் (Molecular interactions). வேதியியல் பிணைப்புக்களின் Chemical bonds) தன்மைகள், கட்ட மாற்றங்கள் (Phase Transitions) போன்ற நிகழ்வுகளை ராமன் விளைவின் மூலம் ஆராயமுடிகிறது

1940 ஆம் ஆண்டு வாக்கில் ராமன் விளைவின் உதவியால் படிகக் கட்டமைப்பை ஆராய முடியும் என்பது தெரிய வந்தது. ஆர். எஸ். கிருஷ்ணன், படிக ஆராய்ச்சிகளுக்கான புதிய உத்திகளை உருவாக்கினார். அணுக்கோவை இயக்கவியல் (Lattice Dynamics) என்ற புதியதுறை உருவெடுத்தது.

லேசர் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ராமன் விளைவில் லேசரைப் பயன்படுத்த முடியும் என்று தெரிய வந்தது.

அதைத்தொடர்ந்து ராமன் மீண்டும் 'ராமன் விளைவு' மறுமலர்ச்சி பெற்றது.

'ராமன் விளைவு' தத்துவத்தில் லேசரின் தத்துவம் உள்ளடங்கியிருக்கிறது. லேசர் கற்றையைப் பயன்படுத்தியதால் சோதனை நேரம் வெகுவாகக் குறைந்தது.

நெடு நேரத்திற்கு ஒளிபடும்படி வைக்க முடியாத பொருள்களையும், இம்மியளவுகளில் மட்டும் கிடைக்கிற பொருள்களையும் லேசர் ராமன் நிறமாலையியல் உத்திகளின் உதவியால் ஆராய முடிந்தது.

ராமன் விளைவை உயிரியியல் பொருள்களிலும், உயிர் மருத்துவப்(Bio Medical) பொருள்களிலும் ஏற்படுத்தி ஆராய்கிற ராமன் நுண்நிறமாலைப் பகுப்பாய்வு (Micro Raman Spectro Analysis) என்ற துறையும் வளர்ச்சி பெற்று வருகிறது.

**புதிய கிளைகள்**

ராமன் முதன் முதலாகப் பதிவு செய்த நிறமாலையில்; சிதறி வந்த ஒளியில் படு ஒளியின் வரிக்கு இருபக்கங்களிலும் ஒவ்வொரு வரி தென்பட்டது

அவை ஸ்டோக்ஸ் (Stokes) வரி எனவும், எதிர் ஸ்டோக்ஸ் வரி (Anti - Stokes) எனவும் பெயரிடப்பட்டன.

போட்டோன்கள் (Photon) மூலக்கூறுகளுடன் மீள் திறனற்ற முறையில் மோதும் போது அவை ஆற்றலை இழந்து அல்லது ஆற்றலைக் கவர்ந்து பின்னர் சிதறுகின்றன.

ஆற்றலை இழக்கிற போட்டோன்கள் ஸ்டோக்ஸ் வரியாகவும், ஆற்றலைக் கவருகிறவை எதிர் ஸ்டோர்ஸ் வரியாகவும் பதிவாகின்றன. இவை இரண்டுமே மங்கலாய்த்தான் பதிவாகும். ஸ்டோக்ஸ் வரியை விட எதிர் ஸ்டோக்ஸ் வரி இன்னும் மங்கலாய் இருக்கும்

ஆரம்ப காலங்களில் ராமன் வரிகளைப் பதிவு செய்ய மாதிரிப் பொருள்களின்மேல் ஐந்தாறு நாள்களுக்குத் தொடர்ந்து ஒளியைப் பாய்ச்சிக் கொண்டேயிருக்க வேண்டியிருந்தது. லேசர் வந்த பிறகு சில நிமிஷங்களில் ராமன் வரிகளைப் பதிவு செய்ய முடிந்தது ராமன் வரிகளும் பெரும் செறிவுடன் பதிவாயின.

அத்துடன், விருப்பமான எந்த ஒரு வரியையும் அதிக செறிவுடன் பதிவாகும்படி செய்ய முடிந்தது அந்த வரிக்குச் சமமான அதிர்வெண் உள்ள லேசர் ஒளியைச் செலுத்துவதன் மூலம் இதைச் செய்யலாம். அந்த நிலையில் போட்டோனுக்கும் மூலக்கூறுகளுக்கும் இடையே ஒத்ததிர்வு ஏற்படுகிறது.

இந்த உத்திகள் ஓரியல்பான எதிர் ஸ்டோக்ஸ் ராமன் நிறமாலையியல் (Coherent Anti StokesRaman Spectroscopy). ஓரியல்பான ஸ்டோக்ஸ், ராமன் நிறமாலையியல் என்ற பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன,

ஒரு குறிப்பிட்ட ராமன் வரியை மிகுந்த செறிவுடன் வெளியிடுமாறு ஒரு பொருளை லேசரின் உதவியால் ஆற்றலூட்டலாம் இந்த உத்தி தூண்டப்பட்ட ராமன் விளைவு (Stimulated Raman Effect) எனப்படுகிறது.

சாதாரண ராமன் விளைவில் f அதிர்வெண் உள்ள ஒளி, F அதிர்வெண்ணுடன் அதிர்வு செய்யும் மூலக்கூறின் மேல் விழுமானால், f+F, f-F என்ற அதிர்வெண்களைக் கொண்ட ராமன் வரிகள் வெளிப்படும். அந்த மூலக்கூறின் மேல் f என்ற அதிர்வெண்ணுள்ள ஒளியுடன் கூடவே, எல்லா அதிர்வெண்களையும் கொண்ட வெள்ளை ஒளியையும் குவியப்படுத்தினால், சிதறப்பட்டு வெளிவரும் வெள்ளை ஒளியில் f+F, f-F என்ற அதிர்வெண் வரிகள் இருக்க வேண்டிய இடங்களில் கரிய வரிகள் தென்படுகின்றன. இது 'தலைகீழ் ராமன் விளைவு' (Inverse Raman Effect) எனப்படும்.

கதிர்களின் அதிர்வெண்கள் மின்புலத்தினால் மாற்றப்படுவது கெர் விளைவு (KerrEffect) எனப்படும், ராமன் விளைவு கெர் விளைவைப் பாதிக்கிறது; இதனடிப்படையில் 'ராமன் விளைவால் தூண்டப்பட்ட கெர் விளைவு (Raman Induced Kerr effect) என்ற ஆராய்ச்சிப் பிரிவு உருவாக்கப்பட்டிருக்கிறது.

உயர்வரிசை ராமன் கிளர்வு ஆய்வுகள் (Higher Order Raman Excitation Studies) என்ற ஆராய்ச்சிப் பிரிவும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

காலம் பகுத்த மற்றும் இடவெளி பகுத்த ராமன் நிறமாலையியல் (Time resolved and Space resolved Raman Spectroscopy) என்ற புதிய கிளையில் லேசர் துடிப்புக்கள், பெரிய மூலக் கூறுகளின் நுண்ணிய பகுதிகளின் மேல் குவியப்படுத்தப்படுகின்றன.

அப்போது சிதறப்பட்டு வெளிவரும் நிறமாலை கணிப்பொறிகளின் உதவியால் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

விரைவாக நிகழும் வேதிவினைகள், ஒளிவேதிச் செயல்கள், உயிரியல் மாதிரிகள் போன்றவற்றை ஆராய இந்த உத்தி பயன்படுகிறது.

ராமன் விளைவில் மேலும் பல உத்திகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. ராமன் விளைவின் மவுசு இப்போதைக்குக் குறையாது என்று தோன்றுகிறது.

(முற்றும்)

—கே. என். ஆர்.

## பாடம் பயில்வோம்

### க. பொ. த. உயர்தரம்

### தமிழ் இலக்கண வினு - விடை

**தமிழ் சொல்லாக்கத்திற்கு விகுதிகளும் சாரியைகளும் எவ்வாறு உதவுகின்றன?**

விகுதி என்பது பகுபதம் ஒன்றின் இறுதியில் நிற்கும் உறுப்பாகும்: உ+ம் வந்தான் வா+ந்+த்+ஆன் இவ்விகுதிகள் தமிழ் சொல்லாக்கத்தில் பால்; திணை, எண் இட, காலவேறுபாடுகளை உணர்த்துவதிலும் சொல்லாக்க முறைமைக்கும் உதவியளிக்கின்றன.

**(1) சொற்களில் பால் வேறுபாட்டினை விகுதிகளே உணர்த்துகின்றன:**

அ. ஆண்பால்-அன், ஆன்
உ+ம் கந்தன் வந்தான்
ஆ. பெண்பால் விகுதிகள்
அள், ஆள், தி, சி ஐ
உ+ம் நல்லாள்(அள்) வந்தாள் (ஆள்) செவ்வந்தி தி இடைச்சி (சி) தங்கை (ஐ)
இ. அர், ஆர், கள், ப, மார் என்பன பலர்பால் விகுதிகள்
உ+ம் பெரியர் [அர்] பெரியார் [ஆர்] ஆசிரியர்கள் [கள்] என்ப [ப] நடமார் [மார்]
ஈ. து விகுதி அஃறிண்பல் காட்டும்.
வந்தது [து]
உ. அன, விகுதி பலவின்பால் காட்டும்.
வந்தன [அன]

**(2) காலம் காட்டுவதனுலும் விகுதிகள் சொல்லாக்கத்திற்குப் பயன்படுகின்றன:**

காலம் காட்டும் விகுதிகள்:
று, உம், து, டு, டும் என்பன இறந்தகாலம் காட்டும் விகுதிகள் ஆகும்.
உ+ம் பாறு [று] உண்கும் [உம்] வந்து [து] உண்டு [டு] பட்டும் [டும்]
து, தும், று, றும், கு, கும் என்பன எதிர்காலம் காட்டும் விகுதிகளாகும்.
உ+ம் [து] செய்து [தும்] செய்தும் [று] சோறு [றும்] சோறும் [கு] செய்கு [கும்] செய்கும்

**(3) எச்சங்களையும் விகுதிகள் உணர்த்தும்:**

அ, உம் விகுதிகள் பெயரெச்சத்தைக் காட்டும்
[அ] கரிய மாடு செய்த பிள்ளை [உம்] செய்யும் கந்தன்
அ,உ, இன், து போன்றன வினையெச்சங்களை உணர்த்தும்.
உ+ம் [அ] நடக்க வந்தான் [உ] வந்து போனுன் [இன்] நடப்பின் வருவான் [து]பார்த்து மகிழ்ந்தான்

**(4) இருதிணை, ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாய் வரும்:**

வியங்கோள் வினையாக்கத்தை அ, இய, இயர் விகுதிகளே தீர்மானிக்கின்றன.
உ+ம் வாழ்க [அ] வாழிய [இய] வாழியர் [இயர்]

**(5) சொற்களில் தன்வினையை பிறவினையாக்க:**

வி, பி, கு, சு, டு, று, பு, து விகுதிகள் பயன்படுகின்றன.
உ+ம் செய்வி [வி] நடப்பி [பி] போக்கு [கு] பாய்சு [சு] வாட்டு [டு] எழுப்பு [பு] துயிற்று [று]

**(6) செய்வினையை செயப்பாட்டு வினையாக்க:**

படு, உண் விகுதிகள் உதவுகின்றன
உ+ம் கொல்லப்பட்டாள்[படு] கடியுண்டான்[உண்]

**(7) பெயர்ச்சொற்களில் தொழிற்பெயரை விகுதிகளே வேறுபடுத்துகின்றன:**

தல், அல், அம், ஐ போன்ற தொழிற்பெயர் விகுதிகளாகும்.
உ+ம் ஓடுதல் [தல்] ஓடல் [அல்] ஓட்டம் [அம்] கொலை [ஐ]

**(8) பண்புப்பெயரையும் விகுதிகள் காட்டும்:**

மை, கு, ஐ, பு, டு என்பன பண்புப் பெயர் விகுதிகளில் சிலவாகும்.
உ+ம் அருமை [மை] அழகு [கு] நன்மை [ஐ] பண்பு [பு] பண்பாடு [டு]

**சாரியைகள் சொற்களின் ஓசையமைவிற்கு உறுதுணையாகி சொல்லாக்கத்திற்கு உதவி செய்கின்றன.**

அன், அற்று, அம், போன்றன சாரியைகள் ஆகும்.
உ+ம் வந்தனன் [அன்] போயிற்று [அற்று] புளியம்பழம் [அம்]
இவ்வாறு விகுதிகளும், சாரியைகளும் சொல்லாக்கத்திற்கு உதவியளிக்கின்றன.

- தயாரிப்பு: வேலணையூர் தாஸ்

# குழந்தைகளின் வேதனைகளை பெற்றோர் கவனிக்க வேண்டும்



குழந்தைப் பருவத்தில் வேதனைகளும் வலிகளும் தாக்குவது சர்வசாதாரணமான ஒரு காரியமாகும். வழக்கமாக நாம் அதைப் பெரிதுபடுத்துவது இல்லை.

'ஏதோ ஒரு வலி, எல்லாம் சரியாகிவிடும்' என்றே நினைக்கத் தோன்றுகிறது. நம்மை விட சிறு பிள்ளைகளுக்கு நோயினின்று மீளும் சக்தி ஏராளம் இருக்கிறது.

பின் ஏன் கவலை என்று நினைக்கிறோம், அல்லது நமது கவனத்தைக் கவர்வதற்குப் பையன் ஏதோ வலி எனக் கூறுகிறான் என்று அதைக் குறித்து சிறிதளவும் முக்கியப் படுத்தப்படாமலே விட்டுவிடுவதும் உண்டு.

**கால்வலி**

குழந்தைகளில் பள்ளி செல்கின்ற, செல்லாமல் இருக்கின்ற இருபாலாருமே கால் வலிபற்றி முறையிடுவதுண்டு. இவை இனம் புரியாத சலிப்புத் தருகின்ற ஒருவகை வலியாகும்.

பொதுவாக இவ்வலி மாலையிலோ, இரவிலோ ஏற்படுவதுண்டு. இவை குழந்தைகள் வளரும் காலத்தில் ஏற்படும் வேதனைகள் என்றுகூறப்படுவதுண்டு.

எலும்புகள், தசைகளைவிட விரைவாக வளருவதால் அதன் விளைவாகத் தசைகள் வலித்திழுக்கப்பட்டு வீக்கம் ஏற்படுவதுண்டு.

இதற்கு 'மசாஜ்' கொடுப்பதும் வெதுவெதுப்பான நீரில் அவர்களைக் குளிக்க வைப்பதும் நல்ல பலனைக் கொடுக்கும். இச் சிகிச்சையில் பலனில்லாமற் போகுமானல் 'ஆஸ்பிரின்' அல்லது 'பராசிட்டமால்' கொடுக்கலாம்

**நெஞ்சுவலி**

குழந்தைக்கு நெஞ்சுவலி ஏற்படுமானல் அதைக் கண்டறிவது மிகமிகக் கடினம். எனினும் அது இதயம் சார்ந்த பிரச்சினை என்று உடனே முடிவு கட்டி விடாதீர்கள்.

மருத்துவ ஆய்வின்படி இத்தகைய 'கேஸ்கள்', உணர்வு மற்றும் மன இறுக்கம் சார்ந்த பிரச்சினைகளே எனத் தெரிய வருகின்றது.

ஒரு சில வயது வந்த நபர்கள் (Costochondritis) என்னும் வியாதியால் (விலா எலும்பு மற்றும் நரம்புகள் சார்ந்த) துன்புறலாம்.

மற்றும் சிலர் விலாவெலும்பையும் மார்பெலும்பையும் இணைக்கும் இடத்தில் ஏற்படும் வீக்கத்தினல் துன்பமடையலாம்.

**வயிற்றுவலி**

வளர்ந்து விட்ட குழந்தைகளிடையே வயிற்றுவலி அதிகமாகக் காணப்படுவதுண்டு. குடற்புழுக்களாலும்; க்ஷய ரோகத்தாலும் இத்தகைய வேதனைகள் ஏற்படலாம்.

எனினும் மன இறுக்கமும் கவலைகளும் முக்கிய காரணிகள் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். உண்மையிலேயே மன இறுக்கம் சார்ந்த வேதனைகள் பொதுவாக வயிற்றில் தான் உருவாவதுண்டு,

இத்தகைய வலி தொப்பூழைச் சுற்றியும் துல்லியமாகக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நிலையில் ஏற்படுவதுண்டு. இது மலச்சிக்கல் அல்லது வாந்தி போன்ற நோய்க் குறிகளோடும் தொடர்பு கொண்டதாக இருக்கலாம்.

**தலைவலி**

குழந்தைகள் தொடர்ந்து தலைவலியால் அவதிப்படுமானல் அதைச் சற்று அக்கறையோடு கவனிக்க வேண்டும்.

மங்கலான கண்பார்வை, பல் சம்பந்தமான பிரச்சினைகள், மற்றும் மூக்கின் உட்புழைத்துவாரத் தொற்றுகள் போன்றவைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

ஒருவேளை மூளைக்கட்டியாகக் கூட இருக்கலாம். மூளையில் கட்டி இருக்குமானல் தலைவலி வாந்தி அவ்வப்போது ஏற்படும் பார்வைக் கோளாறுகள், தள்ளாடும் நிலை ஆகியவை காணப்படும். பொதுவாக இத்தகைய நோய்க்குறிகள் காலையில் மிகக் கடுமையாக இருக்கும்.

தலைவலிக்கு முக்கிய காரணி மன இறுக்கமே. குழந்தைகளும் கூட கடுமையான ஒற்றைத் தலைவலியால் அவதிப்படுவதுண்டு

பின்னல் வரப்போகும் ஒற்றைத் தலைவலி குறித்த முன் உணர்வால் வயது வந்தோர் அவதிப்படலாம். இவர்களுக்கும் ஒரு பக்கமே வழக்கமாகப் பாதிக்கப்படும் வாந்தியும் எடுக்கலாம், அல்லது கண்ணில் திடீர் வெளிச்சங்கள் தோன்றி மறையலாம்.

குழந்தைகளுக்கு ஏற்படும் ஒற்றைத் தலைவலிக்கு இத்தகைய நோய்க்குறிகள் ஏற்படாமலிருக்கலாம்.

குழந்தைகளுக்கு மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் அல்லது நரம்பு சம்பந்தமான நிபுணர்களால் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். ★

நன்றி: நல்வழி




# பட்டப் பெயர்

நேற்றைய வரைக்கும் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போய் வந்த ஜெகன், இன்றைக்குப் போகமாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தான்.

அவன் இப்படி ஒருபோதும் பள்ளிக்கூடம் போக மறுத்தது இல்லை

மழையோ, வெய்யிலோ, பசியோ — தாகமோ எதுவானுலும் சரி... அவன் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல், கொடுப்பதைச் சாப்பிட்டுவிட்டுக் குறிப்பிட்ட நேரத்திற்குப் பள்ளிக்கூடம் போய்விடுவான்.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் அவன், படிப்பிலும் கெட்டிக்காரனுகவே இருந்தான்.

—அப்படிப்பட்ட 'நல்ல பிள்ளை'யான அவன், 'இன்றைக்குப் பள்ளிக்கூடம் போகமாட்டேன்' என்று பிடிவாதமாக வீட்டில் இருப்பது அவன் தாயாருக்குத் திகைப்பாக இருந்தது.

'ஏண்டா...;' என்று காரணம் கேட்டாள்.

—அவன் அதைச் சொல்லத் தயாராக இல்லாதவன் போல் மௌனமாக இருந்தான்.

'...ஏண்டா பேசாமலிருக்கிருய். சொல்லேண்டா!' என்று அவன் தாயார் அதட்டி - உருட்டி - மிரட்டிக் கேட்டாள்.

அப்போதும் அவன் பதில் சொல்லவில்லை.

காசு கொடுத்து சமாதானப்படுத்திப் பார்த்தாள்.

—அவன் அந்தச் சமாதானத்தை ஏற்காதவன்போல கை நீட்டி வாங்கவில்லை.

அவளுக்குக் குழப்பமாகவும் திகைப்பாகவும் இருந்தது. அதோடு கோபமும் கூட வந்தது.

'டேய்...ஒழுங்கா பள்ளிக்கூடம் போறியா?... இல்லையா?' என்றவாறு அவன் காதைப் பிடித்துத் திருகினுல்.

'விடம்மா...' என்றவாறு காதைப் பிடித்துக்கொண்ட அவன் 'இனிமேல் பள்ளிக்கூடத்திற்குப் போகமாட்டேன்' என்று பிடிவாதமாகச் சொன்னுன்.

-அவன் அப்படிச் சொன்னது அவளுக்குக் கோபத்தை அதிகப்படுத்தியது. அடித்தாள். அடி தாங்க முடியாத அவன் அழுதான்.

அதுவரையில் பாயில் சுருண்டு படுத்திருந்த அவன் அப்பா முத்துவேல் அப்போது தான் சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தவர்போல 'என்னடா?' என்றவாறு எரிச்சலோடு எழுந்தார்.

-அவரைப் பார்த்ததும் அவனுக்குக் கூடக் கொஞ்சம் அழுகை வந்தது. 'ஓ' என்று அலறினுன்

-'ஏண்டா அழுகிருய்?...?

-அவன் பதில் சொல்லவில்லை.

-அவன் தாயார் சொன்னுள். அவள் குரலில் வெறுப்பும் கோபமும் ஏகமாக ஒலித்தது.

-அவருக்கு ஆத்திரமாக வந்தது. 'ஏன்டா பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்கிருய்?'- காரணம் கேட்டார்

-அவன் அந்தக் காரணத்தை அவரிடம் சொல்லத் தயாராக இல்லாதவன்போல் அழுதான்.

-அவரது கோபம் எல்லை மீறியது. 'சரி வாடா!.. நானும் வாறேன் பள்ளிக்கூடத்திற்கு! என்ன என்று அறியவேணும்' - என்றவாறு எழுந்தார்:

'அப்பா நீ வரவேண்டாம்ப்பா'-என்றவாறு அவன் அழுதான்.

'ஏண்டா...' என்ருர் ஏதோ உள்மனப் போராட்டத்தோடு.

'நீ வந்தா... நீ தான் என் அப்பா என்று படிக்கிற பிள்ளைகளுக்குத் தெரிஞ்சுவிடும். உன்னையும் ஒரு மாதிரி பேசு வாங்கப்பா! அதனுலே நீ வராதப்பா'— என்று கையெடுத்துக் கும்பிடுகிற முறையில் கெஞ்சினுன் ஜெகன்.

-அவருக்கு சுருக்கென்று முள் குத்தியது போல் இருந்தது. 'அது'வாக இருக்குமோ என்கிற எண்ணம், அவர் மனதில் ஓடியது.

—அத்துடன் அந்தரங்கமாகவுள்ள அவர் குணத்திடம் அவர் மனம் பேசியது:

'எத்தனையோ தடவை சொன்னேன். பொய் சொல்வது தப்பு என்று கேட்டியா? பணத்தைத் திருடினுய் அப்ப கூட முதலாளி சொன்னுரே... முத்துவேலு! உண்மையைச் சொல்லிவிடு, உன்னை விட்டுடறேன்னு, நீ கேட்டியா? திரும்ப திரும்ப எடுக்க இல்லை என்று சொன்னியே! அந்தப் பொய் பொலீஸ்வரை போய் ஜெயிலுக்குள் தள்ளிவிட்டது. நேற்றுத்தான் விடுதலையாகி வீட்டுக்கு வந்தேன் அதுவாக இருக்குமோ? என்கிற எண்ணத்தை அவர் மனம் தூண்டிவிட்டது.

நிமிட நேரத்தில் கண்கலங்கிய அவர் 'பள்ளிக்கூடம் போக மறுக்கும் காரணத்தை சொல்லுடா?'— என்று கேட்டார்.

ஜெகன் அழுதவாறு நின்ருன்.

உண்மை நிலையை உணர்ந்தான் முத்துவேலு. 'பொய் சொல்லி'யின் மகன் என்று சக பையன்கள் கேலி செய்ததால்தான் ஜெகன் பள்ளிக்கூடம் போக மறுக்கிருன் என்பது முத்துவேலுக்குப் புரிந்தது.

கொஞ்ச நேரம் பேசாமலிருந்த முத்துவேலு; திடீரென ஒரு முடிவுக்கு வந்தவன்போல 'ஜெகன்! இனி நான் பொய் சொல்லமாட்டேன். உண்மையாக வாழ்வேன்; உனக்காக நம் குடும்பத்துக்காக'

எதற்காக என்ருல் பொய்யோடு சேர்ந்தது திருட்டு மட்டுமல்ல?

அது தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் கூட அவமானப்படுத்தி, அழவைத்து வாழ்வைக்கெடுக்கும் என்று தெரிஞ்சுகொண்டேன்'— என்றவாறு அழுதுவிட்டார்.

ஜெகன் மட்டும் அல்ல; தாயாரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

ஜெகன் பள்ளிக்கூடம் புறப்படத் தயாராஞன், அப்போது சொன்னுன்:

'இனிமே யாராவது அப்பாவைப் பற்றிச் சொன்னுல் எங்கப்பா உண்மையாக வாழ்கிருர், உண்மை பேசுகிருர், என்னைப் போல 'நல்லவன்' என்ற பட்டப்பேரோடு சொல்வேன்' — இப்படிக் கூறியபடி நிமிர்ந்து நடந்தான். ★

—அரசன்



## விடுகதை

1. இனிப்பைத் தேடி 'ஈ' என்று ஓடி வருவான் அவன் யார்?

2. ராத்திரி நேரம் வயலோரம் டோர்ச் லைட்டுடன் பறக்குது ஒரு பூச்சி. அது என்ன?

3. அழகாக ஆடத் தெரிந்தவன் பாம்புக்கு ஜன்ம விரோதி அவன் யார்?

1. எறும்பு
2. மின்மினிப்பூச்சி
3. மயில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலக்கணம் மீறிய கவிதைகள்

# பாரதிராஜாவின் படைப்புக்கள்

டைரக்டர் பாரதிராஜா எடுக்கிற படங்களில்தான் கவிதா நயம் இருக்கிறது. என நினைத்தோம்...

அவர் கொடுக்கிற பேட்டிகளிலும் கவிதா உணர்வே களைகட்டுகிறது...!

ரிதம் (தாளம்) வைப்ரேஷன் [அதிர்வு], பீட்ஸ் [துடிப்பு], மூவ்மெண்ட்ஸ் [அசைவுகள்], எமோஷன்ஸ் [உணர்ச்சிகள்] —இவைகளெல்லாம் இசை, கவிதை. போன்ற துறைகளில் நாம் கேள்விப்படுகின்ற வார்த்தைகள் – டெக்னிக்குகள்...

இவைகளை அடிப்படையாக வைத்தே காட்சிகளைப் படம் பிடிக்கிறாராம் பாரதிராஜா.

மற்றவர்களிடம் பேனா பேசும்... ஆனால் படப்பிலிமிலேயே கதையைச் சொல்பவன் நான்...

'நான் ஓர் எழுத்தாளன் அல்ல... ஆனால் அழகின் பல நிறங்களைக் காட்சிகளாக வடித்துத்தருகிற கலைஞன்...

'உணர்ச்சிகள்தான் எனது படைப்புகளுக்கு அடிப்படை.

காதல், சோகம், கோபம் போன்ற எண்ணற்ற உணர்ச்சிகளைச் சித்தரிக்கிற கதாபாத்திரங்கள் உருவாக்குகிற சம்பவங்கள்தானே வாழ்க்கை...? என்கிறார் பாரதிராஜா:

இவர் படப்பிடிப்புக்காகத் தேர்வுசெய்த லொக்கேஷனுக்குச் சென்றவுடன் கையில் இருக்கும் கதை ஸ்கிரிப்ட்டை வேறொரு பக்சம் தூக்கிப் போட்டுவிடுவாராம்...!

லொக்கேஷனைப் பார்த்தவுடனேயே புதிய கதைகள் தோன்றிவிடுமாம் இவருக்கு!

**பலவீனங்கள்**

இப்படி 'ஒன் – தி – ஸ்பாட்' முடிவுகளோடு படப்பிடிப்பைத் தொடருவாராம்

'இப்படியெல்லாம் படப்பிடிப்பை முடித்துவிட்டு பிறகு அதைப்போட்டு பார்க்கும் போது கதைப்போக்கில் தொடர்ச்சி இல்லாமல் குழப்பம் வராதா?... என்று கேட்டோம்.

'காட்சிகள் பெர்பெக்ட்டாக' அமைந்து இருக்கும். என் மனதில்படுவது சரியாகத்தான் இருக்கும்' என்று சட்டென்று பதில்வந்தது அவரிடமிருந்து!

இதுபோல 'பிரி – பிளான்' அல்லது முன் திட்டம் எதுவும் எந்த விஷயத்திலும் இருக்காதாம் அவரிடம்'

இவைகளெல்லாம் பாரதிராஜாவின் பலவீனங்கள் என்று இவரை விமர்சிப்பவர்கள் சொல்லக்கூடும்.

இவைகளையே தனது பலம் என்கிறார் பாரதிராஜா...!

'16 வயதினிலே' வெளிவந்தபோது' பாரதிராஜாவைக் கேலிபேசி, ஏளனமாகப் பார்த்தவர்கள் படவுலகில் பலர் இருந்தார்களாம்

அதைத்தொடர்ந்து கிழக்கே போகும் ரயில்' 'புதிய வார்ப்புகள்' 'சிவப்பு ரோஜாக்கள்', 'நிறம் மாறுத பூக்கள்' போன்ற பொன்விழாப் படங்கள் வந்தபோதுதான் படவுலகே ஸ்தம்பித்துப்போனதாம் சில காலம்.

'தமிழ்த்திரையுலகில் 16வயதினிலே' ஒரு திருப்புமுனை... அப்போது ஏற்பட்ட புதிய' அலை, இன்றைக்கு 10 ஆண்டு காலமாக இன்னமும் நீடித்து வருகிறது' என்கிறார் பாரதிராஜா.

> டைரக்டர் பாரதிராஜாவுடன்ஒரு பேட்டி.தொகுத்துத் தருபவர் நமது சென்னை செய்தியாளர் தி. மேனன்.

**எலியட்**

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'தி வேஸ்ட் லாண்ட்' (The Waste Land) என்ற கவிதைக்காக நோபல் பரிசு பெற்றவர் டி. எஸ்.எலியட் என்ற உலகப் புகழ்கவிஞர்.

இவரின் இந்தக் கவிதையை ஆரம்பத்திலிருந்து முடிவுவரை படித்தால்தான் அர்த்தம் புரியும் என்பதில்லை. நடுவில் தொடங்கி முடிவுநோக்கியும் படிக்கலாம். அல்லது தொடக்கம் நோக்கியும் படித்துச் செல்லலாம்.

அதுபோல முடிவில் தொடங்கி தொடக்கம்வரை படிக்கலாம். கவிதையின் எந்தப்பகுதியில் படிக்கத்தொடங்கினாலும் எந்த இடத்திலும் போய் முடிக்கலாம். அர்த்தங்கள் குழம்பாது...!

அதுபோல 1, 2, 3, 4 எனக் கதைப்போக்குப்படி எண்கள் குறிப்பிடப்பட்ட ஸ்கிரிப்டின் அடிப்படையில் காட்சிகளைச் சேர்க்கமாட்டார் பாரதிராஜா. முதலில் உள்ளதைக் கடைசியிலும், இதை அங்கும், அதை இங்கும் என தலைகீழாக மாற்றி படப்பிடிப்பு நேரத்தில் மனதில் தோன்றிய புதிய கதைபோல உருவாக்கிவிடுவார் காட்சிகளை...!

கிரேக்கச் சிந்தனையாளர் அரிஸ்டோட்டில் எழுதிய 'பொயட்டிக்ஸ்' என்ற நூல் உலகப்புகழ்பெற்றது: அதில் நாடகத்தின் இலக்கணத்தை வரையறுத்துள்ளார் அவர்!

உதாரணமாக ஒரு நாடகத்துக்கு தொடக்கம்வேண்டும். அதன் தொடர்ச்சியாக நடுப்பகுதி அமைய வேண்டும். அதைத் தொடர்ந்து முடிவு ஒன்று இருப்பதுவும் அவசியம் என்றார் அவர்.

ஆனால் பாரதிராஜாவுக்கு இப்படி இலக்கணங்கள் எதுவும் கிடையாதாம். அவரது படைப்புகள் இலக்கணம் மீறிய கவிதைகள் எனச் சொல்லாமல் சொல்கிறார் அவர்.

**'தானுக ஓடும் எழுத்து'**

மேல் நாட்டில் 'ஆட்டோமேட்டிக் ரைட்டிங்' அல்லது 'தானுக ஓடும் எழுத்து' என்ற ஒருவகை எழுத்து முறையை சில எழுத்தாளர்கள் பயன்படுத்தினார்கள்:

இவர்கள் உருவாக்கும் நாவல்களில் திட்டமிட்ட கதைப்போக்கு இராது. எழுதிக் கொண்டே போகும்போது மனதில் தங்குதடையின்றிப் பிரவாகம் எடுக்கிற எண்ணங்கள் அப்படியே எழுதப்பட்டு புதுமையான நாவல் உருவாகிவிடும். திட்டமிடாத நாவல் அது.

பாரதிராஜா படம் பிடிக்கிற 'ஸ்டைலும்' இதுபோல்தான் போலும். அவை முன்கூட்டியே திட்டமிடாத படங்கள் என்கிறார் அவர்.

ஒரு காட்சியை எப்படிப் படம் ஆக்க வேண்டும் என்பதைப் பாரதிராஜாவின் உள்ளத்தில் அப்போது ஒலித்துக்கொண்டு இருக்கிற 'ரீங்காரம் இடுகின்ற நாதம்தான், ஜீவலயம்தான் முடிவு செய்யுமாம் 'லா லல்ல லாலா...' என்று இவரின் மனது ரீங்காரமிடுகிறது என்றால் அதே ராகத்தைக் காட்சிப் படைப்பாக மாற்றித் தந்து விடுகிறாராம் நமக்கு...!

பாரீஸ் நகரில் 'சர்ரியலிசம்' என்று மற்றொரு நவீன இயக்கம் உருவானது. கவிதையிலும், ஓவியத்திலும், சிற்பம் வடிப்பதிலும், இசையிலும் இந்த இயக்கத்தின் வீச்சு பெரும் பாதிப்பை உருவாக்கியது.

**வித்தியாசமான சிந்தனை**

உள்மனதில் நம்மை அறியாமல் எழுந்து உலவுகிற எண்ண அலைகளுக்கு ஒரு வடிகால் அமைத்து அவைகளைக் கவிதை வரிகளாக, கலையெழில் ஓவியமாக, மனம்கவர் இசையாக வடித்துத் தருகிற குறிக்கோள் கொண்டது இயக்கம்.

அழகுணர்வு அவரின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று. பிலிம் சுருளில் காட்சிகளைப் படம் பிடித்து அழகுக் கோலங்களாக நம் கண்களுக்கு விருந்தளிக்க விரும்புகிறார் அவர்.

குதித்துக் குதித்துச் செல்ல வேண்டியதைக் குதித்துக் குதித்துச் செல்ல வைப்பார் அவர். ஆழமான உணர்வுகளை ஆழமாக மெதுவாக நகர்கிற விஷயத்தை மெதுவாக என்று 'மூவ்மெண்ட்ஸ்' ஸுக்கு முக்கியத்துவம் தந்து படம் எடுக்கிறார் அவர்.

இவைதான் இவரின் படவுலகப் பயணத்தில் எந்தப் பக்கம் திரும்பினாலும் நாம் காணப்போகும் படிப்பினைப் பாடம் என்கிறார் அவர்.

பாரதிராஜா தமிழ்த்திரையுலகில் நிச்சயமாக ஒரு தனிக்காட்டு ராஜா...! ★

## தாயுமானவர் சமாதியில் இளையராஜா தியானம்

சினிமா இசை அமைப்பாளர் இளையராஜா; இராமநாதபுரத்தில் உள்ள தாயுமானவசாமிசமாதியில்கண்களை மூடி ஒருநாள் முழுவதும் தியானத்தில் இருந்தார்.

தமிழ்நாட்டில மட்டும் இன்றி உலகில் வாழும்



இளையராஜா

அனைத்து தமிழர்களும் நன்கு அறிந்த மகான் தாயுமானவர் 18-ம் நூற்றுண்டில் வாழ்ந்த தாயுமானவர் திருச்சி நாயக்க மன்னரிடம் 'பிரசாந்த்' (அமைச்சர்) ஆக இருந்தவர்.

வாழ்வில் நிலையாமையை எண்ணித் தாயுமானவர் துறவறம் பூண்டார். புரட்சிகரமான இவரின் கருத்துக்கள் இவரை'புரட்சித் துறவி' ஆக்கின. இவரின் 'கண்ணி'களும் 'பதிகங்க'ளும், பாடல்களும் தமிழுக்குக் கிடைத்த 'அருட்கொடை ஆகும்.

புண்ணிய பூமியான இராமநாதபுரம் வந்த தாயுமானவர் 'ஜீவன் முக்தர்' (சமாதி அடைந்தார்) ஆனார். இவரின்ஜீவசமாதிஇராமநாதபுரத்தில் உள்ளது. இந்த சமாதி 'தாயுமானவர் தபோவனம்' என்று அழைக்கப்படுகிறது. இந்த தபோவனத்தை ராமகிருஷ்ண மடாலயத்தினர் நிர்வகித்து வருகிறார்கள்'

சினிமா இசை அமைப்பாளர் இளையராஜா 'திடீர்' என்று இராமநாதபுரம்'தபோவன'த்திற்குச் சென்றார் அவருடன் அவரது அண்ணன் பாஸ்கரும் சென்று இருந்தார்.

இளையராஜா தாயுமானவர் சமாதியில் ஒரு நாள் முழுவதும் அமைதி விரதம் மேற்கொண்டு கண்களை மூடி தியானத்தில் இருந்தார்!

அவரது அமைதி தனிமைக்கு தடங்கல் ஏற்படும் என்பதற்காக அவருடைய வருகை ரகசியமாக வைக்கப்பட்டு இருந்தது: ★

## திரைப்பட நடனங்களுக்குள்ள அபார சக்தி

திரைப்படங்களில் நடனம் ஆடுவதற்கு நடனக் கலையைக் கற்றிருக்கவேண்டியது அவசியமா? படங்களில் இடம்பெறும் நடனங்கள் வல்கராக இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

—என்று நடிகை ஹேமமாலினியிடம் கேட்டபோது.

'திரைப்பட நடனங்களை மோசமானவை என்று நான் சொல்லமாட்டேன்.

ஏனென்றால் நானும் ஒரு நடிகைதான். படங்களுக்காக எடுக்கப்படும் நடனக்காட்சிகளை பற்றி நான் நன்றாக அறிவேன்: பொதுவாக தொன்மையான நடனக்கலைகளைக் கற்றிருக்கும் நடனக்கலைஞருக்கு திரைப்பட நடனங்கள் தரக்குறைவானதாகவும், அதிருப்தி தரக்கூடியதாகவும் இருக்கலாம்.

ஆனால் கோடிக்கணக்கான மக்களை தன் பக்கம் கவர்ந்து இழுக்கும் அபார சக்தியை திரைப்பட நடனங்கள் பெற்றிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. அவை பலவகை நடனங்களின் கலவையாக இருக்கின்றன. அதாவது மசாலா நடனம்!

'உண்மையில் குறிப்பிட்ட நடனக்காட்சியில் நடிப்பவரைப் பொறுத்தே காட்சி அமைகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு மோசமான நடன அசைவை செய்யச் சொன்னால் நான் அதையும் அழகான முறையில் தோன்றும்படி செய்துவிடுவேன். காரணம் நான் நடனம் பயின்றவள்; வேறு எந்த நடிகையையாவது அப்படி நடனமாடச் சொன்னால் அந்த அசைவு மிகவும் 'சீப்' பாக இருக்கும்.

உடலில் வளைந்து கொடுக்கும் தன்மையையும்; உள்ளுணர்வையும் பொறுத்தே நடன அசைவுகள் அமைகின்றன. மனதில் என்ன நினைத்துக்கொண்டு ஆடுகிறேமோ அதையே முகமும் பிரதிபலிக்கும்' என்று விளக்கத்துடன் விடை கொடுத்திருக்கிறார் ஹேமமாலினி. எ 4)

## மேடை வேடிக்கை

நடிகவேள் எம். ஆர். ராதா ஒரு சமயம் பகுத்தறிவு பிரசார மேடையில் பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது கூட்டத்தில் இருந்த ஒரு மனிதர், 'இந்த நாத்திகப் பிரசாரத்தை நீங்களும் நாற்பது வருஷமா பேசிட்டு வாறீங்களே... இதைக் கேட்டு எங்களுக்கு சலிப்பு ஏற்பட்டாச்சு... உங்களுக்கு சலிப்பு ஏற்படலியா?... என்று கேட்டார்.

ராதா அதற்குப் பளிச் சென்று பதில் தந்தார்.


'நாற்பது வருஷமா நாங்க பேசுற நாத்திகப் பிரசாரத்தில் சலிப்பு வந்துட்டுதுன்னு சொல்றீங்களே... அப்படின்னு நாலாயிரம் வருஷமா நீங்க சாமி. பூதம் என்று பேசி வருகிற ஆத்திகப் பிரசாரத்தைக் கேட்டு எங்களுக்கு எவ்வளவு அலுப்பு ஏற்பட்டிருக்கும்? அதை யோசிச்சீங்களா?'

இப்படி ராதா கேட்டதும் அவையோர் நகைப்பொலியில் அங்கே கேள்வி கேட்டவர் அமுங்கிப் போய் உட்கார்ந்து விட்டார்!

(எ – 4)

### வெள்ளித் திரையில்

## சொற்சிலம்பம்



போட்டி இல. 93

சொற்சிலம்பம் இல: 93
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ............................................
விலாசம்: ............................................
............................................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 8 - 2 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. தைமாதத்திற்குரிய வாழ்த்து 6. முட்டைக்குள் இருப்பது 7. மலரினம் 9 மலர்தல் 10. வெண்ணிலா 13. கூப்பிடு 14. வெளிச்சம் 15. நிலம் 16. படைப்பாளி 18. புருஷன் 19. வாசனைப்பொருள் 22. மதனி தலைகீழாக உள்ளார்.

**மேலிருந்து கீழ்:**

1. விம்மல் 2. பழமரம் 3. ஆகாயம் 5: கறள் 6. தேன் 9. தலை எழுத்து 11. ;குழந்தைப் பேச்சு 12. ஓர் ஆயுதம் 13. மூத்தவன் 14. ஒரு 15. புத்திரன் 16. ராசிகளில் ஒன்று 20. காற்று.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# வள்ளுவர் கூறிய மக்கட்பண்பு

# மிளிரும் ஆஸ்திரேலிய சமூகவாழ்வு

( சென்றவாரத் தொடர்ச்சி )

ஒருநாள் இரவு, ஒரே சத்தம். விளக்கம் தெரியவில்லை. எனது அறையை விட்டு வெளியே எட்டிப்பார்த்தேன். வீடு முழுவதும் வெளிச்சம். ஒளி வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. பணிப்பெண்கள் மூவரும் ஓட்டமும் நடையுமாக ஓடித் திரிந்தார்கள்.

**நாற்றுமேடை திக்கிரை**

மணித்தியாலங்கள் கரைந்தன. காலைப்பொழுது வரும் வேளைதான் முதலாளி வீடு திரும்பினார். நாற்றுமேடையல்ல, சிறு நாற்று மரக்குன்றினுக்காம் தீ வைக்கப்பட்டது மிகவும் வேதனையாகக் கூறினார். 'எல்லாம் கருகிச் சாம்பராகிவிட்டனவே, கருகாதவையும், தீயின் வெப்பத்தில் இறந்துவிடும்' என்று வேதனைப்பட்டார்.

திடீர் என்று தொலைபேசியில் பேசினார். 'ஆ, வருகிறேன்' என்றார்.

பணிப்பெண் தெளிவுபடுத்தினார். 'அயல் காணிக்காரன்-குத்தகைக்காரன்தான் பற்றவைத்தானும்'

ஒரு மணி நேரத்தின் பின் வந்தார் முதலாளி. வந்ததும் வராததுமாக 'ஜெசி அந்தக் கோடரியை எடு, எனது கோட்டையும் கொண்டு வா' என்றார். நான் என்ன பேசுவதென தெரியாது நின்றேன்'

'சாரு, நீ வந்தால், எனக்குத் தெம்பாக இருக்கும்' என்றார். நான் தயங்கினேன்.

பணிப்பெண் 'காலம் தாழ்த்தாதீர்கள். உடை நல்லாவே இருக்கிது. தீர்ப்பு வழங்கப் போகிறார்கள். போங்கள்' என்று தள்ளாது தள்ளிவிட்டார்.

**பிரச்சினை தீர்க்கக் கோடரிப் போட்டி**

அங்கு ஒரு பெரிய கூட்டமே நின்றது. அங்கே இன்னொருவன் கூரிய கோடரியுடன் நின்றிருந்தான். நம் ஊர் சூரன் போர்தான் ஞாபகத்திற்கு வந்தது. லியோ (என் முதலாளி) போகும்போது கூட்டம் விலகியது. 'நான் ஆயத்தம்' என்றார் முதலாளி. நடுவர் ஒருவர் விசிலுடன் நின்றார். என்ன இது! கோடரியுடன் ஒட்டப் போட்டியா?

என் வியப்பிற்கு விடை பகர்வது போன்று சமநீள அகலமுள்ள இரு ரிம்பர் மரக்குற்றிகள் அங்கு போடப்பட்டன. குற்றிகளின் நீளம் 4 அடி ஆகும்:

லியோவும், மெயிற்லண்டும் (எதிரி) தத்தமது மரக்குற்றிகளுக்கு முன் நின்றார்கள்.

லியோ, மெயிற்லண்டைப் பார்த்து, 'பந்தயம் எனில் பந்தயம் தான்' என்றார். 'ஆம்' என்றார் எதிரி.

விசில் ஊதியது. தலைகள் நிமிரவே இல்லை. இருவரின் முறுக்கேறிய தசைநார்களும் கோடரிகளுடன் மேலும் கீழுமாக அசைந்தன. பார்க்கவே பரபரப்பாக இருந்தது. மாறி மாறி இருவரது கோடரிகளும் சமகாலத்தில் குற்றிகளில் வீழ்ந்தன.

பணிப்பெண் மெதுவாக என் காதில் 'லியோ சார்தான் வெல்லுவார் பாருங்களேன்' என்றார். என்ன வெற்றி? எது வெற்றி? என்று குழம்பினேன்:

4, 3, 2, 1 படார் என்று லியோவின் குற்றி 2 வேறு துண்டுகளாகப் பிரிந்தன. லியோ உடனே மின்னும் கோடரியைப் பெருமையோடு தூக்கினார். ½ நிமிடப்பொழுதுதான் எதிரி பிந்தினார்; சத்தியம் வென்றுவிட்டது. விரோதத்திற்குத் தீர்ப்புக்கிடைத்துவிட்டது.

குற்றிகளைச் சமதுண்டுகளா முதலில் பிளந்து வேறுக்குபவரே வெற்றி பெற்றவராவர். வென்றவர் விரும்பியபடியே நடப்பது மற்றவர் [illegible] தொங்கிய தலையுடன் தன் [illegible] திரும்பினான்.

'நீ நாளை விடிவதற்குள் இக்கிராமத்தையே விட்டுப் போய்விட வேண்டும்' என்றார் நடுவர். 'ஆம்' என்று தலையை ஆட்டி, தன் தோல்வியைத் தன் பிழையை, குரோதத்தின் முடிவை உணர்ந்து மிக வேதனையுடன் சென்றான்.

எமது ஊரில் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறிய எல்லை வழக்கு; காணிப்பிரச்சினை என்பன மாதங்களாக, ஏன் வருடங்களாகவும் நடைபெறுகின்றது. பல ஆயிரம் டொலர்களின் நட்டத்திற்த 4½ நிமிடம் போட்டியில் தீர்ப்பே வழங்கப்பட்டுவிட்டது.

எத்தனைதான் முன்னேற்றம் அடைந்தாலும், தனது கிராமத்திற்கும், தன் கிராம மக்களின் உயர் கருத்துக்களுக்கும் கட்டுப்பட்டு வாழ்பவன்தான் பண்பட்ட மனிதன்-என்பதனை உணர்த்துகின்றது. இத்தகைய உயர் பண்புகளுக்குப் பதிலாகத் தங்கள் உடல் வலிமையைப் பரீட்சித்து தீர்ப்பு வழங்குவதற்குப் பதிலாக, ஒரு விஞடியில் கோழைகளாகப் பிறர் உயிர் குடிக்கும் பண்பு அநாகரிகமானது. அருவசயானது. உலகின் பல பாகங்களில் பண்பான சமூகங்கள் உள்ளன. பல பண்பில்லா சமூகங்களும் உள்ளன. நியூசவுத் வேல்ஸின், ஒரு கிராமத்தின் காருண்யம் நிறைந்த நீதியை நேர்மையுடன் வேண்டி நிற்கும் கட்டுக்கோப்பான சமுதாய அமைப்பு மனிதனை மேலும் மேம்பாடடையவனுக்குகின்றது. ★

(முற்றும்)

**- ஹாருகாசினி -**

> கட்டுரையாளர் 'ஹாருகாசினி' முதுகலைமாணிப் பட்டதாரி.
>
> பெற்ற கல்வியின் பயனுக ஒருவன் தன்னலத்தைக் கருதி சமுதாயத்திற்கு தீமை விளைவிக்கும் முறையில் நடந்து கொள்வானுனல் அவனைக் கல்வியறிவு பெற்ற சான்றோன் என யாரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். திருவள்ளுவரும் ஏற்றுக்கொள்ளவில்லை: 'அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட்பண்பில்லாதவர்' என்பது வள்ளுவர் கூற்று.
>
> கல்வியின் பயனுக மக்கட்பண்பு வளரவேண்டும்'
>
> '......நன்நடை நல்க வேந்தற்குக் கடனே......'— (புறநானூறு 312) இஃது இங்கே அரசினைக் குறிக்கின்றது:
>
> அரசினை உருவாக்கி ஆட்சி பீடத்திற்கு அனுப்பும் மக்கள் அறிவுடையவராக, சீர்தூக்கி ஆராயும் திறன் உடையவராயின் அரசும் சிறப்புடையதாகும்.
>
> இந்த அடிப்படையிலான சமூக அமைப்பை நான் நியூசவுத் வேல்ஸில் கண்டேன்—என்று கட்டுரையாளர் கூறுகிறார்.
>
> அவரின் ஆஸ்திரேலிய அனுபவக் கட்டுரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவழி நடப்போம்; இறைதூதரைப் போற்றுவோம்!

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள் 'இஸ்லாம் ஐந்து அம்சங்களின் மீது நிறுவப்பட்டுள்ளது.

அவை அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவர் இல்லை என்றும், முகம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், தூதரும் ஆவார்கள் என்றும் சான்று பகர்தல், தொழுகையை நிலைநாட்டுதல்; ஐகாத் கொடுத்தல், ஹஜ் செய்தல்; ரமழான் மாதம் நோன்பு நோற்றல் ஆகியன.' [புகாரி முஸ்லிம்]

இந்த ஹதீதில் இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைகள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றின் மீதுதான் இந்த இஸ்லாமிய கட்டடம் நிலைத்து நிற்கிறது

இந்த அடிப்படைகள் இல்லையெனில் இஸ்லாமிய கட்டடம் நிலைபெற முடியாது' உண்மையான முஸ்லிம்மாக இருக்க விரும்புவோரும் இந்த மார்க்கத்தை உலகில் நிலைபெறச் செய்யும் நோக்குள்ளோரும் முதன்மையாகச் செய்யவேண்டிய பணி என்னவெனில் இந்த ஐந்து அடிப்படைகளையும் செவ்வனே நிறைவேற்ற வேண்டும் என்பதுதான்.

இஸ்லாம் எனும் கட்டடத்தின் இதர பகுதிகள் அனைத்துக்கும் அடிப்படையான முதலாவது தூண் இதுதான்.

அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் அதிபரோ வணக்கத்துக்குரியவரோ அல்லர்



என்றும் முஹம்மத் [ஸல்] அவர்கள் அல்லாஹ்வின் இறுதி தூதரும் அடியாருமாவார்;

இந்த அடிப்படைகளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதனாலேயே அண்ணல் நபி [ஸல்] அவர்கள் மற்றொரு சமயம் இவை தான் இஸ்லாம் என கூறினார்கள்.

## ஒரே இறைவன் என்ற மூல மந்திரம்

ஏக இறைவனையும், அவனது திருத்தூதரையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட பின் மனிதனின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டு விடுகிறது.

மன விருப்பங்கள், உலக சம்பிரதாயங்கள், சடங்குகள், மூதாதையரின் பழக்கவழக்கங்கள் மனிதர்கள் தாமே வகுத்துக்கொண்ட சட்டதிட்டங்கள்.

இதர வாழ்க்கை அமைப்புகள் ஆகியவற்றுக்குப் புறம்பாக அவன் அல்லாஹ்வின் அடியனாய் ரஸூல் [ஸல்] அவர்களைப் பின்பற்றுபவனாய் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவனாய் ஆகிவிடுகின்றான். இதுவே இஸ்லாத்தின் அடிப்படை கட்டடம் ஆகும்.

## தொழுகையால் ஆத்மா தூய்மை அடைகிறது

நாளொன்றுக்கு ஐந்து வேளை தொழுவதனால் இறைவனுடன் மனிதனுக்கு ஆத்மீக தொடர்பு ஏற்பட்டு அவனது ஆத்மா வலுவடைகிறது.

இறை அச்சத்தையும் இறை அன்பையும் வளர்க்கிறது. மேலும் மனிதன் இறைவனின் அடியானாக இருக்கவேண்டும். தனிப்பட்ட வாழ்வு - பொதுவாழ்வு ஆகிய எல்லா நிலையிலும் அடியானாக இருத்தல் வேண்டும் என்ற செயல் ரீதியான பாடத்தைக்கற்றுத்தருகிறது.

## விருந்தோம்பலின் சிறப்பு

நோன்பு இறை நம்பிக்கை உடையவனை ஒழுக்கமுள்ளவனாக்குகிறது. ஒருமாதம் தொடர்ச்சியாக மனிதனை உலக பாவத்திலிருந்து தூய்மைப்படுத்துகிறது.

மேலும் பாவத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அவனுக்கு வலிமை ஊட்டி - வழிகாட்டி நல்லவற்றில் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

இறை அச்சத்துடன் ஏழைகளுக்கு இரங்கும் குணச் சிறப்பை வளர்க்கிறது. மேலும் விருந்தோம்பலைத் தளைக்கச்செய்கிறது. ★

**- ஓ. எம். அகமது லத்தீப் -**




## இறைவா! உன்னைப் பாடுகின்றேன்

1\.
நற்றிடமாய் எந்தன்இதயம்
உள்ளதனாலே
நல்மனதாய் ஓ! இறைவா
உன்னைப்பாடுவேன்
இதயபூர்வ மாகநானும்
பாடிமகிழ்வேன்
இனியகீர்த்த னைகள்பாடி
உன்னைத்துதிப்பேன்

2\.
விழித்துஎழு யாழேநீயும்
வீணையேநீயும்
குதித்துவரு காலையைநான்
எழுந்திடச்செய்வேன்
அந்தஇளங் காலையிலே
நாங்கள்சேருவோம்
சந்தம்மிகுங் கீதங்களைப்
பாடிமகிழ்வோம்

3\.
உலகநாடு கள்எங்குமே
உந்தன்புகழை
உளத்திலூறு ஆசையோடு
எடுத்துக்கூறுவேன்
மக்களெல்லாம் அறியும்படி
கீதங்களாலே
திக்கிலெல்லாம் ஓ! கர்த்தாவே
உன்னைப்பாடுவேன்

4\.
எம்மில்இன்று நீசெலுத்தும்
அன்புஎன்றுலோ
விண்ணில்முட்டு மளவுக்குமா
பெரிது பெரியதே
நீவளர்க்கும் உண்மைஎன்னும்
சத்தியப்பண்போ
மேகத்துக்கும் சென்று அதை
எட்டவல்லதாம்

5\.
உயரவேண்டும் நீஇறைவா
வானத்துக்குமேல்
திகழவேண்டும் உனதுபுகழ்
உலகமெங்கிலும்

6\.
உந்தன்பிரிய மானநானே
இன்றுஅழுகிறேன்
என்றும்வலிய தானஉனது
சக்தியோடுநீ
ஈங்குவந்து உனதுபிள்ளை
ஆனஎந்தனை
மீட்டுநன்று காத்திடுவாய்
காத்திடுவாயே

7\.
தனதுதேவ ஆலயத்தில்
இருந்தஇறையின்
மனதுபேச நேர்ந்திட்டது
பரிசுத்தமாக
சத்தியமாய் வாக்குறுதி
தந்தார்எனக்கு
நித்தியமாய்த் தருவதாக
இங்குஇவைகளை.

வேதாக சங்கீதம்: 108
தமிழ் வடிவம்: நவாலியூர் சி.என். செல்லத்துரை




# நூல் விரிசை

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கத்தின் தமிழ் சஞ்சிகையான 'விஞ்ஞான முரசு' விற்பனைக்கு வந்திருக்கிறது

இதுவரை வருடத்திற்கு ஒன்றாக வெளிவந்த இந்த சஞ்சிகையை தற்போது இருமுறை வெளியிட முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பெரிய அளவில் 45 பக்கங்களுடன், அழகுற அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கும் காத்திரமான சஞ்சிகை.

பொதுமக்களிடையே-குறிப்பாக பாடசாலை உயர் தர வகுப்பு மாணவர்களிடையே விஞ்ஞான அறிவை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு விஞ்ஞான முரசு

நூல்:- விஞ்ஞான முரசு — சஞ்சிகை
விலை:- ரூபா — நான்கு
வெளியீடு:- இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கம்
விமர்சனம்:- அறிவுநாயகன்

வெளிவருவதாக சஞ்சிகையின் ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் பாடசாலை மாணவர்கள் என்று இல்லாமல் பொதுவாக விஞ்ஞான விந்தைகளை விளங்கிக்கொள்ள விரும்பிநிற்கும் எல்லோருக்குமே சிறந்த அறிவூட்டகமாக இச்சஞ்சிகை அமைந்திருப்பது பாராட்டத்தக்கது.

புவியியல், வானவியல், இரசாயனம், பௌதிகம், கடல் வளம், விவசாயம், மருத்துவம், கல்வியியல், தொழில் நுட்பம், சுற்றுடல் பாதுகாப்பு விலங்கு மருத்துவம் என்று விஞ்ஞான உலகில் வித்தியாசமான துறைகளைத் தொட்டுப்போகக்கூடியதாகக் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு நிகரானவையாக நிற்கமுடியாமல் - வறுமையில் வாடி வாழ்விழந்து நிற்கும்- மூன்றும் மண்டலநாடுகளுக்கு இப்போது தேவைப்படும் ஊட்டச்சத்து விஞ்ஞானத் துறை

இளம் சமுதாயத்தினர் மத்தியில் இந்த ஊட்டச்சத்தை செலுத்தி, அவர்களை ஊக்குவித்து மறுமலர்ச்சி ஏற்படுத்துவதன்மூலம் மட்டுமே, மூன்றும் மண்டல நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை உச்ச நிலைக்குக்கொண்டுவர முடியும்.

விஞ்ஞான ஊட்டச்சத்தை நமது இளம் சமுதாயத்தின் மத்தியில் ஊடுருவிச் செலுத்துவதற்கு 'விஞ்ஞான முரசு' போன்ற ஊசிகள் தேவை.

அதுவும் நம் சமுதாயத்திற்குப்புரியும் மொழியில் இந்த விஞ்ஞான உரைகளை எடுத்தியம்புவது மிகக்கட்டாயமானதாகும்.

அந்த வகையில்-நமது நாட்டில் - முற்றும் தமிழ்மொழியில் - அதுவும் முழுதாக விஞ்ஞான விளக்கவிடயங்களைக் கொண்டு - ஒரு சஞ்சிகையை வெளிக்கொணர்வது வித்தியாசமான ஒரு முயற்சியாகும்.

ஆனால் இந்த முயற்சி வெற்றியடைய வேண்டுமானால் - உரைக்கமுற்பட்ட விடயங்கள் நமது சமூகத்தின் காதுகளில் எட்டி உணர்வுகளைத் தட்டி விஞ்ஞான உலகின்பால் அவர்களை விழிப்படையச்செய்ய வேண்டுமானால் - முக்கியமான ஒரு விடயத்தைக் நிச்சயம் கவனித்தாகவேண்டும்.

அதுதான் இலகு தமிழ். எடுத்தவிடயம் விஞ்ஞானம். அதை ஆங்கிலம் தவிர்ந்த பிறமொழிக்கு மாற்றம் செய்வது மிகக்கடினமாக இருந்தாலும்கூட அதிலும் விடா முயற்சிதேவை.

இறுக்கமான விஞ்ஞான விளக்கங்களை இங்கு தமிழில் வெளிப்படுத்துவது கஷ்டமாக இருந்தாலும்கூட, விடா முயற்சி தேவை. வெளியீட்டாளர்கள் இது விடயத்தில் அதிக சிரத்தை எடுத்தாக வேண்டும்.

'தமிழில் விஞ்ஞான எழுத்தாளர்களுக்கும் பஞ்சமா?' என்ற தலைப்பில் சஞ்சிகையில் தனிக்கட்டுரையாக எழுதப்பட்டிருக்கும் கேள்வி வெளியீட்டாளர்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறது.

விஞ்ஞான முரசின் இலகு தமிழ் முயற்சியில் நல்ல பறுபேறு கிடைக்காமல் இல்லை. உதாரணம்;- கடல்வளம் பற்றிய கட்டுரை ஒன்றில் 'இறால் வேளாண்மை' என்ற சொல் பரவலாய் பாவிக்கப்பட்டிருக்கிறது.

'வேளாண்மை' - என்ற சொல் பொதுவாக 'விவசாயம்', 'பயிர்த்?தொழில்' என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றபோதிலும்—

இச்சஞ்சிகையில் கடற்றொழில் ஒன்றையும் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சொற்பிரயோகத்தில் தவறு என்று குற்றம் சுமத்துபவர்கள் இருந்தாலும் இப்பவும் இப்பகுதியில் பாவிக்கப்பட்டிருப்பது சாலவும் பொருத்தமே.

அறிவை வளர்ப்பதற்கு மொழியை இத்தகைய வழியில் திரிவுபடுத்துவது தவறில்லை.

அடுத்துவரும் வெளியீடுகளில் நல்லமாற்றத்தை எதிர்பார்க்கலாம். ★

**குட்டிக்கதை**

# வரட்டுக் கௌரவம்

ஒரு ஜோடிக் கண்கள் என்னை உற்று நோக்குவதை நான் பார்க்காவிட்டாலும் என் மனசுக்குத் தெரிகிறது. அது கழுகுப் பார்வை அல்ல, இதயத்தில் இருந்து எழும் ஒரு வகை உணர்வில் தத்தளிக்கும் அன்புப் பார்வை என்று.

விம்புடன் நான் தலை திருப்பாமல் இருக்கிறேன். எனது வாழ்க்கையில் எவ்வளவு தியாகங்களைச் செய்தேன். அது அந்த இறைவனுக்கே தெரியும். இதையும் ஒரு தியாகமாக நினைக்கிறேன்.

கைப்பையினுள் இருந்த ஓர் ஆங்கிலப் பேப்பரைப் பிரித்து முகத்துக்கு நேரே பிடித்துக் கொள்கிறேன். பேப்பர் படிக்கவல்ல, என் கண்கள் தற்செயலாகத் திரும்பினால் அவரைக் காணாமல் இருப்பதற்காக.

'துர்க்கை அம்மன் கோயில் இறக்கம் இருக்கோ' மினிவான் பையனின் குரல் பலமாக ஒலிக்கிறது.

நான் அவசரமாகக் கைப்பையை எடுத்துக்கொண்டு இறங்குகிறேன்; என் மனம் அவரைத் திரும்பிப் பார்க்கச் சொல்கிறது. அதை அடக்கிக் கொண்டு நடையைக் கட்டுகிறேன். அந்த ஒரு ஜோடி விழிகளில் ஏக்கப் பார்வை என் கற்பனையில் தெரிகிறது.

கால்கள் வேகமாக நடக்கின்றன. கண்களோ கண்ணீரைப் பாய்ச்சி விடுவோம் எனப் பயமுறுத்துகின்றன. மனம் பழைய நினைவுகளில் தங்கி விடுகிறது. இன்று நான் ஒரு பிரபல வைத்திய நிபுணர் டாக்டர் மிஸ். எஸ். சாந்தி; இப்பட்டத்திற்காக உழைக்கிறேனே தவிர, உள்ளே நான் ஒரு புவர் வுமன், எஸ் ஐ ஆம் புவர்.

'சாந்தி இந்த மேகமெல்லாம் எங்கே போகுது சொல்லு பாப்பம்?'

'எனக்குத் தெரியாது நீதான் சொல்லு' அதுகள் என்ர காதலிக்குக் கடிதம் கொண்டு போகுதுகள்'

'ஓ... அவருக்கும் ஒரு நினைப்பு, உன்ர மூஞ்சியின்ர திறத்திலை'

'ஏன் அப்படிச் சொல்லுறாய். எத்தனை பெட்டையள் என்னைப் பார்க்கிறார்கள்'

'ஒருவேளை என்னடா அநுராதபுரத்தான் ஒன்று மாறி இஞ்ச வந்திட்டுதோ என்று பார்த்திருப்பினம்'

'ஓ உன்ர பகிடிக்கு நானும் லவ் பண்ணிக் காட்டுறது தான்'

'ஆரை லவ் பண்ணப் போறாய்'

'வேறை ஆரை உன்னைத் தான்'

'சீ ..... இப்பிடியெல்லாம் கதைச்சா நான் உன்னோட கதைக்க மாட்டன்'

அன்று நான் இந்த வார்த்தையை மனதால் சொல்லவில்லை. ஒரு பேச்சுக்குச் சொன்னேன். உண்மையில் நானும் அவரை விரும்பினேன், நாங்கள் காதலித்தோம் உண்மை. சாட்சிகள் இருவரின் இதயங்களே தவிர கடிதங்கள் சந்திப்புக்கள் ஒன்றுமேயில்லை. எம்மைத் தவிர வெளிஉலகுக்கு நாம் காதலிக்கிறோம் என்பது தெரியவில்லை. அவ்வளவு ஜாக்கிரதையாக நடந்து கொண்டோம்.

காலங்கள் கடந்தன. அவர் வெளிநாடுபோய் மூன்று வருடங்களாகிவிட்டன. நான் ஏ. எல் பயோசயன்ஸ் பைனல் படித்துக்கொண்டிருந்தேன். அப்போதுதான் அவரிடம் இருந்து என் பெற்றோருக்கு ஒரு கடிதம் வந்தது

என்னைத் தனக்குத் திருமணம் செய்து தரும்படி எழுதியிருந்தார். கடிதம் கசக்கி எறியப்பட்டது. என் மனமோ சொல்லவும் முடியாமல் திண்டாடியது. கடைசியில் உண்மையைச் சொன்னேன். ஒன்றுமே எடுபடவில்லை.

**- சாந்தா -**

ஆறு நாட்கள் அழுகையும் கையுமாக ஆகாரமின்றி இருந்தேன். ஒன்றுமே பலிக்கவில்லை. யார் யாரோ வந்தனர். அவர்கள் என் உறவினராம், புத்திமதிகள் நிறையக் கூறினர். ஆனால் அது ஒன்றையுமே அவர்கள் கடைப்பிடிக்காததே கவலைக்குரிய விஷயம். மனம் மாறினேன் என்பதை விட மாற்றப்பட்டேன் என்பதே சிறந்தது.

படித்து ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டுமென ஊன்றிப் படித்தேன். மாதம் மாதம் வரும் அவரின் கண்ணீர் வரிகள் குப்பையிலே வீசப்பட்டன. அங்கே அவை ஒரு மாநாடே நடாத்தி இருக்கலாம். எனக்குத் தெரியாது. உண்மையில் நான் [illegible] வெறுக்கவில்லை. ஒவ்வொரு இரவும் கண்ணீரால் நனையும் தலையணைக்குத் தான் தெரியும்.

காலம் எவ்வளவோ மாற்றப்பட்டது. அவரின் நிலை எனக்குத் தெரியாது. ஆனால் என் இதயம் என்றும் அவருக்காகக் காத்திருந்தது. இந்த இருபது வருடத்தின் பின் இன்றுதான் நான் அவரைத் தற்செயலாகச் சந்தித்தேன். எனக்கு அதுவே போதும். என் வாழ்க்கை என்றும் சேவைக்காகவே.

இது நடந்து மூன்று நான்கு மாதமாகியிருக்கும். எனக்கு அவசரமாக டெலிபோன் வந்தது. ஆஸ்பத்திரிக்குப் பறந்தேன்.

அங்கே என் இனிமைக்குரியவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அந்த வேதனைத் துடிப்பிலும் அவர் கண்கள் என்னைக் கண்டதும் மலர்ந்தன.

'சாந்தி உனக்காகத்தான் நான் வாழ்ந்தேன். உனக்கே என் இதயம் சொந்தம்'

அவரைக் காலன் கவர்ந்துவிட்டான். மனம் குமுறியது. உலகம் எனக்கு வெளியே சூன்யமாகத் தென்றியது. ஓலமிட்டுக் குமுற வேண்டும் போல் இருந்தது ஆனால் முடியவில்லை. காரணம் நான் ஒரு டாக்டர் என்ற வரட்டுக் கௌரவம்

அந்தக் கௌரவம் தானே வாழ்க்கையின் வசந்தத்தை விழுங்கியது. மீண்டும் நான் ஒரு வைத்திய நிபுணராக வெளி உலகில் உலாவுகிறேன். [illegible] ★

# பொது அறிவுப்போட்டி இல. 19

| | | |
|---|---|---|
| 1 | ஒரு மண்டலம் | 40 நாள் / 50 நாள் |
| 2. | எது முக்கியம் என்பார்கள்? | மானம் / மரியாதை |
| 3 | விருந்தில் படைக்கப்படுவது? | இனிப்பு / பாயாசம் |
| 4. | புயல் என்றால் எது இருக்கும்? | காற்று / மழை |
| 5. | கடைவது எது? | கீரை / மோர் |
| 6. | கண்ணனின் நண்பன் இவன்? | குசேலர் / பலராமன் |
| 7. | பூஜைக்குப் பயன்படுவது எது? | கற்பூரம் / சாம்பிராணி |
| 8. | மழையில் நனைந்தால் வருவது? | சளி / காய்ச்சல் |
| 9. | இராமபிரான் இவரின் அம்சம்? | மகாவிஷ்ணு / சிவன் |
| 10. | துரத்துவது எது? | நினைவுகள் / வினைகள் |
| 11. | திருமண வீட்டில் கட்டுவது எது? | வாழை / தோரணம் |
| 12. | தண்ணீர் கிடைப்பது எங்கே? | குழாய் / கிணறு |

பெயர்:- ..................
விலாசம்:- ........................
...............

பொது அறிவுப்போட்டி இல: 19
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டுக

### நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 15. 02. 89 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணி அரசை விரும்பாதவர்கள் தமிழகமக்கள் - கருணாநிதி வாதம்

தமிழக அரசியலில் நிலையான ஆட்சி ஒன்று ஏற்பட்டு விட்டது.

அசைக்க முடியாத 3 இல் 2 பங்கு பெரும்பான்மையுடன் தி. மு. க அரசு பதவி ஏற்றுள்ளது

அதுவும் இதுவும் சேர்ந்திருந்தால்......

இதுவும் அதுவும் சேர்ந்திருந்தால்..... தி. மு. க. அரசு வந்திருக்குமா? என்ற ஊகப்பேச்சுக்களுக்கு எல்லாம் முதலமைச்சராக வந்தவுடன் கலைஞர் சரியான பதில் கொடுத்து விட்டார். 'இந்து'வுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முதலமைச்சர் கருணாநிதி இன்னொரு வாதத்தையும் முன் வைத்திருக்கிறார்.

இந்திரா காங்கிரஸும் ஜெயலலிதா அணியும் சேர்ந்திருந்தாலும் வெற்றிபெற்றிருக்க முடியுமா?

இக் கேள்விக்குக் கலைஞர், முடியாது என்றே பதிலளித்திருக்கிறார்.

அதற்கு உதாரணமாக 1980 இல் நடந்த நாடாளுமன்ற, தமிழ் நாடு சட்டசபைத் தேர்தல்களைக் கலைஞர் நினைவூட்டினார்.

1980 இல் தி. மு. க வுடன் கூட்டு வைத்து இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டது! அமோக வெற்றியீட்டியது.

உடனே எம். ஜி. ஆர் தலைமையிலான அ. தி. மு. க. மாநில அரசு கலைக்கப்பட்டது. சட்டசபைத் தேர்தலிலும் இந்திரா காங்கிரஸ் - தி. மு. க. கூட்டு போட்டியிட்டது. ஆனால் தோல்வி அடைந்தது. எம். ஜி. ஆர். தலைமையிலான அ. தி. மு. க. அமோக வெற்றி பெற்று அரசு அமைத்தது.

அந்த நிலை! இம்முறை இந்திரா காங்கிரஸ், ஜெயலலிதா அணியுடன் கூட்டு அமைத்துப் போட்டியிட்டிருந்தால் ஏற்பட்டிருக்காதா?

—இப்படிக் கலைஞர் கேட்டிருக்கிறார்.

ஆகவே மாநிலத்தில் கூட்டணி ஆட்சி அமைவதைத் தமிழக மக்கள் என்றுமே ஆதரிக்கவில்லை என்பது கலைஞரின் வாதம். ★



கருணாநிதி

## கலைஞரின் சொல் 'வலி'

ஒரு தலைவரின் பிறந்த நாள் விழாவில் வாழ்த்துரை வழங்க கலைஞர் கருணாநிதி மற்றும் பலர் வந்திருந்தனர்.

ஒரு பத்திரிகை ஆசிரியர் வாழ்த்துரை வழங்கிப் பேசும் போது 'இதோ, இங்கே விழா காணும் தலைவர் உண்மையிலேயே ஒரு தலைவனுக்குரிய திடகாத்திரமான உடல்வாகு கொண்டவர்: சில தலைவர்களைப் போல தோள்வலி, கழுத்துவலி, கைவலி என்று மருத்துவமனையிற் போய்ப் படுத்துக் கொள்பவர் அல்ல' என்று பேசினர்.

அவ்வளவு தான்! விழா மண்டபத்தில் கூடி இருந்தவர்கள் 'பேச்சை நிறுத்து... அண்ணாவைப்பழிக்காதே' என்று கூச்சலிட ஆரம்பித்தார்கள்.

காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் சிறைத் தண்டனைப் பட்டிருந்த அறிஞர் அண்ணா தோளில் ஏற்பட்ட வலி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அனைவரையும் சமாதானம் அடையச் செய்யவும் கலைஞர் விரும்பினர்.

கலைஞர் கூறியதாவது;

'அன்பர்களே...! 'தோள் வலி, கழுத்துவலி, கைவலி' என்று நண்பர் பேசியதை நீங்கள் தவறாக எடுத்துக் கொண்டீர்கள்! கரிகால் பெருவளத்தானையும், கடல் கடந்த சோழனையும், இமயவரம்பனையும், இணையிலா பாண்டியனையும் தோள்வலி மிக்கவர்கள், கழுத்துவலி, கைவலி கொண்டவர்கள் என்று போற்றுவதுண்டு...

'வலி' என்றால் தமிழிலே 'வேதனை' என்ற பொருள் மட்டுமல்ல, 'வலிமை' என்ற பொருளும் இருக்கின்றது. எனவே நண்பர் 'வலிமை' என்ற அர்த்தத்திலேயே பாராட்டிப் பேசினர் என்று எடுத்துக்கொள்ள வேண்டுகின்றேன்!'

என்று கலைஞர் அழகாக விளக்கம் அளித்ததும் கூட்டத்தில் அமைதி மீண்டது!★

## எம். ஜி. ஆரின் இலட்சியம் தி. மு. க. வின் வெற்றியே!

### வீரப்பன் கருத்து

தி. மு. க. வின் வெற்றியால் எம். ஜி. ஆர். இலட்சியம் நிறைவேறிவிட்டது என்று முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் கூறினார்.

கடந்த 21 ஆம் திகதி நடந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் புதுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டார் இத்தொகுதியில வெற்றிபெற்ற தி. மு க. வேட்பாளரைவிட 8 707 வாக்குகள் குறைவாகப் பெற்று தோல்வி அடைந்தார்.

ஆர். எம். வீரப்பனுக்கு 4 ஆவது இடமேகிடைத்தது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் புதுக்கோட்டையில் ஆர் எம் வீரப்பன் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் கூறியதாவது:—

தமிழகத்தின் மாபெரும் கட்சியாக அ தி மு க. விளங்கியது. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். மறைவிற்குப் பிறகு ஒரு புதிய சூழ்நிலை தோன்றப் போகிறது. தமிழகத்தில் திராவிட இயக்கம் தான் ஆட்சி நடத்த வேண்டுமென எம். ஜி ஆர். ஒருமுறை சட்ட மன்றத்தில் கூறினார்.

அவரின் இலட்சியம் நிறைவேறிவிட்டது.

அரசியல் குழப்பம் இன்றி தெளிவான தீர்ப்பு அளிக்கும் தமிழகம் என்பது வரலாறு. இப்பொழுது மீண்டும் அதை தமிழக மக்கள் தெரிவித்து விட்டார்கள்.

தோல்வி பற்றிக் கவலை இல்லை. என்னுடைய தோல்வியைப் பற்றியோ நான் சார்ந்துள்ள அணியின் தோல்வி பற்றியோ நான் கவலைப்படவில்லை.

இந்தத் தேர்தலில் நான் போட்டியிட்டது அரசியல் வாழ்வின் கடமையை நிறைவேற்றத்தான். இல்லையென்றால் ஒதுங்கியிருப்பேன்.

ஆனால் அது சுத்த வீரனுக்கு அழகு அல்ல என்பதால்தான் தேர்தல் களத்தில் குதித்தேன்.

அண்ணாவும், எம் ஜி. ஆரும் எடுத்த இலட்சியம் தொடர்ந்து பயணம் நடத்தப் போகிறது. அதை யாரும் தடுக்க முடியாது என்பது தமிழக மக்களின் தீர்ப்பு.

இவ்வாறு தனது அறிக்கையில் ஆர். எம். வீரப்பன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேர்தல் முடிவுகள் வெளிவந்து தி. மு க. அறுதிப் பெரும்பான்மை பெற்றதை அடுத்து புதுக்கோட்டையில் இருந்து கருணாநிதிக்கு டெலிபோன் மூலம் வாழ்த்துத் தெரிவித்தார். ★

## ஜானகி அம்மாளின் அரசியல் வனவாசம்

'தோல்வியைக் கண்டு துவண்டு விட வேண்டாம்' என்று தனது கட்சித் தொண்டர்களை அ. தி. மு. க. (ஜா) தலைவர் ஜானகி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜானகி அம்மாள் இரண்டு அறிக்கைகள் வெளியிட்டார். அவற்றில் கூறி இருந்ததாவது:

தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக்கு தலை வணங்குகின்றேன்.

எம். ஜி. ஆரின் கனவை நனவாக்கவும், அவர் விட்டுச் சென்ற பணிகளையும் நிறைவேற்றவும் தொடர்ந்து பணியாற்றுவேன். அண்ணா சொன்னதுபோல் எதையும் தாங்கும் இதயத்தோடு அ. தி. மு. க. வுக்காகப் பாடுபடுவேன்.

தோல்வியைக் கண்டு அ. தி. மு. க. தொண்டர்கள் துவண்டு விடக் கூடாது. தோல்வியே வெற்றிக்கு அறிகுறி என்பதை உணர்ந்து கட்சிப்பணியாற்ற வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றேன். கட்சியைப் பலப்படுத்த உங்கள் தாயின் பயணம் தொடர்ந்து நடக்கும்.

இவ்வாறு ஜானகி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

கடைசியாக விடுத்த மூன்றாவது அறிக்கையில் 'அரசியல் வனவாசம்' போவதாக ஜானகி அறிவித்து விட்டார். ★

## காங்கிரஸ் தோல்விக்கு தியாகம் செய்த சிவாஜி

'காங்கிரஸ் வரக்கூடாது என்பதற்காக எங்கள் இயக்கம் தியாகம் செய்துள்ளது. மக்கள் நம்பிக்கையைப் பெற தொடர்ந்து உழைப்போம்' என்று தமிழர் முன்னேற்ற முன்னணித் தலைவர் சிவாஜி கணேசன் கூறியுள்ளார்.

இது குறித்து ஓர் அறிக்கையில் சிவாஜி கணேசன் கூறியுள்ளதாவது:

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி வரக்கூடாது என மக்களிடம் பிரசாரம் செய்தேன். அதற்கு மக்கள் செவிசாய்த்துள்ளனர். அந்த இலட்சியத்துக்காக எங்களது இயக்கம் தியாகம் செய்திருக்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் சிவாஜி கணேசன் கூறியுள்ளார். ★


கருடனுடன் சேர்ந்து பறந்திடுவீர்...



ஒரு புதிய சகாப்தத்தினுள்
ஒரு உன்னதமான அனுபவம்
இந்த 41-வது சுதந்திர
தினத்தில் நாம் தேசத்தோடு
சேர்ந்து சிறகடித்திடுவோம்.

காப்புறுதியில் ஒரு புதிய
வாக்குறுதியுடன் எங்கள்
வாழ்த்துக்களும் நல் ஆசிகளும்

உங்களைக் காப்பதில் என்றும்
கண்ணாய் இருப்போம்

சீ.ரீ.சீ ஈகிள்
இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறந்தமுறையில் மங்கள வைபவங்களை
வீடியோ படம் பிடிக்க
லக்ஷ்மி வீடியோ மூவி
80, கனகரத்தினம் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி சஞ்சிகை

Stereo முறையில் புதிய, பழைய
சினிமாப்பாடல்கள், பக்திப்பாடல்கள்
பதிவு செய்துகொள்ள
லக்ஷ்மி வீடியோ மூவி
80, கனகரத்தினம் வீதி, அரியாலை,
: யாழ்ப்பாணம்.

04 - 02 - 1989 சனிக்கிழமை

# ஆப்கனில் பெப்:15க்குப் பின் இரத்தக்களரியைத் தடுக்க

# இறுதிநேர ராஜதந்திர முயற்சிகள்

## கிளர்ச்சிப் படைகள்-ஆப்கன் அரசுப் படைகள் பெரும் மோதலுக்குத் தயாராகின்றன

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புக்கள் வாபஸ் பெறுவதற்கு இன்னும் 11 நாட்கள்மட்டுமே இருக்கின்றன.

சோவியத் துருப்புக்கள் வாபஸான பின்பு தற்போது பதவியில் இருந்து வரும் சோவியத் ஆதரவு அரசாங்கமும் இந்த அரசாங்கத்துக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச்சிப்பிரிவுகளும்இணைந்து கூட்டரசு ஒன்றை அமைக்கும் முயற்சிகள் முற்றாகத்தோல்வி அடைந்திருக்கின்றன.

இதனால் ஆப்கன் பிரச்சினை இன்னும் இராணுவத்தீர்வை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது.

கடந்த 9 ஆண்டு காலமாக அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு ஆப்கானிஸ்தானில் தங்கி இருந்த சுமார் 1 லட்சத்து 15 ஆயிரம் சோவியத் துருப்புக்களில் ஏற்கனவே அரைப்பங்கினருக்கு மேல் கட்டம் கட்டமாக வாபஸாகி விட்டனர்.

### ஜெனிவா ஒப்பந்தம்

1988 ஏப்ரல் மாதம் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் ஜெனிவாவில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தப் பிரகாரம் 1988 மே 15 ஆம் திகதி சோவியத் துருப்புக்களின் படை விலகல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 1989 பெப்ரவரி 15 ஆம் திகதியுடன் முற்றுப் பெற வேண்டும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதற்கு இணங்கக் குறிப்பிட்ட காலத்தில் படை விலகல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தொடக்கத்தில் சில தாமதங்கள் இருந்தன.

எனினும் குறிப்பிட்ட காலமான 1989 பெப்ரவரி 15க்குள் முழுப்படைகளையும் வாபஸ் செய்யும் நடவடிக்கைகள் தற்போது கச்சிதமாக நடைபெற்று வருகின்றன. ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் செய்வதில் சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் உறுதியாக இருந்து வருகிறார்.

ஒபபந்தத்தின் பிரகாரம் படைவிலகலைப் பூர்த்திசெய்ய வேண்டிய கட்டாய நிலையில் சோவியத் அதிபர் இருந்து வருகிறார். இப்பிரச்சினை தொடர்பாக வெளிநாடுகளில் மட்டும் அன்றி உள்நாட்டிலும் அவர் நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கிறார்.

### அடுத்து என்ன?

பெப்ரவரி 15 ஆம் திகதி சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து முற்றாக வாபஸானதும் அடுத்தது என்ன? என்பதே இன்று எழும் கேள்வி ஆகும்.

தனது படைகள் வாபஸானதும் தற்போது பதவியில் இருக்கும் நஜிபுல்லா (Najibullah) அரசும் கிளர்ச்சிக்காரர்களும் இணைந்து கூட்டரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று சோவியத் யூனியன் விரும்பியது.

சோவியத் யூனியனின் பிரதி வெளிவிவகார அமைச்சர் யூலி வொரொன்சோவ் (Yulivorontsov) இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

கிளர்ச்சித் தலைவர்களை அவர் கடந்த டிசம்பர் முற்பகுதியில் சவூதி அரேபியாவில் சந்தித்துப் பேச்சு நடத்தி இருந்தார். பின்பு கிறிஸ்மஸ் தினத்தில் ரோமாபுரிக்கு வந்து ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் ஸாஹிர் ஷாவை (Zahir Shah) சந்தித்தார்.

75 வயதான ஸாஹிர் ஷா 1973 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற புரட்சியின்போது பதவி கவிழ்க்கப்பட்டவர். ரோமாபுரியில் அவர் அஞ்ஞாதவாசம் புரிந்து வருகிறார்.

வியட்நாம் சமாதானப் பேச்சுவார்த்தையின்போது தென் வியட்நாமில் பதவியில் இருந்த நூயன் வான் தியூ அரசாங்கம் தொடர்ந்து உயிர் வாழக்கூடிய சமரசத்திட்டம் ஒன்றையே அப்போதைய நிக்ஸன் நிர்வாகம் மேற்கொண்டது. இறுதியில் அது தோல்வியிலேயே முடிவடைந்தது.

தற்போதைய கிரெம்ளின் நிர்வாகமும் இதே பாணியிலேயே நஜிபுல்லா அரசைப் பதவியில் தொடர்ந்து வைத்திருக்க தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தது.

கூட்டரசு யோசனை இதனையே அடிப்படையாகக் கொண்டிருந்தது.

இந்த முயற்சி படுதோல்வியில் முடிவடைந்த போதிலும் சோவியத் யூனியன் தனது படை வாபஸ் நடவடிக்கைகளை திட்டமிட்டபடி நிறைவேற்றி வருகிறது.

அதே சமயம் நஜிபுல்லா அரசாங்கத்துக்கு அது சக்திமிக்க ஆயுதங்களைப் பெரும் அளவில் வழங்கியுள்ளது. B T R. 70 கவசவாகனங்கள் B M 22 ரொக்கெட் லோஞ்சர்களும் இவற்றில் அடங்கும்.

### வீழ்ச்சியைத் தடுக்கமுடியாது

எவ்வளவு ஆயுதங்களை சோவியத் யூனியன் வழங்கி உள்ள போதிலும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்குப் பின்னர் சோவியத் ஆதரவு நஜிபுல்லா அரசு வீழ்ந்து விடும் என்றே பெரும்பாலான அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.


### 30 ஆயிரம் சோவியத் வீரர் பலி

கடந்த 9 ஆண்டுகளாக சோவியத் படைகளை எதிர்த்துப் போராடிவரும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆப்கான் படைகளைத் தனியே எதிர்ப்பது கஷ்டமான காரியம் அல்ல.

எவ்வளவு கனரக ஆயுதங்கள் உள்ள போதிலும் ஆப்கன் படை வீரர்களிடையே மனோவலிமை குன்றி இருப்பதும் இதற்குக் காரணம்.

ஒன்பது வருடச் சண்டையில் ஏற்கனவே 30 ஆயிரம் சோவியத் துருப்புக்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. சண்டையில் சிக்குண்டு இறந்த ஆப்கானிஸ்தானியர்களின் எண்ணிக்கை மட்டும் 10 லட்சம்.

பத்து வருடகாலம் நடைபெற்ற வியட்நாம் யுத்தத்தில் இறந்தோர் எண்ணிக்கையும் இதே அளவே.




1975 ஆம் ஆண்டு முடிவடைந்த வியட்நாம் யுத்தம் அப்போதைய அமெரிக்க குடியரசுக் கட்சி ஜனாதிபதி றிச்சர்ட் நிக்ஸனின் வீழ்ச்சிக்கு வழி கோலியது.

### இஸ்லாமிய கவுன்ஸில்

பெப்ரவரி 15 நெருங்குவதால் தற்போது பல்வேறு கோணங்களில் ஆப்கன் பிரச்சினை தொடர்பாக நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

ஒன்று இடைக்கால அரசு ஏற்படுத்துவதற்கு முன்னோடியான இஸ்லாமிய கவுன்ஸில் ஒன்றை ஏற்படுத்துவது:

480 பேரை உள்ளடக்கியதாக இந்த இஸ்லாமிய கவுன்ஸில் அமையும்.

இதில் 420 பிரதிநிதித்துவம் தனக்கு வழங்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தானின் பெஷாவார் நகரில் இயங்கும் சுனி முஜாஹெதீன் (Sunny Mujahedeen) இயக்கம் கோரி வருகிறது. சுனி முஜாஹெதீன் இயக்கத்தில் ஏழு கிளர்ச்சிக் குழுக்கள் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு கிளர்ச்சிக் குழுவுக்கும் தலா 60 பிரதிநிதித்துவத்தை சுனி முஜாஹெதீன் இயக்கம் கோருகிறது.

ஒன்பது வருடப் போரில் சுனி முஜாஹெதீன் இயக்கமே முக்கிய பங்கேற்று வந்தது.

இதற்கு அமெரிக்காவும் பாகிஸ்தானும் பெரும் அளவு ஆயுத உதவிகளை வழங்கி வந்தன. ஆப்கான் எல்லையில் உள்ள பாகிஸ்தானின் பெஷாவார் மாகாணத்தில் இதன் தலைமையகம் அமைந்துள்ளது.

யுத்தம் காரணமாக ஆப்கனிஸ்தானில் இருந்து வெளியேறி பெஷாவாரில் தஞ்சம் புகுந்துள்ள ஆப்கான் பிரஜைகளின் எண்ணிக்கை மட்டும் சுமார் 20 லட்சம்.

480 பேர் கொண்ட கவுன்ஸிலில் மிகுதி 60 பிரதிநிதித்துவத்தை மட்டும் ஷியா முஜாஹிதீன் (Shite Mujahedeen) பிரிவினருக்கு வழங்க சுனி முஜாஹெதீன் பிரிவினர் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானின் மற்றொரு எல்லை நாடான ஈரானில் இருந்து கொண்டு ஷியா முஜாஹெதீன் இயக்கத்தினர் ஆப்கானிஸ்தானில் போராடி வருகின்றனர்.

ஷியா முஜாஹிதீன் தனக்கு 120 ஆசனங்கள் வேண்டும் என்று வலியுறுத்திவருகிறது.

ஈரானின் பெரும்பான்மை மக்கள் ஷியா முஸ்லிம்கள். ஷா மன்னர் பதவி கவிழ்க்கப்பட்டதற்கும் மதத்தலைவர் ஆயத்துல்லா கொமேனியின் எழுச்சிக்கும் வைதீய மதக் கோட்பாளர்களான ஷியா முஸ்லிம்களின் எழுச்சியே காரணமாக இருந்தது.

சோவியத் துருப்புக்களும் ஆப்கன் கம்யூனிஸ்ட் ஆதரவு அரசுக்கும் எதிராக ஒன்றுபட்டுப் போராடிய சுனிமுஜாஹெதீன் இயக்கமும் ஷியா முஜாஹிதீன் இயக்கமும் பிரதிநிதித்துவம் தொடர்பாகத் தற்போது பிளவுபட்டுநிற்கின்றன.

### இடைக்கால அரசு வருமா?

இந்த கவுன்ஸிலின் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி பெஷாவாரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரதிநிதித்துவம் தொடர்பாக இழுபறிகள் இருப்பதால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி கவுன்ஸில் கூடுமா? அது கூடுவதற்குத் தவறுமேயானால் 15 ஆம் திகதிக்குப் பின்னர் என்ன நடக்கும்? என்பன எல்லாம் இன்று கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றன. இந்தக் கவுன்ஸில் கூட்டப்பட்டால் மட்டுமே இடைக்கால அரசு அமைக்கப்படும்.

கவுன்ஸிலில் ஆகக்குறைந்த பிரதிநிதித்துவத்தையாவது நஜிபுல்லாவின் ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு (People Democratic Party) ஒதுக்கு மாறுவிடுக்கப்பட்ட வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

9 ஆண்டுகாலமாக பொது மக்களைப் படுகொலைசெய்தவர்களுக்கு கவுன்ஸிலில் இடம் அளிக்கக்கூடாது என்பதில் கிளர்ச்சிப்பிரிவுகளில் உள்ள வைதீய மதக்கோட்பாட்டாளர்கள் தீவிரமாக இருந்து வருகின்றனர். ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் ஸாஹிர்ஷா கவுன்ஸிலில் இடம் பெறுவதையும் இவர்கள் வன்மையாக எதிர்க்கின்றனர்.

### ராஜதந்திர நடவடிக்கைகள்

கவுன்ஸில் — இடைக்கால அரசு ஆகியவை தொடர்பாக கிளர்ச்சிப்பிரிவுகள் சுறுசுறுப்பாக இயங்கிவரும் அதேசமயம் ஆப்கானிஸ்தானுக்கு வெளியிலும் ராஜதந்திர நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

பாகிஸ்தான், ஈரான், சோவியத்யூனியன், சவூதிஅரேபியா ஆகியநாடுகள் ஒன்றுடன் ஒன்று இடைவிடாது தொடர்பு கொண்டு இறுதி நேரமுயற்சியில் ஈடுபட்டுவருகின்றன.

பெப்ரவரி 15 ஆம் திகதிக்கும் பின்னர் இரத்தக்களரியைத் தவிர்ப்பதே இந்தநாடுகளின் பிரதான நோக்கம்: சோவியத் வெளிவிவகார அமைச்சர் ஷெவநாட்சே (Shevardnadze) ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அலி வெலேயாதி (Ali Velayathi) ஆகியோர் பாகிஸ்தான் விஜயம் செய்துள்ளனர். பாக் வெளிவிவகார அமைச்சர் சவூதி அரேபியாவுக்குச் செல்கிறார். ஐ. நா. சமாதானத் தூதுவர் பெனன் செவன் (Benan Sevan) காபூலுக்கும் இஸ்லாமபாத்துக்கும் இடையில் "மரதன்" ஓட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

சோவியத் யூனியனின் பாதுகாப்பு அமைச்சரும் சோவியத் திட்டக்கமிஷன் தலைவரும் தனித் தனியே ஆப்கானிஸ்தான்வந்து திரும்பியுள்ளனர்.

அமைக்கப்படவுள்ள இஸ்லாமியகவுன்ஸிலிலும் இடைக்கால அரசிலும் நஜிபுல்லாவின் மக்கள் ஜனநாயகக்கட்சி புறக்கணிக்கம்பட்டு அரசியல் தீர்வுச் சாத்தியங்கள் முற்றாக அற்றுப்போய்விட்டதால் பெப்ரவரி 15 க்குப் பின்னர் நஜிபுல்லா அரசைப் பாதுகாக்க சோவியத் யூனியன் ஏதாவதுநடவடிக்கை ஒன்றை மேற கொள்ளலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

### சாலாங் நெடுஞ்சாலை

சோவியத்யூனியனையும் ஆப்கானிஸ்தானையும் இணைக்கும் சாலாங் நெடுஞ்சாலையின் (SalangHighway) பிரதான பகுதிகள் ஏற்கெனவே கிளர்ச்சிக்காரர்கள் வசம் இருந்து வருகின்றன.

இதேவழியாகவே 1979டிசம்பர் மாதம் சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்தன. தற்போது இதே வழியாக அவை வெளியேறி வருகின்றன.

260 மைல் நீளமுள்ள இந்தப்பாதையில் கிளர்ச்சியாளர்கள் நடத்திவரும் தாக்குதல்கள் காரணமாக சோவியத் யூனியனிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு வரும் சப்ளைகள்– உணவுப்பொருள்கள் தடைப்பட்டுள்ளன.

தலைநகர் காபூலில் பெரும் உணவுத்தட்டுப்பாடும் பட்டினி மரண அபாயமும் நிலவுவதற்கு இதுவே காரணம்.

கடும்பனி, பட்டினி ஆகியவற்றால் காபூலின் 22 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் காபூலில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் பெரும்பாலும் மூடப்பட்டு விட்டன. பாதுகாப்புக்கருதி ராஜதந்திரிகள் வெளியேறி விட்டனர்.

### படையெடுப்பின் உள்நோக்கம்?

ஹபிஸுல்லா அமின் என்ற கம்யூனிஸ்ட் ஆதரவுத்தலைவரைப் பதவி நீக்கம் செய்து விட்டு மற்றும் ஒரு கம்யூனிஸ்டான பாபரக் கர்மாலை (Babrak Karmal) பதவியில் அமர்த்தவே 1979 இல் ஆப்கனுக்குள் சோவியத் படை எடுப்பு இடம் பெற்றது.

1924 இல் லெனின் மரணம் அடைந்த நாளில் இருந்து 1953 வரை சோவியத் யூனியனில் அதிகாரத்தில் இருந்த ஜோசப் ஸ்ராலின் மேற்கு நாடுகளுக்கு எதிராக சோவியத் யூனியனில் 'இரும்புத் திரை' யை உருவாக்கினார்.

இதே பாணியிலேயே லியோனிட் பிரெஷ்னேவும் ஈரானிய இஸ்லாமிய எழுச்சிக்கு எதிராக ஒரு பாதுகாப்பு வலயத்தை இப்படை எடுப்பு மூலம் உருவாக்குகிறார் என்று அப்போது கருதப்பட்டது.

1982 ஆம் ஆண்டு முதல் தடவையாக சமரசப் பேச்சுக்கள் தொடங்கப்பட்டன.

1985 இல் மிக்கெய்ல் கோர்பச்சேவ் சோவியத் யூனியன் அதிபராகப் பதவி ஏற்று ஒரு வருட காலத்தில் சோவியத் படைகள் ஆப்கன் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் பெரும் தாக்குதலைத் தொடங்கின.

றேகன் நிர்வாகம் இதற்கு எதிராகக் கிளர்ச்சியாளர்களுக்கு நவீன ஆயுதங்களையும் விமானங்களைச் சுடும் ஏவுகணைகளையும் வழங்கியது.

கடந்த வருடம் மட்டும் 270 சோவியத் விமானங்கள் வரை கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தன:

இந்த நிலையிலேயே கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜெனிவாவில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

தற்போது சமரசம் உருவாகி உள்ள தென்கிழக்காசியாவில் காம்பூச்சியாவிலும் ஆபிரிக்காவில் அங்கோலாவிலும்; லத்தீன் அமெரிக்காவில் நிக்கரகுவாவிலும் சோவியத் அரசினால் ஏற்படுத்தப்பட்ட அல்லது சோவியத் அரசின் தயவில் உள்ள அரசுகளே நிலைத்து வருகின்றன.

'குருதி வடியும் ரணம், என்று சோவியத் அதிபரால் வர்ணிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சோவியத் யூனியனுக்குத் தாக்கம் ஏற்பட்டாலும் அது பெரிய தாக்கமாக இருக்கமாட்டாது என்றே கருதப்படுகிறது ★

## உலக உலா

எஸ்.பி.சீலன்

தாய் நாட்டில்
ஒற்றுமையும் சமாதானமும் ஓங்க
இந்த நன்னாளில்
இணைந்து கரம் சேர்ப்போம்!
லங்கா மில்க் ஃபுட்ஸ்
(சீ. டபுள்யூ. ஈ.) லிமிட்டெட்
வெலிசறை
முகமம்.

## பொது அறிவுப் போட்டி இல: 18

### பரிசு பெறுபவர்கள் விவரம்;

1 ஆவது பரிசு பெறுபவர்:
ப.சற்சொரூபி,
மே/பா. சி. பரம்சோதி. இல-743, யோகபுரம்.

2 ஆவது பரிசுபெறுபவர்:
வீ. கே. செல்லத்துரை,
உள்ளக கணக்காய்வுப் பகுதி,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

3 ஆவது பரிசுபெறுபவர்:
திருமதி அ. குருநாதன்,
290, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

பொது அறிவுப் போட்டி 18 சரியான விடைகள்:

1. புறு, 2. கலண்டர், 3. தாமரை, 4: ரோஜா, 5. சிதை; 6. காடு, 7. ஆசை, 8. பானை, 9. நீர், 10. கயிறு, 11. மஞ்சள்; 12. காகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org